இந்திய பொருளாதாரம்

பொருளாதாரம்

- இந்தியப் பொருளாதாரமானது வளரும் பொருளாதாரம் (இரண்டாம் நிலை பொருளாதாரம்) என அழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் பொருளாராரம் விவசாயத்தை முதுகெலும்பாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் விவசாயம் பருவக் காற்றின் சூதாட்டம் என அழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் பொருளாதாரம் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான காரணங்கள்,

1. மக்கள் தொகை பெருக்கம்
2. குறைவான தலாவருமானம்
3. வறுமை
4. வேலைவாய்ப்பின்மை

- ❖ இந்திய தேசிய வருமானத்தை மத்திய புள்ளியல் நிறுவனம் (Indian statistical organization) கணக்கீடு செய்கிறது.
- ❖ ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Bank)1966ல் ஆசிய நாடுகளின் தோழில் மற்றும் முதலீட்டு வளர்ச்சிக்கு ஏற்படுத்தப்பட்டது.
- ❖ டிவிடென்ட் (Divided) பங்குள் வாங்கிய பங்குதாரர்கள் பெறும் இலாபத் தொகை ஆகும்.
- ❖ தேசிய தொழில் வளர்ச்சி கழகம்(NSIC) 1955 ல் தொடங்கப்பட்டது.
- ❖ தமிழ்நாட்டில் முதன் முதலாக விவசாயிகளை இடைத்தரகர்களிடமிருந்து பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பு உழவர் சந்தையாகும். இது 14-11-1999 முதலில் மதுரையில் உள்ள அண்ணா நகரில் தொடங்கப்பட்டது.
- ❖ ஒரு ரூபாய் நோட்டு தவிர மற்ற அனைத்து நோட்டுகளையும் வெளியிடுவது ரிசர்வ் வங்கியாகும்.
- ❖ ஒரு ரூபாய் நோட்டை வெளியிடுவது மத்திய நிதியமைச்சகம். இதில் நிதித் துறை செயலரின் கையொப்பம் இருக்கும்.
- ❖ ரிசர்வ் வங்கியின் இரண்டாவதுஅட்டவணையில் சேர்க்கப்பட்ட வங்கிகள் ஷெட்யூல்டு வங்கிகள் எனப்படும்.
- ❖ விலைவாசி ஏற்றத்தினால் பலன் பெறுபவர்கள் கடன் (Debtors)வாங்கியவர்கள் ஆவார்.
- ❖ விலைவாசி குறைவதனால் பலன் பெறுபவர்கள் கடன் (Creditors) கொடுத்தவர்கள் ஆவார்.

NATRAJ INSTITUTE OF TNPSC

தேசிய வருமானம்

<u>தேசிய வருமானம் கணக்கீடு முறை:</u>

1. உற்பத்தி முறை
2. வருமான முறை
3. செலவுமுறை என்ற மூன்று முறைகளில் கணக்கிடப்படுகிறது.

<u>தேசிய வருமானம் கணக்கிடுதலின் இன்றியமையாமை:</u>

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிடவும், பிற நாடுகளுடன் ஒப்பிடவும் உதவுகிறது.
2. திட்டமிட உதவகிறது.
3. பல்வேறு துறைகளின் நிலையைப் பற்றி அறிய உதவுகிது.
4. வாழ்க்கைத் தரத்தை அளவிட உதவுகிறது.

தேசிய வருமானம் (**National Income)**

தேசிய வருமானம் என்பது Factor Pavant Total (அ) Final Product Total அல்லது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், பணிகள் இவற்றின்மொத்த பண மதிப்பாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி(**Gross Domestic product**):

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டில், ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் பணமதிப்பாகும்).

நிகர உள்நாட்டு உற்பத்தி (**Net domestic product**):

மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தை கழித்தால் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

NDP=GDP-தேய்மானம்

மொத்த தேசிய உற்பத்தி (**Gross National product**):

1. மொத்த தேசிய உற்பத்தி என்பது ஒரு நாட்டில் , ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் அளவாகும்.
2. இதில் வெளிநாட்டிலுள்ள நம்நாட்டு கம்பெணிகள் ஈட்டிய இலாபத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.
3. அதேபோல, நம் நாட்டிலுள்ள வெளிநாட்டு கம்பெனிகள் ஈட்டிய இலாபத்தை கழித்து விட வேண்டும்.

NDP = GDP+ வெளிநாட்டு , உள்நாட்டு நிகர காரணி

நிகரதேசிய உற்பத்தி (**Net National Product**):

மொத்த (NGP) தேசிய உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் கழித்தால் கிடைப்பது நிகர தேசிய (NNP) உற்பத்தி ஆகும். தேசிய வருமானம் என்பதும் இதுவே ஆகும்.

NNP = GNP- Depreciation

தனிநபர் வருமானம் (**Personal Income)**

தனிநபர்கள் ஓராண்டில் பெறுகின்ற வருமானமே தனிநபர் வருமானமாகும்.

தலா வருமானம் (**Personal Income):**

தலா வருமானம் என்பது நாட்டின் தேசிய வருமானத்தை நாட்டின் மொத்த மக்கள்தொகையால் வகுத்தால் கிடைப்பதாகும். அதாவது,

தலாவருமானம் = தேசிய வருமானம்/மக்கள் தொகை

<u>நாட்டு வருமான வரிசைகள்</u>:

1. மரபு வரிசை
2. திருத்தியமைக்கப்பட்ட வரிசை
3. புதிய வரிசைகள்
4. அண்மைக்கால வரிசைகள் 1981 ம் ஆண்டு அடிப்படையில் C.S.O செயல்படுகிறது.

❖ நதியாண்டு ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை எடுத்துக்கொள்ளப்படும்.

<u>நாட்டு வருமானம் கணக்கிடுவதில் உள்ள குறைகள்:</u>

1. புள்ளி விவரம் சரியாகக் கிடைக்கப்பெறாமை.
2. இரு முறை கணக்கிடல்.
3. மக்களிடம் கணக்கு வைக்கும் பழக்கமின்மை.

NATRAJ INSTITUTE OF TNPSC

திட்டம்

❖ 1934 ல் இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதாரம் என்ற நூலை ஸ்ரீ எம்.விஸ்வேஸ்வரய்யா எழுதினார். இதுவே இந்தியாவின் திட்டமிடுதலுக்கு உருவான முதல் முயற்சியாகும்.

❖ பாம்பே திட்டம் மும்பையில் 1943 ல் எட்டு தொழில் அதிபர்கள் சேர்ந்து, இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை தீட்டினர். இதுவே பாம்பே திட்டம் ஆகும்.

❖ காந்திய திட்டத்தை வகுத்தவர் ஸ்ரீமான் நராயணன்.

❖ மக்கள் திட்டத்தை வகுத்தவர் எம்.என் ராய்.

❖ இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு திட்டகுழு (1950) உருவானது. இது பாராளுமன்ற சட்டத்தால் உருவானது.

❖ திட்டக்கமிஷன் ஒரு தலைவர், ஒரு துணைத்தலைவர் மற்றும் 7 உறுப்பினர்களைக் கொண்டது.

1வது திட்டம் - 1951-56 ☐
விவசாயத்தை (நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரம்) பெருக்குதல்

2வது திட்டம் - 1951-61 ☐
பெருந்தொழில்கள் மற்றும் கனரகத் தொழில்கள் வளர்ச்சி,
வேலைவாய்ப்பை பெருக்குதல்,
சமச்சீரான பொருளாதார வளர்ச்சி.

3வது திட்டம் - 1961 -1966 ☐

வளர்ச்சி என்ற நிலையை அடைதல்,
தொழில் மற்றும் வேளாண்மைக்கு முக்கியத்துவம் ( குறிப்பாக அடிப்படைத்தொழில்கள்)

மூன்றாண்டுத் திட்டம் - 1966-67 ஓராண்டு திட்டங்கள்.
1967-68 (பசுமை புரட்சிக்கு வித்திட்டது).

4வது திட்டம் - 1969-74 நிலையான வளர்ச்சி மற்றும் சார்பு (Growth, Stability & Selfreliance).

5வது திட்டம் - 1974-1979 “ஏழ்மையை விரட்டுதல்” (Karibi Hattao)
கிராமத்தில் அடிப்படை கட்டமைப்பு உருவாக்குதல்,
சமச்சீரானபொருளாதார வளர்ச்சி,
வேலைவாய்ப்பு.

ஆண்டுத் திட்டம் - 1979-1980 அரசியல் நிலையின்மை காரணமாக திட்டம் எதுவுமில்லை.

6வதுதிட்டம் -1980-85
வறுமை ஒழிப்பு வேலைவாய்ப்பு உருவாக்குதல்
பொருளாதாரத் தற்சார்பு, குறைந்தபட்ச தேவை திட்டம் (MNP)

7வது திட்டம்- 1985-90
நவீனமயமாக்குதல், தற்சார்பு, வேலைவாய்ப்பு மற்றும் சமூகநீதி.

ஆண்டுத் திட்டம் 1990-91 அரசியல் நிலையின்மை காரணமாக திட்டம் 1991-92 எதுவுமில்லை.

8வது திட்டம்- 1992-97
முழுவேலைவாய்ப்பை உருவாக்குதல்,
மக்கள் தொகையை கட்டுப்படுத்துதல்,
கல்லாமையை நீக்குதல்,
உணவுப்பொருளில் தன்னிறைவு பெற்று ஏற்றுமதி செய்யுமளவிற்கு உபரியை உண்டாக்குதல்.

9வது திட்டம் 1997-2002
உற்பத்தி துறைகளில்
வேலைவாய்ப்பை உருவாக்கி, வறுமையை ஒழித்தல்,
வளர்ச்சி வீதத்தை அதிகப்படத்துதல்,
அடிப்படைத் தேவைகளை அனைவருக்கும் வழங்குதல்,
மக்கள் தொகையை கட்டப்படுத்துதல் (Market Economy)

10வது திட்டம் 2002-2007
ஏழ்மை ஒழிப்பு,
கல்வியறிவில் வேறுபாட்டை களைதல்,
மக்கள் தொகை வளர்ச்சியை குறைத்தல்,
கிராம வளர்ச்சி.

NATRAJ INSTITUTE OF TNPSC

10வது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

1. 2007ம் ஆண்டுக்குள் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ‘வேளாண் அறிவியல் மையங்கள்’ அமைக்கப்படும்.
2. விவசாயம், பாசனம், கல்வி, சுகாதாரம். வேலைவாய்ப்பு, நகர்புற மேம்பாடு , கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் வளர்ச்சி ஆய்வு செய்யப்பட்டு, புதிய திட்டங்கள் தீட்டப்படும்.
3. ஒரு கோடி ஹெக்டேர் தரிசு நிலம் பாசன நிலமாக மாற்றப்படும்.
4. இரண்டரைக் கோடி வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.
5. அனைத்து கிராமங்களுக்கும் தொலைபேசி வசதி.
6. கதர், கிராமத்தொழில் ஆணையம் புனரமைக்கப்படும்.
7. கூடுதலாக 30,000 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகள் அமைக்கும் திட்டம் தொடங்கப்படுகிறது.
8. பாரத நிர்மாணத் திட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கேற்பு தீவிரப்படுத்தப்படும்.
9. இந்த ஆண்டும் பொருளாதார வளர்ச்சி 7சத ஆகத் தொடரும்.
10. அனுமின் திட்டங்கள் மூலம் 40,000 மெகாவாட் மின்னுற்பத்திக்கு இலக்கு.

## திட்டக்குழு

❖ திட்டக்கமிஷன் ஒரு அரசியலமைப்பு சாராத (Non statutory body) அமைப்பாகும்.

❖ ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது தேசிய வளர்ச்சி மன்றக்குழுவாகும் (National Development Council). இவ்வமைப்பு 1952 ல் ஏற்படுத்தப்பட்டது. இது ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும் (Statutory body).

❖ இது ஐந்தாண்டுத்திட்ட நகலை பரிசீலித்து செயல்படுத்த ஒப்புதல் வழங்குவதுடன் அவ்வப்போது அதன் செயல்பாட்டையும் ஆய்வு செய்கிறது.
❖ நடப்பு 10வது ஐந்தாண்டுத் திட்டம் 1.04.2005லிருந்து செயல்படுத்தப்படுகிறது.
❖ இதுவரை 11 ஐந்தாண்டுத் திட்டங்களும், 7ஓராண்டு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன.
❖ திட்டக்குழுவின் பொன்விழா ஆண்டு (1950-51) - 2001-2002 ஆண்டு கொண்டாடப்பட்டது.

## திட்டமிடல்

திட்டமிடலின் அவசியம்:

1. வேலையின்மையை நீக்க
2. வறுமையை அகற்ற

திட்டமிடலின் நோக்கம்:

1. தெளிவான குறிக்கோள்
2. மைய திட்ட நிர்வாகம் திறம்பட நிர்வாக செய்வதற்கு
3. வளங்களை பங்கீடு செய்ய திட்டமிடல் அவசியமாகிறது.

திட்டமிடல் தொலைநோக்கு திட்டமிடலே (Long term plan)சிறந்தது. இத்தொலைநோக்கு திட்டமிடல் உயர்ந்த வளர்ச்சி விகிதம் அடையவும், சமூக நீதி காக்கவும், தற்சார்புடைமை, வேலைவாய்ப்பு, புதுமை மயம் ஆகியவற்றை உருவாக்கவும் உதவும்.

<u>திட்டமிடுதலின் வகைகள்:</u>

1. ஆணையோர் திட்டமிடுதல்(Planning by Direction)
2. தூண்டதலில் திட்டமிடுதல் (Planning by Induction)
3. நிதிநிலைச் சார்ந்து திட்டமிடல்(Financial Planning)
4. இயற்பொருள் சார்ந்து திட்டமிடல் (Physical Planning)
5. மையத் திட்டம் (Centralised Planning)
6. பரவல்முறை திட்டம் (Decentralised Planning)
7. அதிகாரத்திட்டம் (Authoritation Planning)
8. ஜனநாகத் திட்டம் (Dmocratic planning)
9. சுழல் திட்டம் (Rolling Plan)
10. வட்டாரத்திட்டம் (Regional Planning)

NATRAJ INSTITUTE OF TNPSC

## வேளாண்மை

1. இந்தியா ஒரு வேளாண்மை நாடு. நாட்டிலுள்ள மொத்த தொழிலாளர்களில் 65% பேர் வேளாண்மையைச் சார்ந்துள்ளனர்.
2. மொத்த (GDP) உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 24%.
3. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 38% வேளாண்மையும் அதனைச் சார்ந்த -----------
4. தேசிய வேளாண்கொள்கை 1993 ல் அறிவிக்கப்பட்டது.
5. தமிழ்நாட்டில் நில உச்சவரம்பு அளவு 15 ஏக்கர்கள் ஆகும்.

6. <u>பசுமை புரட்சி:</u>

❖ _பசுமைப்புரட்சி என்பது வீரியரக விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், இயந்திரங்கள் போதிய நீர்ப்பாசன வசதி சேர்த்து நவீன முறையில் பயில் மேலாண்மை செய்து உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கும் முறையாகும்.
❖ பசுமைப்புரட்சியால் இந்தியாவின் உணவு உற்பத்தி பெருமளவு அதிகரித்தது.
❖ குறிப்பாக கோதுமை மற்றும் அரிசியின் உற்பத்தி ஆச்சரியப்படத்தக்க வகையில் உயர்ந்தது.
❖ பசுமைப் புரட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1966 ஆகும்.
❖ பசுமைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்படுபவர் திரு.சி.சுப்ரமணியம்
❖ பசுமைப் புரட்சி ஆரம்பிக்கப்பட்ட திட்டகாலம் திட்ட விடுமுறை (1966-69)காலம்.

❖ இத்திட்டத்தின் மூலம் அதிக விளைச்சல் பெற்ற மாநிலங்கள் பஞ்சாய், ஹரியானா, தமிழ்நாடு, கர்நாடகா போன்ற மாநிலங்கள்.

7. வெண்மைப் புரட்சி:

❖ வெண்மைப் புரட்சி என்பது பால் உற்பத்தியை அதிகரிக்கத் தொடங்கப்பட்ட திட்டமாகும்.
❖ வெண்மைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்படுபவர் திரு.குரியன்.
❖ தொடங்கப்பட்ட ஆண்டு 1970.
❖ இதன் மூலம் உயர்ரக பசுக்கள்(ஜெர்சி,ஓங்கோல், காங்கேயம்) மற்றும் எருமைகள்(முர்ரா)போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

8. நீலப்புரட்சி:

❖ நீலப்புரட்சி என்பது மீன்பிடித்தலை அதிகமாக்குவதற்கு தொடங்கப்பட்ட திட்டமாகும்.
❖ இந்தியாவில் மீன் பிடித்தலில் முதலிடம் பெறும் மாநிலங்கள் கேரளா, மே.வங்கம், ஆந்திரா போன்றவையாகும்.
❖ மீன் நுகர்வில் மே.வங்கம் முதலிடம் பெறுகிறது.

9. மஞ்சள் பரட்சி: - எண்ணெய் வித்தக்களை அதிகம் பயிரிட தொடங்கப்பட்ட திட்டமாகும்.
10. பழுப்புப் புரட்சி:- - கோதுமை உற்பத்தியை பெருக்க தொடங்கப்பட்ட திட்டம்.

11. கருப்புப் புரட்சி:- நாட்டின் எரி எண்ணெய் வளங்களின் உற்பத்தியை அதிகரித்து தற்சார்பை அடைவது,பெட்ரோலில் 10% எத்தனால் கலந்து பயன்படுத்துவது.

NATRAJ INSTITUTE OF TNPSC

நில உடைமை வரம்புகள்

| விவசாயிகள் | நிலம் வைத்திருக்கும் அளவு(ஹெக்டேரில்) |
|---|---|
| எல்லை நில விவசாயி அல்லது மிகச்சிறு விவசாயி (Marginal Farmers) | 0-1 ஹெக்டேர் |
| குறுவிவசாயி (Small Farmers) | 1-2 ஹெக்டேர் |
| சிறு விவசாயி(Semi- Medium) | 2-4 ஹெக்டேர் |
| நடுத்தர விவசாயி(Medium Farmers) | 4-10 ஹெக்டேர் |
| பெரு விவசாயி(Large Farmers) | 10ஹெக்டேர் |

வேளாண்மை கடன்கள்

| கடன்வகை மற்றும் திருப்பி செலுத்தும் காலம் | கடன் வழங்கப்படும் காரணங்கள் | கடன் வழங்குபவர், நிறுவனம்,வங்கி |
|---|---|---|
| 1. குறுகிய காலகடன்கள் | விதை,உரம்,பூச்சிக்கொல்லி | லேவாதேவிக்காரர் |

| | | |
|---|---|---|
| (15 மாதங்களுக்குள்) | கால்நடை தீவனம் வாங்க, விளைபொருள்களை விற்க கூலி வழங்க, நீதிமன்ற செலவுகள் முதலிய காரணங்களுக்காக | தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன்சங்கம் |
| 2. நடுத்தர காலக்கடன்கள் (15மாதங்கள் 5 வருடங்கள்) | கால்நடைகள்,கருவிகள் கால்நடைப் பண்ணை அமைக்கவும்,கிணறு அமைக்கவும்,கிணறு வெட்டவும் பழுது பார்க்கவும் நிலத்தை அபிவிருத்தி செய்தல் பார்க்கவும் நிலத்தை அபிவிருத்தி செய்தல் போன்ற காரணங்களுக்காக, | லேவாதேவிக்காரர்கள் உறவினர்கள், நன்பர்கள்,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்<br>வணிக வங்கிகள் |
| நீண்டகாலக் கடன்கள் | புதிய நிலம் வாங்க, பெரிய எந்திரங்கள் வாங்க,பழைய கடனைத் திருப்பிக் கொடுக்க,போன்ற காரணங்களுக்காக | நிலவள வங்கிகள் (LDB) |
| இவை மூன்றிற்கும் கடன் வழங்க | ------------- | NABARD வங்கி பயன்படுகிறது. |

NATRAJ INSTITUTE OF TNPSC

## விலைக்கொள்கைகள் **(Princing Policies)**

குறைந்த பட்ச ஆதரவு விலை**(MSP-Minimum support price):**

விவசாயிகளின் நீண்டகால நலனை கருத்தில் கொண்டு, வேளாண்மை பொருட்களுக்கு தரம் வாரியாக குறைந்தபட்ச ஆதரவு விலை அரசால் முன்கூட்டியே நிர்ணயிக்கப்படும்.

சில சமயங்களில் மிக அதிக அளவில் இப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விட்டாலும் பொருட்களின் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையில் அரசே எந்த அளவு வேண்டுமானாலும் பொருள்களை கொள்முதல் செய்துகொள்ளும்.

ACPC – Agriculture Cost and price commission பரிந்துறை செய்கிறது.

கொள்முதல் விலை(**Procurement price):**

நுகர்வோர் நலனை பாதுகாப்பதற்காக, விலை அதிகரிக்கும்பொழுது கட்டாய கொள்முதல் மூலம் விலையேற்றம் குறைக்கப்படும் .குறைந்த ஆதரவு விலைகளைக் காட்டிலும் சற்றச் கூடுதலாக கொள்முதல் செய்து கொள்ளும்.

குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு பரிந்துரை செய்பவர்கள்(SCPC-Agriculture Cost and price Commission)

விற்பனை விலைகள்(**Issue Price):**

இது பொது விநியோகத்திற்காக நியாய விலைக் கடைகள் பொதுமக்களுக்கு வழங்குகின்ற உணவு தானியங்களுக்கு நிர்ணயிக்கப்படும் விலையாகும்.

விவசாய விலைக்குழு

விவசாய விலைக்குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு 1965.

இது Commission for Agricultural costs and prices (CACP) என 1985ல் மாற்றப்பட்டது.

உரக்கொள்கையானது 1977ல் ஏற்படுத்தப்பட்டது.

நோக்கம்:

1. விலை நிலைப்புத் தன்மை
2. உற்பத்தியாளர்களுக்கு விலையின்மீது நம்பிக்கை
3. பொது பங்கீட்டு முறை

புதிய வேளாண் விதைக் கொள்கை(1986):

இது கொள்முதல் விலை,ஆதரவு விலை, நியாய விலை, ஆகியவற்றை நிலைநிறுத்த ஏற்படுத்தப்பட்டவை ஆகும்.

புதிய வேளான் விலைக் கொள்கை(1993):

1. இது வேளாண்மைத் துறையில் மானியம் வழங்கவும்,
2. தரங்குன்றிய நிலங்களை பயன்பாட்டிற்கு கொண்டுவரவும்.
3. அரசு கட்டுப்பாட்டிலிருந்து கூட்டுறவு சங்கங்களை விடுவிக்கவும்
4. நீர்ப்பாசன வசதியை செம்மைப்படுத்தவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

வேளான் அங்காடி: வேளான் அங்காடியை முன்னேற்ற அவசியமானவை,

1. ஒழுங்குமுறை அங்காடியை உருவாக்குதல்.
2. சீரான எடையளவை கையாளுதல்.
3. தரக்கட்டுப்பாடு.

உணவுக் கொள்கை(1966):

உணவுக் கொள்கையின் நோக்கம்.

1. உணவு உற்பத்தியில் தற்சார்புடைமை அடைதல்.
2. உணவு உற்பத்தி, பங்கீட்டில் சமநிலையை எட்டுதல்.
3. சரியான உணவுதானிய பங்கீடு.

பொதுப்பங்கீட்டு முறை**(PDS):**

புதுப்பிக்கப்பட்ட பொதுப் பங்கீட்டு முறை 1992ல் ஏற்படுத்தப்பட்டது.

இதன் நோக்கம்

1. நியாய விலை
2. விலை நிலைப்புத் தன்மை
3. உற்பத்தி முறையையும்,அங்காடி முறையையும் ஒருங்கிணைத்தல்

NATRAJ
INSTITUTE OF TNPSC

## வேலையின்மை(UNEMPLOYMENT)

வேலையின்மையின் வகைகள்:

1. கிராமப்புறங்களில் நிலவும் வேலையின்மை.
2. பருவகால வேலையின்மை (Seasonal Unemployment)
3. நிரந்தர வேலையின்மை (Parmament Unemployment)
4. மறைமுக வேலையின்மை(Disguised Unemployment)
5. நகர்ப்புற வேலையின்மை
6. தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேலையின்மை
7. படித்தவரிடையே நிலவும் வேலையின்மை

கல்வி வசதி அதிகரித்த அளவு வேலைவாய்ப்பு வசதிகள் பெருகாததும், வெறும் பொதுக் கல்வி படித்தவர்களுக்கு வேலை தர முடியாததும் இதற்கு காரணங்களாகும். இவற்றுடன் படித்தவர்கள் உடல் உழைப்பு வேலையை செய்யத் தயங்குவதும் ஒரு முக்கியமான காரணமாகும்.

அமைப்புசார் வேலையின்மை(Structural Unemployment)

8. Open Unemployment

படித்தவர்களும். தொழிலாளர்களும் (unskilled&skilled)வேலைதேடாமல் இருப்பது இவ்வகையாகும். கிராமத்தில் பிறந்து நகரத்திற்கு வேலைதேடி வந்தவர்கள் வேலை கிடைக்காமல் இருப்பது இவ்வகையாகும்

வேலையின்மைக்கான காரணங்கள்

1. மக்கள் தொகை விரைவாகக் பெருகுதல்.
2. பொரளாதார வளர்ச்சி விகிதம் குறைவாக உள்ளது.
3. வேலைவாய்ப்புக்கு உதவும் வகையில் பொருத்தமான கல்வி முறை இல்லை.
4. தொழில் வளர்ச்சி தொழில் நுணுக்க முன்னேற்றமில்லை.
5. சரியான வேலைவாய்ப்புக் கொள்கை செயல்படுத்தப்படவில்லை.

இந்தியாவின் வேலையிண்மையைப் பற்றி ஆராய்ந்த குழுக்கள்:

1. டண்ட்வாலா கமிட்டி(Duntwala Committee)

இந்தியாவில் சுமார் 26.58 மில்லியன்/(1999-2000)நபர்கள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

2. பகவதி கமிட்டி (Bhagawathi Committee)

வறுமை ஒழிப்பு திட்டங்கள்:

- Training of Rural Youth for Self Employment (TRYSEM) – 1979
- National Rural Employment Programme(NREP) - 1980
- Integrated Rural Development Programme(IRDP) - 1980
- Rural landless employment Gurrantee Programme(RLEGP) – 1983
- Jawahar Rojgar Yojana(JRY) 1989 for Urban Areas – 1989
- Nehru Rojgar Yojana (NRY) 1989 for Urban Areas – 1989
- Prime Ministers Rozgar Yojana (PMRY) – 1993
- Indian Awaas Youjana(IAY) – 1985
- Employment Assurance schem(EAS) – 1993
- Development of Woman and Children in Rural Area(DWCRA) - 1993-94

NATRAJ INSTITUTE OF TNPSC

வறுமை - வரையறை:

ஒருவர் உயிர்வாழ்வதற்கு குறைந்த பட்ச உணவாக நகரத்தில் வாழ்பவருக்கு 2100 கலோரியும். கிராமத்தில் வாழ்பவருக்கு 2400 கலோரியும் தேவை.

இந்த அளவு கலோரிகளைத் தருகிற கறைந்தபட்ச உணவுப் பொருட்களை வாங்க மாதத்திற்கு ஒரு நபருக்கு 1993-94 ஆம் ஆண்டில் கிராமப்புரத்தில் ரூ.228 ம் நகர்ப்புறத்தில் ரூ.264.10ம் தேவைப்படுகிது.

வறுமைக்கான காரணங்கள்

1.விரைவான மக்கள் தொகை வளர்ச்சி

2. வேலைவாய்ப்புள்ள மிகக் குறைவு

3. பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு வைத்துவிட்டு செல்லும் கடன்.

4. பொதுக்கல்வி தொழிற்கல்வியில் சமவாய்ப்பின்மை
5. பரம்பரைச் சொத்து ஏதும் இல்லாதத
6. மண்டல ஏற்றத் தாழ்வுகள்

## பொருளாதாரத்தின்(**sectors**)தொழில்சார் பிரிவுகள்

முதல் நிலைத் துறை(**primary Sector):**

1. வேளாண்மை, கால்நடைகள் மற்றும் அதைச் சார்ந்த தொழில்கள்
2. காடு வளர்ப்பு
3. சுரங்கத் தொழில்

இரண்டாம் நிலைத் துறை **(Secondary Sector):**

1. சுரங்கம்,சுரங்கம் உற்பத்தி
2. தொழிற்சாலை உற்பத்தி

மூன்றாம் நிலைத்துறை(**Tertiary Sectror-**சேவைத்துறை)

1. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு
2. வணிகம்,ஒட்டல்கள்
3. வங்கி மற்றும் ஆயுள் காப்பீடு
4. வீட்டுமனை விற்றல்,குடியிருப்புகள் விற்றல் போன்றன
5. பாதுகாப்பு பணி மற்றும் பொது நிர்வாகம்
6. சமுதாய, சமூக மற்றும் தனிப்பட்ட பணிகள்

NATRAJ INSTITUTE OF TNPSC

தொழில்கள்

சிறு தொழில்கள்(**Small Scale Industries):**

1. சிறுதொழில் அமைப்புடைய தொழில்களாகவும், தொழிற்சாலை சட்டத்திற்கு உட்பட்டதாகவும் ரூ.1கோடி முதல் 5கோடி வரை முதலீடு(Capital Investment)செய்யப்பட்டுள்ள தொழில்களே சிறுதொழில் நிறுவனங்கள் எனப்படுகின்றன(ஜீன் 2003 வரையரை)
2. சிறுதொழில்களுக்க 75வகையான தொழில்கள்(Subjects)ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 675 வகையான பொருட்கள் (ltems) ஒதுக்கப்பட்டுள்ளது(ஜீன் 2003 வரையறை).
3. இது அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் துறையாகும்.
4. சிறு தொழில்துறையை ஊக்குவிப்பதற்கு SIDCO 1954 ல் உருவாக்கப்பட்டது.
5. அபித் ஹுசைன் கமிட்டி சிறுதொழில் துறைப் பற்றி பரிந்துறை செய்தது.
6. மாவட்ட தொழல் மையங்கள் 1978ல் (DIC) ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்கப்பட்டு சிறுதொழில்வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளை செய்கிறது.

<u>நடுத்தர தொழில்கள் (**Medium Industries-**ஜீன் 2004 வரையறை):</u>

1 கோடி -10 வரை தொழிற்சாலை மற்றும் அதன் இயந்திரத்தில் முதலீடு செய்தல் என்று சிறுதொழில் அமைச்சகம் வறையறுத்துள்ளது.

மிகச்சிறு நிறுவனங்கள்(Tiny Industries):-

25 லட்சத்திற்கு குறைவாக முதலிடு செய்துள்ள நிறுவனங்கள் ஆகும்.

குடிசைத் தொழில் **(cottage Industries):**

1948 ஆண்டு தொழிற்சாலை சட்டத்திற்கு உட்படாமல், தொழிற்சாலை எனக் கருதமுடியாத ஒரு இடத்தில் முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ, ஒரு குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்கள் அல்லது பெரும்பான்மையான உறுப்பினர்களின் உதவியால் இயங்கும் தொழில்கள் குடிசைத் தொழில்கள் எனப்படுகின்றன.

தீப்பெட்டி தயாரித்தல், தேனீ வளர்த்தல், கற்பூரம், ஊதுவத்தி செய்தல் போன்றவை இதற்கு உதாரணமாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி

இந்திய ரிசர்வ் வங்கி 1935ல் பாரத ரிசர்வ் சட்டம் மூலம் நிறுவப்பட்டது. இது 1949ல் அரசுடமையாக்கப்பட்டது.

பணிகள்:

அந்திய செலாவணியைக் கட்டுப்படுத்தகிறது. மத்திய மாநில அரசுகளுக்கு வங்கியாக வும், ஏஜென்ட்டாகவும் பயன்படுகிறது.

இது அரசாங்க வங்கி என்னும், வங்கிகளின் வங்கி என்றும் அழைக்கப்படுகிறது. 1ரூபாய் நோட்டைத் தவிர பிற அனைத்து ரூபாய்களையும் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது.

ரூபாய் நோட்டுக்கள் அச்சடிக்கப்படும் இடங்கள் நாசிக், தேவாஸ்,ஐதராபாத்.

இதுவரை 20 தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள் உள்ளன. வங்கிகள் முதன்முதலில் 1969ல் தேசிய மயமாக்கப்பட்டன. தமிழிநாட்டில் உருவான முதல் வங்கி இந்திய ஓவர்சீஸ் வங்கி ஆகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

முக்கிய தேதிகள்:

1. 1921ல் இந்திய இம்பீரியல வங்கி துவக்கம்.
2. 1955ல் இந்திய இம்பீரியல் வங்கி தேசியமயமாகி பாரத ஸ்டேட் வங்கி என அழைக்கப்படுகிறது. இது இந்தியாவிலேயே பரந்த கிளைகளைக் கொண்ட வங்கி.
3. 1956ல் வங்கி நிறுவனச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
4. 1969ல் 14 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டது.
5. 1980ல் 6 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டது

இதில் நியூ பேங்க் ஆ.்.ப் இந்தியன் வங்கி. பஞ்சாப் நேஷனல் வங்கியுட்ன இணைக்கப்பட்டதால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தற்பொழுது 19உள்ளன.

மக்கள் தொகை

மக்கள் தொகை வளர்ச்சியின் மூன்று நிலைகள்:

1. முதல் நிலை

அதிக பிறப்பு வீதம் மற்றும் அதிக இறப்பு வீதம் கொண்டது. இதனால் மக்கள் தொகை வளர்ச்சி மிகக் குறைவாக இருக்கும்.

2. இரண்டாம் நிலை

நிலையான பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம் கொண்டது. இதனால் மக்கள் தொகை வளர்ச்சி மிக அதிகமாக இருக்கும்.இந்தியா தற்போது இந்த நிலையில் இருக்கிறது.

3. மூன்றாம் நிலை

- குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம் கொண்டது. இதனால் நாட்டின் மக்கள்தொகை ஓரளவிற்கு நிலையானதாக உள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற முன்னேறிய நாடுகள் இந்த நிலையில் உள்ளவை.
- இந்தியாவில் 1கோடிக்கு மேல் மக்கள் தொகையுள்ள நகரங்கள்23
- தேசிய மக்கள் தொகைக்க கொள்கை 1976ல் அறிவிக்கப்பட்டது. இதன்படி திருமண வயது ஆண்டுகளுக்கு 21ஆகவும், பெண்களுக்கு 18ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.
- குடும்பக் கட்டுப்பாடு திட்டம் 1952ல் தொடங்கப்பட்டது.

▪ மக்கள் தொகை பெரும் பிரிவினை வருடம் 1921.
▪ மக்கள் தொகை கோட்பாட்டை வரையறுத்தவர் மால்துஸ்.
▪ <u>மக்கள் தொகை வளர்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள்:</u>

1. பிறப்பு விகிதம்
2. இறப்பு விகிதம்
3. இடப்பெயர்வு

<u>மக்கள் தொகை கணக்கெடுப்பு:</u>

➢ முறையான மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881ல் ரிப்பன் பிரபுவால் துவக்கப்பட்டது.
➢ 2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பானது 12வது கணக்கெடுப்பாகும்.

<u>மக்கள் தொகை கணக்கெடுப்பின் பயன்கள்:</u>

1. சராசரி ஆயட்காலம் கண்டறிய
2. ஆண்,பெண் விகிதம் காண
3. கல்வி அறிவு நிலை காண
4. மக்கள் தொகை அடர்த்தி காண
5. ஊரக நகர்ப்புற மக்கள்தொகை அறிவிப்பு

<u>மக்கள் தொகை பெருக்கத்திற்கான காரணங்கள்:</u>

1. உயர்ந்த பிறப்பு விகிதம்
2. குறைந்த இறப்பு விகிதம்
3. எல்லோருக்கும் திருமணம் என்ற உணர்வு
4. சமுதாய மரபகள்

NATRAJ INSTITUTE OF TNPSC

நடப்புப் பொருளாதாரம்

<u>உலகமயமாக்கல்:</u>

உலகமயமாக்கல் என்பது நம்நாட்டு அங்காடியை எல்லைக்கு அப்பாலும் விரிவடையச் செய்தல் உலகமயமாக்கல் எனப்படும்.இதில் ஏற்றுமதி முக்கிய அங்கம் வகிக்கிறது.

<u>தாராளமயமாக்கல்:</u>

தொழில்துறை நிறுவனங்கள் கிடைக்கும் மூல வளங்களை செம்மையாகப் பயன்படுத்த உகந்த சூழலை உருவாக்குவது தாராளமயமாக்கல் எனப்படும்.

<u>தனியார் மயமாக்கல்:</u>

நலிவடைந்த தொழில் துறைகளை தனியாரிடம் விற்றல் ஆகும்.இவை மூன்றும் சேர்ந்து LPG (Liberelisation Privatisation ,Globalization)

GATT:

- சுங்கவரி மற்றும் வாணிபம் தொடர்பான பொது ஒப்பந்தம்.1948ம் ஆண்டு நிறுவப்பட்டது. நிலையான பன்னாட்டு உறவுகளை தடையற்ற வாணிகத்தின் மூலம் வளரச் செய்வது இதன் நோக்கம்.
- இதன் தலைமையகம் ஜெனிவா. இது 1995 டிசம்பர்12ல் WTO என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டுவருகிறது.

- இந்தியா இதில் 1994ல் கையெழுத்திட்டது. இதில் தற்போது 146 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.
- வாணிகம் தொடர்பான முரண்பாடுகளை ஒரு ஒப்பந்தத்தின் கீழ் ஒன்றுகூடி பேச்சு வார்த்தைகள் மூலம் தடைகளை அகற்றினார்கள். இது உருகுவே மாநாடு எனப்பட்டது.
- ஆரம்ப கால கட்டத்தில் GATTன் செயல்பாடு. பொருள்கொண்டதாக இருக்கவேண்டும் என டங்கல் எண்ணினார். இவருடைய முன்மொழிவே டங்கல்
வரைவு எனப்படும்.

<u>நோக்கம்:</u>

1. உறுப்பினர் நாடுகள் வாணிகத்தைக் குறைக்கும் தடைகளை அகற்ற வேண்டும்.
2. வாணிகத் தடைகள் பேதங்காட்டா முறையில் செயல்படுத்தவேண்டும்
(Most Favoured Nations)
3. உள்நாட்டு தொழில்களை பாதுகாக்க சுங்கவரி மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

<u>இதன் உட்கூறுகள்:</u>

- TRIPS (Trade Related Intelectual Property Rights) இது பேட்டண்ட் என்னும் காப்புரிமை பெறத்தக்கது.
- வேளாண் பயிர் பொருட்களுக்கும் உயிர்வாழும் இனம் பற்றிய கண்டுபிடிப்புகளுக்கும் பொருந்தும்.
- TRIMA (Trade Related Investment Measures)

<u>வாணிக சமநிலை:</u>

❖ ஏற்றுமதிகளின் மதிப்பிற்கும், இறக்குமதிகளின் மதிப்பிற்கும் இடையே காணப்படும் வேறுபாடு வாணிகச் சமநிலை எனப்படும்.

❖ இறக்குமதியைவிட ஏற்றுமதி மிஞ்சினால் வாணிபச் சமநிலை மிகத் என்றும், இறக்குமதியைவிட ஏற்றுமதி குறைந்தால் வாணிகச சமநிலை பற்றாக்குறை என்றும் கூறப்படகிறது.

IMF: International Monetary Fund(1944)

➢ இதில் 184 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.
➢ நிர்வாக இயக்குநர் கோர்ஸ்ட் கொஹில்-ஜெர்மனி நாட்டவர்.
➢ இது உறுப்பு நாடுகளின் செலுத்து சமநிலையை சரிசெய்ய கடன் வழங்குகிறது.
➢ இது குறைந்த கால (Short term) கடனையே வழங்குகிறது.

உலக வங்கி(World Bank)-1945

▪ இதன் வேறு பெயர் IBRD ஆகும்.
▪ இதில் 155 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.
▪ உலக வங்கியில் உறுப்பினராக இடம்பெறுவதற்கு கட்டாயம் IMF ல் உறுப்பினராக இருப்பவராக இருக்க வேண்டும்.
▪ இது நீண்ட கால கடன் வழங்கும் அமைப்பாகும்.
▪ இது ஏழை நாடுகளுக்கும், அன்னிய செலாவணி கையிருப்பு இல்லாத நாடுகளுக்கும் கடன் வழங்குகிறது.

IDA - இது தனிநபர் வருமானம் 1135 டாலருக்கு குறைவாக உள்ள நாடுகளுக்கு 10 வருடங்களுக்கு கடன் வழங்குகிறது.

IFC - இது தனியாருக்கு கடன் வழங்கும் நிறுவனமாகும்.

MIGA - வளரும் நாடுகளின் முதலீட்டை அதிகரிக்க கடன் வழங்குகிறது.

நிதியியல் பொருளாதாரம்(Public Finanace , Art 264-293):

இது மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கம் இடையேயுள்ள நிதி பகிர்வைப் பற்றி கூறுகிறது. இந்திய அரசின் வருவாய்கள் இரண்ட பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

1. வருவாய் வரவுகள்

மத்திய பட்டியலில் கூறப்பட்டுள்ள அனைத்து துறைகளும் இதன் வருவாயினமாகும்.வருவாய் வரவுகளில் இரண்டு இனங்கள் உள்ளன.

(1) வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாய்
(எ.கா) வருமான வரி
நிறுவன வரி
(2) வரியில்லாத பிற இனங்கள்
(எ.கா) பணம் அச்சிடுதல்
இரயில், விமான போக்குவரத்தில் கிடைக்கும் வருவாய்

NATRAJ INSTITUTE OF TNPSC

2.மூலதன் வரவுகள்(Capital Receipt)

(எ.கா) உள்நாட்டின் வெளிநாட்டிலும் கடன் வாங்குதல், வரவேண்டிய கடன்களின் வரவு இதில் அடங்கும்.

| நேரடி வரி | மறைமுக வரி |
|---|---|
| வருமான வரி (Income Tax)<br>நிறுவன வருமான வரி (Corporation Tax)<br>செல்வ வரி (Wealth Tax)<br>நன்கொடை வரி (Gift Tax)<br>மரண வரி (Estate Duty) | மதிப்புக் கூட்டப்பட்ட வரி (VAT)<br>திருத்தப்பட்ட மதிப்புக் கூட்டப்பட்ட வரி (MODVAT)<br>விற்பனை வரி(Sales Tax)<br>சுங்க வரி(Customs duty)<br>ஆயத்தீர்வை (Excise duty) |

தற்போது நேரடி வருமானத்திற்கும். மறைமுக வருமானத்திற்கும் உள்ள விகிதம் 38:61 மத்திய அரசிற்கு ஆயத்தீர்விலிருந்துதான் அதிகபட்ச வருவாய் கிடைக்கிறது.

<u>சேவை வரிகள்:</u>

இது பணிகள், சுற்றுலா, தகவல் தொடர்பு. டிராவல் ஏஜெண்ட், திருமன மண்டபங்கள் மற்றும் பிற சர்வீஸ்களிலிருந்து பெறப்படும் வரிகள்.

MAT – Minimum Alternate Tax. இது கம்பெனிகள் தனது நிகர லாபத்தில் செலுத்தும் வரியாகும்.

VAT – மதிப்புக் கூட்டப்பட்ட வரி(Value Added Tax)1.04.2005ல் அறிமுகம் செய்யப்பட்டது. வெளிப்படையான வரிவிதிப்பு உடையது.இதனை கணக்கிட Credit

முறை பயன்படுகிறது. இது விற்பனையாளருக்கும், வாங்குபவருக்கும் பயன்தரக்கூடியது.

MODVAT : திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பு கூட்டு வரி (Modified Value Added Tax)

இது தொழிற்சாலையில் உற்பத்தி செய்வோர் செலுத்தவேண்டிய வரி.

CENVAT: Central VAT, இத ஆயுத்தீர்வை வரிகளின் வெவ்வேறு வகையை நீக்கி ஒரே வரியாக வசூலிக்கப்படுகிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

கமிட்டிகள்

1. மெகல்நோபிஸ் கமிட்டி - 1964 - நிதிபகிர்வு பற்றியது.
2. ஹாசாரி கமிட்டி - 1967 - தொழிற்சாலை லைசன்ஸ்
3. தத் கமிட்டி - 1969 - தொழிற்சாலை லைசன்ஸ் ஆய்வு செய்தல்.
4. கே.என்.ராஜ் கமிட்டி - 1971 - நேரடி வரி, கருப்புப் பணம் மற்றும் வரி ஏய்ப்பு பற்றியது.
5. பகவதி கமிட்டி - 1973 - வேலையின்மை பிரச்சினை மற்றும் பொது நலன்
6. குமரப்பா கமிட்டி - 1979 - நிலச் சீர்திருத்தம்
7. கோர் கமிட்டி - 1979 - வங்கிக் கடன் அளித்தல்
8. எல்.கே.ஜா கமிட்டி - 1979 - மறைமுக வரி
9. சக்கரவர்த்திகமிட்டி - 1985 - Review of Monetary System
10. ராஜாசெல்லையாகமிட்டி- 1991 - பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு விற்பனை வரி சீர்திருத்தம்
11. நரசிம்மன் கமிட்டி - 1991 - Monitary Reforms
12. மல்ஹோத்ரா கமிட்டி - 1993 - இன்சூரன்ஸ் நிறுவனத்தை மறு சீரமைத்தல்
13. ரங்கராஜன் கமிட்டி - பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்றல்
14. ஜானகிராமன் கமிட்டி- வங்கி சீரமைப்பு

15. வாஞ்சூ கமிட்டி - நேரடி வரிவிதிப்பு

16. என்.கே.சிங் கமிட்டி - அந்நிய நேரடி முதலீடு

17. ஹனுமந்தராங் கமிட்டி- 1997 - உரங்கள் பற்றியது.

18. ஓய்.பி.ரெட்டி கமிட்டி - 2001 - நேரடி வருமான வரிக்கு விளக்கமளித்தல்

19. கேல்கர் கமிட்டி - வரிசீரமைப்பு

20. எஸ்.என்.வர்மா கமிட்டி- 1999 - வணிக வங்கியினை சீரமைத்தல்

பணவீக்க இடைவெளி(Inflationary Gap)

<u>பணவியல் தொடர்பான வரையறைகள்:</u>

பணவீக்கம் (Inflation)என்பது பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை அதிகரிப்பைக் குறிக்கும்.

1. அரசு செலவுகள் அதிகரித்தல்
2. பற்றாக்குறை நிதியாக்கம்
3. வரி குறைத்தல்
4. ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக இருத்தல்
5. போர்
6. பொருட்கள் பற்றாக்குறை
7. உற்பத்தி திறன் குறைத்தல்

- மக்களிடம் செலவிடுவதற்குரிய வருமானம் அதிகமிருந்து, அதற்கேற்ப அவர்களுக்கு கிடைக்கும் பொருட்களின் அளவு குறைவாக இருந்தால் அச்சூழ்நிலையே பணவீக்க இடைவெளியாகும்.
- அதாவது ஒரு நாட்டு மக்களின் மொத்த வருமானம் ரூ.1000கோடி என்றால் பணவீக்க இடைவெளி ரூ.100கோடியாகும்.
- பிலிப்ஸ் வளைகோடு (Philips Curve) என்பது, கூலி (wage)அதிகரிப்பிற்கும், வேலையின்மை விகிதத்திற்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குகிறது.
- பணவாட்டம் (Deflatioon)என்பது பணவீக்கத்திற்கு பணத்திற்கு மதிப்பு அதிகரிப்பதை குறிக்கும்.
- பணவீக்கத்தினால் மாதச் சம்பளம் பெறுவோர், கடன் கொடுத்தவர், தொழிலாளர் மற்றும் நுகர்வோர் பாத்திப்படைவர்.
- பணவாட்டத்தினால் வியாபாரிகள், உற்பத்தியாளர்கள், கடன் வாங்கியவர் மற்றும் விவசாயிகள் பாதிப்படைவர்.
- தேக்க வீக்கம்(Stagflation) என்பது பணவீக்கமும் , தேக்கநிலையும் இணைந்த ஒரு தன்மை ஆகும்.இந்நிலையில் அதிக விலைகளும் அதிக வேலையின்மையும் நிலவுகிறது.
- இந்நிலை இந்தியாவில் 1973, 1979-80களில் காணப்பட்டது.
- மறு வீக்கம்(Reflation) என்பது பொருளாதாரத்திலிருந்து விடுபட வெளிப்படையாக மேற்கொள்ளப்படும் பணவீக்க நடவடிக்கை ஆகும்.அதாவது கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம் ஆகும்.
- பொருளாதார வளர்ச்சியை உருவாக்கவும்,வேலைவாய்ப்பை உருவாக்கவும் இந்நிலை மேற்கொள்ளப்படுகிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

கூட்டுறவு அமைப்பு

கூட்டுறவு அமைப்புகளில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக சேரலாம். இந்திய கூட்டுறவுச் சட்டம் 1913லும், தமிழிநாடு கூட்டுறவுச் சட்டம் 1983 கொண்டுவரப்பட்டது.

கூட்டுறவு சங்கம் தமிழ்நாடு, மகாராஷ்டிரம் ஆகிய இடங்களில் சிறப்புபெற்றுள்ளது.

கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் 25 முதல் எத்தனை பேர் வேண்டுமானாலும் சேரலாம். ஆனால் தமிழகத்தில் 25 பேர்வரை மட்டுமே சேரமுடியும்.

கூட்டுறவு சங்கத்தில் ஒருவருக்கு ஒரு வாக்குமுறை பின்பற்றப்படுகிறது.

கூட்டுறவின் நோக்கம், ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒருவருக்காக.

மாநில தலைமை கூட்டுறவு வங்கி மாநில கூட்டுறவு வங்கி ஆகும்.

கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு வருமானவரி. பதிவுக் கட்டணம், முத்திரை வரி ஆகிய சலுகைகளை அளிக்கிறது.

கூட்டுறவின் தத்துவத்தை அறிமுகப்படுத்தியவர் ராக்டேல்.

TITBITS

- இந்திய பங்குச் சந்தை 1887ல் துவங்கப்பட்டது.
- இங்கிலாந்து பங்குச் சந்தை 1773 துவங்கப்பட்டது.
- அகமதாபார்-Bostan of East எனப்படுகிறது. இத நாட்டிலேயே அதிக நூற்பாலைகளை கொண்ட நகரமாகும்.
- மும்பை-Cottonopolis இரண்டாவதாக அதிக நூற்பாலைகளை கொண்ட நகரமாகும்.
- கான்பூர் - வட இந்தியாவின் மான்செஸ்டர்.
- இந்தியாவின் மான்செஸ்டர் மும்பை ஆகும்.
- கோயம்புத்தூர் - தென் இந்தியாவின் மான்செஸ்டர்.
- வெள்ளைத்தங்கம்- பருத்தி ஆகும்.
- முதல் தொழில்சாலைகள் கணக்கெடுப்பு 1972
- பொதுத்துறை நிறுவனங்களில் (PSU) 1991-1992 லிருந்து பங்குள் விற்க்கப்படுகின்றன.
- SICK INDUSTRIES( நலிந்த தொழிற்சாலைகள்0 கம்பெனி சட்டம் 1985 ம் ஆண்டு மூலம் இதனை மறுசீரமைக்க உருவாக்கப்பட்டது.
- மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களில் லாபம் ஈட்டலில் முதலிடம் வகிப்பது ONGC.

சரியான பொருத்தம்:

நகர அரசு நிர்வாகம் - போலிஸ்
மார்ஷல் - மனித நலம், போலிவாரம்
ராபின்ஸ் - கிடைப்பருமை, ஸ்கார்சிட்டி
சாம்வேல்சன் - வளர்ச்சி
ஸ்மித் - பருப்பொருள் சந்தை இலக்கணம்
ஸ்மித் - முதலாளித்துவம்
கீன்ஸ் - கலப்புப் பொருளாதாரம்
கார்ல் மார்க்ஸ் - சமவுடைமைப் பொருளாதாரம்

NATRAJ INSTITUTE OF TNPSC

நுகர்வோர் எச்சம் - தகுவிலை
தகுவிலை - உண்மை விலை
நுகர்வு - விருப்பம் பற்றிய ஆய்வு
மொத்த பயன்பாடு- இறுதிப் பயன்பாட்டின் கூட்டுத்தொகை
பதிலீட்டு விலை - தேவை விதி
தாழ்ந்த ரக பொருட்கள் - கிஃப்பன் பண்டம்
முற்றுரிமை - விலைபேதம்
தேனீர், காப்பி - பதிலீட்டு பண்டம்
பெருமை தரும் பொருள்- வெப்ளன் விளைவு
மானியம் - உற்பத்திக்கு ஊக்கம்
அளிப்பு நிகழ்ச்சி - விலைமாற்றத்திற்க ஒப்ப மாற்றம்
நீண்ட கால விலை தீர்மானம் - அளிப்பின் ஆதிக்கம்

குறுகியகால விலை தீர்மானம் - தேவையின் செல்வாக்கு
விற்றுத் தீர்க்கும் விலை - சமநிலை விலை
நுண்ணிய பொருளியல் - விலை கோட்பாடு
அளிப்பு - விலையுடன் இணைந்தது
அளிப்பு வளைகோடு - Left to right மேல் நோக்கியது
சமநிலை விலை - தேவை, அளிப்பு, சமம்
தேவை விதி - குறைந்துசெல் இறுதிநிலை பயன்பாட்டு வ விதி
உற்பத்திளான் - தொழில் முனைவோர்
நிலம் - விலையில்லா கொடை
இடர்பாடுகள் - இழப்புக் காப்பீடு
உற்பத்தி - தொழில்நுட்பத் தொடர்பு

குறைந்துசெல்விளைவு விதி - வேளாண்துறை
வளைந்துசெல் விளைவு விதி - தொழில் துறை
மாறும் செலவு - செலவு
மாறாச் செலவு - தேய்மானம்
சராசரி செலவு வளைகோடு - ‘U’வடிவம்
‘சே’ வின் அங்காடி - நிறை வேலையுடைமை
சம முறிவு கொள்கை - வருமானமும், நுகர்வும் சமம்

- ➢ உற்பத்தி செய்யும் தனி அலகு நிறுவனம் எனப்படும்.
- ➢ விற்போருக்கும் வாங்குவோருக்கும் இடையில் உள்ள போட்டி நிறைவு போட்டி ஆகும்.
- ➢ தூய போட்டியில் என்பது குறைந்த விலையில் அதிக அளவு பொருட்கள் வாங்குதலாகும்.
- ➢ தேவை விதி என்பது குறைந்த விலையில் அதிக அளவு பொருட்கள் வாங்குதலாகும்.
- ➢ கில்லோர் முற்றுரிமை என்பது நிறுவனங்கள் ஒன்றையொன்று சார்ந்து இருத்தல்.
- ➢ பங்குமார்க்கெட் என்பது கம்பெனியின் பங்குகளை வாங்கவும், விற்கவும் அணுகவேண்டிய இடம்.
- ➢ மும்பையில் இந்தயாவில் பெரிய பங்கு மார்க்கெட் தலால் வீதியில் உள்ளது. அமெரிக்காவில் நியூயார்க்கின் வால் ஸ்டீரீட் என்ற இடத்தில் உள்ளது.
- ➢ ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளுக்கு கடன்தரும் போது விதிக்கும் வட்டி விகிதம் பேங்க் ரேட் எனப்படும்.
- ➢ அன்னிய செலாவணி: வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுமதி மூலம் பெறுவது அந்நியச் செலவாணி ஆகும்.
- ➢ முற்றுரிமை (Monopoly) என்பது பொருட்களை உற்பத்தி செய்து விற்கும் முழு உரிமையும் ஒருவரைச் சார்ந்து இருப்பதாகும்.
- ➢ பணவீக்கம்(Inflaion):உற்பத்தி செலவு அதிகரிப்பதால் உற்பத்தியை அதிகரிக்காமல் பண்டத்தின்----------------------------------------------------------------

இதில் பணத்தின் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கும்.

- ➢ பணவாட்டம்(Deflaion):உற்பத்தி செலவு குறைவதால் பண்டத்தின விலையை குறைப்பது பணவீக்கம் எனப்படும். இதில் பணத்தின் மதிப்பு மிகவும் அதிகமாக இருக்கும்.
- ➢ ஆக்ட்ராய் (Octroi)வரி: ஒரு மாநில எல்லைக்குள் ஒரு வாகனம் நுழைய விதிக்கும் வரியாகும்.
- ➢ கோர் செக்டார்: அடிப்படை தொழில்களான கனரக இயந்திரங்கள், எண்ணெய் கிணறுகள் ஆகையவை கோர்செக்டார் வகை தொழில்களாகும்.
- ➢ பணத்தின் மதிப்பை குறைத்தல்: அந்திய பணமதிப்பை கருத்தில்கொண்டு ஒரு நாட்டின் பண மதிப்பைக் குறைப்பது பணத்தின் மதிப்பு குறைத்தல் எனப்படும். இதுவரை இந்தியாவில் மூன்று முறை பணத்தின் மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. 1949, 1966(இரு முறை).

- 1954ல் உணவு கலப்பட தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1986ல் நுகர்வோர் விற்பசைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1987ல நுகர்வோர் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- 1993 ல் நுகர்வோர் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

- ➢ ஒவ்வொரு வருடமும் மாச் 15ம் நாள் நுகர்வோர் பாதுகாப்புத் தினம் கொண்டாடப்படுகிறது.
- ➢ காந்திஜி நுகர்வோரை அப்பாவி நுகர்வோர் என்று கூறினார்.
- ➢ நுகர்வோர் இயக்கத்தின் தந்தை ரால்ஃப் நேடர்.
- ➢ நுகர்வோர் உரிமைகளைப் பற்றி எழுதியவர் ஜான் கென்னடி.
- ➢ டிக் வங்கி(TICC)1977ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- ➢ <u>IFCI </u>வங்கி 1948 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

- ➢ <u>ICICI </u>வங்கி 1955 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- ➢ <u>NABARD,EXIM </u>வங்கிகள் 1982ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- ➢ <u>ICICI </u>வங்கியினால் தனியார் துறைக்கு கடனுதவி அளித்த முதல் வங்கியாகும்.
- ➢ <u>UTI,IDBI</u>வங்கி 1964ல் ஏற்படுத்தப்பட்டது.

- ➢ <u>IDBI</u> வங்கி தொழில் வளர்ச்சி வங்கிகளின் தலைமை வங்கி ஆகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

- காசோலையின் வாழிநாள் 6 மாதமாகும்.
- ∴பிக்சட் டெப்பாசிட் என்பது , குறைந்தபட்சம் வங்கியில் 46நாட்கள் பண இருப்பு வைப்பது ஆகும்.
- பொதுக் காப்பீட்டுக் கழகமும் மாநில அரசம் பகிர்ந்துகொள்ளும் இடர்பாடு 1:2 விகிதமாகும்.
- இந்திய வங்கி நிருமச் சட்டம் 1956 ஆகும்.
- பத்திர ஒப்பந்த ஒழுக்காற்றுச் சட்டம் 1956.
- பங்கு சந்தையின் முதன்மை சந்தை புது வெளியீடுகளை வெளியிடும்.இரண்டாம் சந்தை தரகர்களை கொண்டிருக்கும்.
- உரிமை வெளியீடு என்பது பழைய பங்குதாரர்களுக்கு புதிய பங்குகளை விற்பதைக் குறிக்கும்.
- காளை-பங்கு பத்திரங்கள் விலை ஏறுமுகமாக இருக்கையில் பங்குகளை வாங்குதல் (Bullish trend)
- கரடி-பங்கு பத்திரங்கள் விலை வீழ்ச்சி அடையும் நிலையில் பத்திரங்களை குறைந்த விலையில் வாங்குபவர்(Bearish Trend).
- கலைமான்- மிகை மதிப்பு தேடுபவர் முன்னெச்சரிக்கை உடையவர்கள்.பங்குகளை அதிக லாபத்திற்கு விற்று இலாபம் அடைபவர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.
- SEBI:இந்திய பங்கு சந்தையை மேற்பார்வை செய்யும் அமைப்பு.
- இந்தியாவில் உள்ள பங்கு சந்தைகள் மொத்தம் 21 ஆகும்.
- 1932ல் வணிப கூட்டான்மைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.இதில் இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்டவர் பங்குபெறலாம்.
- வங்கி கூட்டாண்மை தொழிலில் 10பேர் சேரலாம். பிற தொழில்களில் 20 பேர் வரை சேரலாம்.
- பிரைவேட் லிமிட்டடில் 2 முதல் 50 பேர் வரை சேரலாம்.குறைந்தது இரண்டு இயக்குநர் இருப்பர்.
- ப்பளிக் லிமிட்டடில் 7 முதல் எவ்வளவு பேர் வேண்டுமானாலும் சேரலாம். குறைந்தது 3 இயக்குநர் இருப்பர்.
- பொதுக் கூட்டுறவுக்கு(Corporation)எடுத்துக்காட்டு நெய்வேலி லிக்னைட் கார்பரேஷன் , ரிசர்வ் வங்கி.
- மஞ்சள் நோட்டீஸ் என்பது ஒரு நபரிடம் பணம் இல்லை என்பதை குறிக்கும் ஆவணம்.
- தொழில் முனைவோரின் ஊதியம் லாபமாகும்.
- ஆர்டிக்கிள் ஆ∴ப் அசோசியேஷன் என்பது ஒரு கம்பெனியின் உள் கட்டமைப்பைப்பற்றி கூறுவதாகும்.
- பொருத்தங்கள்:

உருவப்பயன்பாடு - புதிதாக உருவாக்கல்
இடப்பயன்பாடு - போக்குவரத்து
காலப்பயன்பாடு - பருவத்திற்கு ஏற்றாற்போல் பண்டங்களை பாதுகாத்து பயன்படுத்துதல்.
உடைமை பயன்பாடு- பொருட்களின் உரிமை மாற்றம்.

NATRAJ INSTITUTE OF TNPSC

குழந்தை நல காப்பீடு - ஆயுள்காப்பீடு
இரயில் - பருமப் பொருட்களை வெகுதூரம் கொணடு செல்ல
கப்பல் - பலுவான பொருட்கள், பருப்பொருட்க வெகுதூரம் கொண்டுசெல்ல உதவுகிறது.
வான்வழி - பருமன் குறைந்த பொருட்களை விரைவில்கொண்டு செல்ல.
வழிச்சீட்டு - லாரி நிறுவனம்
கொடுப்பாணை - பண்டகத்திலிருந்து பொருளை எடுக்க ஆணை உரிமம்.
கப்பல் ரசீது - கப்பல் நிறுவனம்

<u>தடைகள்:</u>
ஆள்சார் தடை - உற்பத்தியாளரக்கும், நுகர்வோருக்கும் இடையில் உள்ள தடை
இடத்தடை - உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடைப்பட்ட தூரம்
காலத்தடை - உற்பத்திகாலத்திற்கும், நுகர்வு காலத்திற்கும் உள்ள தடை
இடர்பாட்டுத்தடை - சரக்குகளை பாதுகாக்கும் போது உண்டாகும் சேதத்தினால் ஏற்படும் தடை.
அறிவுத் தடை - நுகர்வோர் சந்தை நிலவரம் தெரியாமல் உள்ள தடை
நிதித்தடை - நிதிக் குறைவால் நுகர்வோருக்கும் உற்பத்தியாள ருக்கும் இடையே ஏற்படும் தடை.

உருவப் பயன்பாடு -டெய்லர்

<u>பொருத்தங்கள்:</u>
சட்டத்திற்கு மட்டுமான திட்ட ஆவணம் - வாகனக் காப்பீடு
பணச்சுமை காப்பீடு திட்ட ஆவணம் - கொள்ளைசார் திட்ட ஆவணம்
கட்டுணர் இடர் திட்ட ஆவணம் - கடல் சார் திட்ட ஆவணம்
தனிப்பொருட்கடை(speciality Store) - குறிப்பிட்ட பொருள் மட்டுமே கிடைக்கும்.

- துறைவாரி பண்டகசாலை (Dpeartmental store)என்பது எல்லா பொருட்கள் கிடைக்கும் கூட்டு கடையாகும்.
- மடங்குக் கடை என்பது ஒரே பொருட்கள் விற்கப்படும் கடையாகும்.
- தவனை விற்பனை என்பது முதல் தவணை செலுத்திய உடனே வாங்கியவர் பொருளின் உரிமையாளர் ஆகிறார்.

பொருளாதாரம் - வகையும் தொகையும்

- நாட்டின் உற்பத்தி பெருமளவுக்கு பொதுத்துறை வசம் இருந்தால் அது சமதர்மப் பொருளாதாரம்(Socialistic Economy)
- நாட்டின் உற்பத்தி பெருமளவுக்கு தனியார்துறை வசம் இருந்தால் அது முதலாளித்துவப் பொருளாதாரம்(Capitalistic Economy)
- நாட்டின் உற்பத்தியை பொதுத்துறை, தனியார் துறை இரண்டும் இணைந்து கவனிப்பதே கலப்புப் பொருளாதாரம்(Mixed Economy)
- இந்தியப் பொருளாதாரம் ஒரு கலப்புப் பொருளாதாரம்.
- வளர்ந்த நாடுகள்: அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, கனடா, இத்தாலி, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ்.
- வளரும் நாடகள்: இந்தியா , பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, பிரேசில்.
- வளரும் நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என்றும் அழைக்கப்படும்.

இந்தியாவில் பொருளாதார அமைப்புகள்

NATRAJ INSTITUTE OF TNPSC

- இந்தியாவில் நிதித்துறை அமைச்சகம்(Ministry of finance)நாட்டின் நிதிக் கொள்கையை (Fiscal Policy)முடிவு செய்கிறது.
- பட்ஜெட் எனப்படும் ஆண்டு வரவு செலவு அறிக்கையே நாட்டின் நிதிக் கொள்கையை எடுத்துக் காட்டும் முக்கிய அம்சமாகும்.
- பட்ஜெட்டுக்கு முந்தைய நாள் நிதி அமைச்சகம் முந்தைய நிதி ஆண்டின் பொருளாதார ஆய்வு அறிக்கையை (Economic survery)வெளியிடுகிறது.
- இந்தியாவின் பணக்கொள்கையை (Monetory Policy) இந்தியாவின் மத்திய வங்கியான இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்கிறது.
- நாட்டின் பணம் மற்றும் கடன் கொள்கையை (Monetory and Credit Policy)ஆறு மாதத்துக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது.
- ஒரு ரூபாய் நோட்டை மட்டும் மத்திய நிதி அமைச்சகம் வெளியிட (மத்திய நிதித்துறைச் செயலாளர் அதில் கையெழுத்திடுகிறார்) பிற ரூபாய் நோட்டுகளை மத்திய ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது.
- ஐந்தாண்டு திட்ட உருவாக்கத்தில் ஆலோசனைகளைக் கூறுவது திட்ட ஆணையத்தின் முக்கியப் பணியாகும்.
- ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு இறுதி அங்கீகாரம் அளிக்கும் பொறுப்பு தேசிய வளர்ச்சிக் கவுன்சிலிடம் உள்ளது.
- மத்திய அரசின் வரி வருவாயில் இருந்து மாநில அரசுக்கு ஒதுக்கவேண்டிய நிதி அளவை நிர்ணயிப்பது நிதி ஆணையமாகும்.
- நிதி ஆணையம் என்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் அமைப்பினைச் சார்ந்த நிறுவனம் ஆகும்.
- திட்ட ஆணையம் என்பது அரசியல் அமைப்பில் சொல்லப்படாத,(Extra Constitutional)பாராளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டாத,(Non Statutory)அமைச்சரவை தீர்மானத்தால் மட்டும் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.
- பிரதமருக்கு பொருளாதார பிரச்சனைகளில் அறிவுரை கூறும் பொருளாதார ஆலோசனை கவுன்சில் 2000ல் உருவாக்கப்பட்ட மற்றொரு அமைப்பாகும்.
- நாட்டின் முதலீடுகளை பற்றி முடிவு செய்ய முதலீட்டு ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நாட்டின் முக்கியப் பொருளாதாரக் கொள்கைகள், பிரச்சனைகள், சீர்திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்கு அவ்வப்போது பொருளாதாரச் சீர்திருத்த ஆலோசனைக் குழுக்கள் பொருளாதார வல்லுநர்கள் தலைமையில் அமைக்கப்படுகின்றன.

பொருளாதாரச் சீர்திருத்த ஆலோசனைக் குழுக்கள்

- தத் கமிட்டி - தொழில் உரிமக் கொள்கை
- நரசிம்மம் கமிட்டி - வங்கித் துறை சீர்திருத்தம்
- காட்கில் குழு- தலைமை வங்கித் திட்டம்(Lead Bank Scheme)
- ராஜ் கமிட்டி - வேளாண்மை விளைநில வரி(Agriculture holding tax)
- தாரப்பூத் கமிட்டி - முதலீட்டுக் கணக்கு மாற்றுதல்(Capital Account Convertability)
- அமித்ஹுசைன் கமிட்டி - சிறு தொழில் துறை(Small Scale Industries)
- மகஜன் கமிட்டி - சர்க்கரை ஆலைத்தொழில் பிரச்னைகள்
- ஹனுமந் ராங் கமிட்டி - உரத் தொழிற்சாலைகள்
- சப்தரிஷி கமிட்டி - உள்நாட்டு தேயிலைத் தொழிற்சாலை வளர்ச்சி
- அபிஜித் சென் கமிட்டி - நீண்ட கால உணவுக்கொள்கை
- கோஸ்வாமி கமிட்டி - தொழில்துறை நசிவு(Industrial Sickness)
- அசிம்தாஸ் குப்தா கமிட்டி - மதிப்புப் கூட்டு வரி(Value Add Tax)
- ஈரானி கமிட்டி - கம்பெனி சட்ட திருத்தங்கள்
- தவே கமிட்டி - அமைப்பு சாரா தொழிலாளர் ஓய்வூதியம் திட்டம்
- எஸ்.எல்.கபூர் கமிட்டி - சிறு தொழில் துறைக்கான கடன் வழங்கல் பிரச்சனைகள்
- ஆர்.வி.குப்தா கமிட்டி - வேளாண்மைத்துறை கடன் பிரச்சனை
- மல்ஹோத்திரா கமிட்டி - காப்பீட்டுத்துறை தனியார்மயமாக்கல்
- சதுர்வேதி கமிட்டி - எண்ணெய் நிறுவனங்களின் நிதி நிலைமை
- மஷேல்கர் கமிட்டி - வாகன எரிபொருள் கொள்கை
- கேல்கர் கமிட்டி - வரியமைப்பு கொள்கை

NATRAJ INSTITUTE OF TNPSC

- கொய்பூரிய கமிட்டி - வங்கியில் வாடிக்கையாளர்கள் சேவை முக்கியத்துவம்
- ராகேஷ் மோகன் கமிட்டி - உள் கட்டமைப்பு வசதிகள்.
- லக்த வாலா கமிட்டி - வறுமைக்கோட்டு வரையறை
- சுரேஷ் டெண்டுல்கர் கமிட்டி - வறுமைக் கோட்டிற்கான புதிய வரையறை
- கிரிக் பாரிக் கமிட்டி - பெட்ரோலிய பொருள் விரை நிர்ணயம்
- பகவதி கமிஷன் - வேலையில்லாத் திண்டாட்டம்(Unemployment)
- முராரி கமிட்டி - மீன்வளத் துறை பிரச்சனைகள்
- ராஜா செல்லையா கமிட்டி - வரிசீர்திருத்தம்.
- ஜா கமிட்டி - நேரடி வரி

தேசிய வருமானம்

Gross Kom,estic Product (gDp),Gross National Product(GNP),Net National Product (NNP), National Income (NI)

- நாட்டினுடைய தேசிய உற்பத்தி, தேசிய வருமானத்தோடு தொடர்புடையவைGDP,GNP,NNP போன்றவை ஆகும்.
- GDP என்னும் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு நாட்டு எல்லைக்குள் ஒரு நிதியாண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் அளிக்கப்பட்ட சேவைகளின் மதிப்பாகும்.
- GNP என்னும் மொத்த தேசிய உற்பத்தி ஒரு நாட்டினரால் ஒரு நிதி ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் அளிக்கப்பட்ட சேவைகளின் மொத்த மதிப்பாகும்.
- GNP என்பது GDP யுடன் நிகர வெளிநாட்டு வருமானத்தைக் கூட்டக் கிடைப்பதாகும்.
- NNP என்பது GNP ல் இருந்து தேய்மானத்தை(Depreciation)கழிக்கக் கிடைப்பதாகும்.
- நிகர தேசிய உற்பத்தி எனப்படும் NNP- யை காரணி விலையில் குறிப்பிட்டால் அதுவே தேசிய வருமானம்.(Mational Income)
- சந்தை விலையில் NNP என்பது உற்பத்தி விலையோடு மானியத்தைக் கூட்டி மறைமுக வரிகளைக் கழிப்பதன் மூலம் கிடைக்கிறது.
- தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்க கிடைப்பது தலா வருமானம்(Per Capita Income)
- தேசிய வருமானத்திற்கு பங்களிப்பு செய்யும் மூன்று பிரிவுகள்-முதன்மை, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை பிரிவுகளாகும்.
- முதன்மைப் பிரிவில்(Primary Sector)வேளாண்மை, கால்நடைவளம், வனத்துறை.மீன்பிடித்தல், சுரங்கம் போன்றவை அடங்கும்.
- இரண்டாம் நிலைப் பிரிவில்(secondary sector)தொழில்கள், மின்சாரம், எரிவாயு, கட்டுமானத்துறை போன்றவை அடங்கும்.
- பணிகள் துறை(Service Sectro)எனப்படும் மூன்றாம் நிலை பிரிவில் - வணிகம். போக்குவரத்து, வங்கி, காப்பீடு,ரியல் எஸ்டேட் போன்றவை அடங்கும்.
- தற்போது இந்தியாவில் தேசிய வருமானம் கணக்கிடுவதற்கு 1999-2000-ம் ஆண்டு அடிப்படை ஆண்டாகக் கொள்ளப்படுகிறது.
- இந்தியாவில் தேசிய வருமானம் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் மத்திய புள்ளியியல் நிறுவனத்தால் கணக்கிடப்படுகிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

நிதிக்கொள்கையும் பட்ஜெட்டும்

- நாட்டின் நிதிக் கொள்கைப்படி பட்ஜெட் உருவாக்கப்படுகிறது. நாட்டுக்கு வரக்கூடிய பல்வேறு வருமானங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 266 வது உறுப்புப்படி அமைந்துள்ள திரள் நிதியில் வரவு வைக்கப்படுகின்றன.
- இந்திய திரள்(Consolidated Fund of India)யில் இருந்து செலவளிக்கப்படும் பணம் பாராளுமன்றத்தின் ஒப்பதல் பெற்று செலவழிக்க வேண்டும்.
- ஆண்டுதோறும் நாட்டின் செலவுக்கான பாராளுமன்ற ஒப்புதலை பெறவும், வரிவிதிப்பதற்கான பாராளுமன்ற ஒப்புதலைப் பெறவும் அரசியல் அமைப்புச் சட்ட உறுப்பு 112-ன் படி ஆண்டு நிதிநிலை அறிக்கை, நிதிஅமைச்சரால் மக்களவையில் தாக்கல்செய்யப்படுகிறது.
- பட்ஜெட்டின் பகுதியில்வருவாய் வழிகளும் செலவினங்களும் குறிப்பிடப்படுபிறது.

- பட்ஜெட்டின் வரி விதிப்பு தீர்மானங்கள் நிதிச் சட்டமாகவும்,(finance Act)ஆண்டு செலவினத்திற்கான பாராளுமன்ற ஒப்புதல் பண ஒதுக்கீட்டுச் சட்டமாகவும்(Appropriation Act) பாராளுமன்ற கூட்டத் தொடரின்போது நிறைவேற்றப்படுகிறது.
- பட்ஜெட்டின் குறிப்பிடப்படும் செலவினங்கள் திட்ட செலவினம்,திட்டம் சராசெலவினம், வளர்ச்சி சார செலவினம்.
- வளர்ச்சி சாரா செலவினங்களில் கடனக்காக செலவிடப்படும் வட்டி , பாதுகாப்புச் செலவுகள், மானியங்கள் ஆகிய மூன்றும் அடங்கும்.
- வளர்ச்சி சாரா செலவினங்களில் மிகப்பெரிய செலவாக இருப்பது கடனுக்கு செலுத்தும் வட்டியாகும்.
- மொத்த செலவினத்தில் சுமார்15% திட்ட செலவினமாகவும், 35% திட்ட சராரா செலவினமாகவும், 40% வளர்ச்சி சராரா செலவினமாகவும் உள்ளது.

இருவகை நிதிகள்

- ❖ திரள்(consolidated Fund of India)அவசரகாலநிதி(Contingency fund of India)ஆகியவை இருவகை நிதிகள்.
- ❖ திரள் நிதியில் நாட்டின் வருவாய்கள் அனைத்தம் வரவு வைக்கப்படும்.
- ❖ திரள் நிதியில் இருந்து செலவளிக்கப்படும் செலவினங்கள் மானியக் கோரிக்கையாக(Demands for grant)மக்களவையில் வைக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.
- ❖ குடியரசுத் தலைவர், உச்ச, உயர் நீதிமன்ற நீதிபதிகள் போன்றோரின் (இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட) ஊதிய செலவினங்கள் வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் ஓட்டெடுப்பு நடத்தத் தேவை இல்லை.
- ❖ ஓட்டெடுப்பின்றி திரள் நிதியில் நேரடியாக சேர்க்கப்படும் செலவினங்களைச் சாட்டப்பட்ட செலவினங்கள்(Charged Expenditures)என்று அழைக்கிறோம்.
- ❖ எதிர்பாராத அவசர செலவுகளுக்கு குடியரசுத் தலைவர் அவசரகால நிதியில் இருந்து பணம் வழங்குகிறார்.
- ❖ அவசர கால நிதியில் இருந்து பெறப்பட்ட பணம் பாராளுமன்ற திரள் நிதியில் இருந்து பெறப்பட்ட மீள அவசரகால நிதிக்கு அளிக்கப்படுகிறது.

ஒரு ரூபாய் வரவும் செலவும்

- ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் அரசுக்கு ஒரு ரூபாய் எப்படி வருகிறது. ஒரு ரூபாய் எப்படி செலவாகிறது என்பது விளக்கப்படுகிறது.
- ஒரு ரூபாய் வரவு (2012 13 பட்ஜெட்)

கடன் மற்றும் இதர வருவாய் - 29 பைசா,
கார்பரேட் வரி - 21 பைசா,
வருமான வரி - 11 பைசா,
சுங்க வரி (Customs) - 10 பைசா,
கலால் வரி (Excise duty) - 11 பைசா,
கடன் சாரா முதலீட்டு வரவு - 2 பைசா,
சேவை மற்றும் இதர வரிகள் - 7 பைசா,
வரிசாரா வருவாய் - 9 பைசா,

- ஒரு ரூபாய் செலவு விவரம்(2012-13 பட்ஜெட்)

மத்தியத் திட்டச செலவு - 22பைசா,
கடன்களுக்கான வட்டி - 18 பைசா,
பாதுகாப்புச் செலவுகள் - 11 பைசா,
மானியங்கள் - 10 பைசா,
திட்டம் சாரா இதர செலவுகள் - 11பைசா,
வரி வருவாயில் இருந்து மாநில அரசுக்கு பங்கு - 17 பைசா,
மாநில, யூனியன் பிரதேச திட்டம் சாரா உதவி - 4 பைசா,
மாநில, யூனியன் பிரதேச திட்ட உதவி 7 பைசா,

வரியும் நெறியும்

- ▪ ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை அவரே தாங்க நேர்ந்தால், அந்த வரி நேர்முக வரி.
- ▪ ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றவருக்கு மாற்ற முடிந்தால், அந்தவரி மறைமுக வரி.
- ▪ வருமான வரி , சொத்து வரி, நிலவரி, தொழில் வரி போன்றவை நேர்முக வரிகள் (Direct Taxes)
- ▪ சுங்க வரி, கலால் வரி, விற்பனை வரி, கேளிக்கை வரி போன்றவை மறைமுக வரிகள்(Indirect Taxes)
- ▪ ஏற்றுமதி, இறக்குமதி பொருட்கள் மீது மத்திய அரசு விதிக்கும் வரி சுங்க வரி(Customa Duty).
- ▪ உற்பத்தி மீது மத்திய அரசு விதிக்கும் வரி கலால் வரி(Excise Duty)

NATRAJ INSTITUTE OF TNPSC

- வருமான வரி, சுங்க வரி, கலால் வரி போன்றவை மத்திய அரசு விதிக்கும் வரிகள்
- நிலவரி(Land Revenue), தொழில் வரி(Professional Tax),விற்பனை வரி(Sales Tax) போன்றவை மாநில அரசு விதிக்கும் வரிகள்.
- கேளிக்கை வரி(Entertainment Tax) திரைப்படங்களின் மீது மாநில அரசால் விதிக்கப்படுகிறது.
- ஒரு பொருளுக்கே இருமுறை வரிகட்டும் சூழல் ஏற்படுவதைத்தவிர்க்கவே மதிப்புக் கூட்டு வரி(Value Added Tax-VAT) அறிமுகமானது.
- மதிப்புப் கூட்டு வரியை அறிமுகப்படுத்திய நாடு பிரான்ஸ்.
- இந்தியாவில் முதன்முதலாக ஹரியானா மாநிலம்தான் மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்தியது.
- 2002-ம் ஆண்டு மாநில நிதி அமைச்சர்கள்மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி VAT கொண்டுவரப்பட்டது.
- இந்தியாவில் எட்டு மாநிலங்கள்தவிர, பிற மாநிலங்கள் ஏப்ரல் 2005 முதல் மதிப்புக்கூட்டு வரியை அறிமுகப்படுத்தின.
- தமிழ் நாட்டில் ஜனவரி 2007 முதல் மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- விவசாய வருமானத்துக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது.
- இதுவரை சில மாநில அரசுகள் மட்டுமே விவசாய வருமானத்துக்கு வரி விதித்துள்ளன.
- விவசாய வருமனத்துக்கு வரிவிதிப்பு குறித்து ஆராய 1972-ல் கே.என்.ராஜ் கமிட்டி அமைக்கப்பட்டது.
- ஜா கமிட்டெ(1997) மற்றும் ரெக்கி கமிட்டி (1991) ஆகியவை மறைமுக வரி விதிப்பு குறித்து ஆராய்ந்தன.
- நேர்முக வரி குறித்து 1971 ஆராய்ந்து கமிட்டி - வான்சு கமிட்டி.
- நேர்முக, மறைமுக வரிச்சீர்திருத்தங்கள் குறித்து ஆராய்ந்த கமிட்டி டாக்டர் ராஜா செல்லையா கமிட்டி (1991).
- டோபின் வரி என்பது சர்வ தேச பண பரிமாற்றத்தின்மீதனா வரி.
- GST எனப்படும் Goods and Services Tax (பொருள் மற்றும் சேவை வரி) - ஐ விரைவில் அமுல்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.
- GST ஐ அறிமுப்படுத்த அரசியல் சட்டதிருத்தம் தேவை.
- CENVAT எனப்படும் Central Value added Tax மத்திய அரசு விதிக்கும் கலால் வரிக்கான மாற்று வடிவமாகும்.

இந்தியாவின் திட்டமிடுதல் வரலாறு

- 1934-ல் எம்.விஸ்வேஸ்வாரய்யா 'Planned Economy for India' என்ற நூலை எழுதனார்.
- 1938-ல் இந்திய தேசிய காங்கிரஸ், நேரு தலைமையில் தேசிய திட்டக்குழுவை அமைந்தது.
- பாம்பே தொழிலதிபர்கள் 8 பேரால் 1944-ல் 'பாம்பே திட்டம்' வெளியிடப்பட்டது.
- காந்திய திட்டம்,1944-ல் வெளியிடப்பட்டது.
- மக்கள் திட்டத்தை, 1945-ல் எம்.என்.ராய் வெளியிட்டார்.
- சர்வோதயா திட்டத்தை 1950-ல் ஜெயபிரகாஷ் நாராயணன் வெளியிட்டார்.
- இந்தியா குடியரசானபின் 1950-ல் மார்ச் 15-ல் மதிய அமைச்சரவை தீர்மானதின் மூலம் திட்டக்கழு தொடங்கப்பட்டது.
- திட்டக்குழு அரசியல் சட்டம் சாரா அமைப்பு.
- திட்டக்கழு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டதல்ல.
- பிரதமர் திட்டக்குழுவின் தலைவராவார்.
- திட்டகுழுவின் துணைத்தலைவர் கேபினட் அமைச்சர் அந்தஸ்து உடையவர்.
- ஐந்து ஆண்டுத் திட்டவரைவை திட்டக்குழு உருவாக்குகிறது.
- ஐந்து ஆண்டுத் திட்டங்களை அங்கீகரிக்கும் அமைப்பு தேசிய வளர்ச்சி கவுன்சில்.
- தேசிய வளர்ச்சி கவுன்சில் 1952-ம் ஆண்டு ஆகஸ்டு 6-ம் நாள் ஏற்படுத்தப்பட்டது.
- மத்திய கேபினட் அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் , நிதியமைச்சர்கள் துணை நிலை ஆளுநர்கள் குடியரசுத் தலைவர் ஆட்சி நடக்கும் மாநிலங்களின் ஆளுநர்கள் ஆகியோர் தேசிய வளர்ச்சி கவுன்சிலின் உறுப்பினர்கள்.
- பிரதமரே தேசிய வளர்ச்சி கவுன்சிலின் அலுவல் சாரா தலைவர்.
- நாட்டின் வளங்களை மதீப்பீடு செய்தல், திட்டங்களை உருவாக்குதல், திட்டங்களின் முன்னுரிமைக்கேற்ப வளங்களை பகிர்ந்தளிக்கத் தீர்மானித்தல் ஆகியவை திட்டக்குழுவின் முக்கிய பணிகள்.
- மாநில முதலமைச்சர், மாநில திட்டக்குழுவின் தலைவராவார்.

ஐந்தாண்டுத் திட்டங்கள்

திட்டமும் காலமும்

NATRAJ INSTITUTE OF TNPSC

- முதல் ஐந்தாண்டுத் திட்டம் - 1951-56
- இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்- 1956-61
- மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1961-66
- நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் - 1969-74
- ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1974-79
- ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1980-85
- ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1985-90
- எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1992-97
- ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1997-2002
- பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் - 2002-2007
- பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் - 2007-2012
- பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் - 2012-2017

ஐந்தாண்டுத் திட்டங்களின் வளர்ச்சி விகிதங்கள்
( - விழுக்காட்டில்)

| திட்டம் | இலக்கு | அடையப்பட்டது |
|---|---|---|
| முதல் | 2.9% | 3.6% |
| இரண்டு | 4.5% | 4.3% |
| மூன்று | 5.6% | 2.8% |
| நான்கு | 5.7% | 3.3% |
| ஐந்து | 4.4% | 4.8% |
| ஆறு | 5.2% | 6% |
| ஏழு | 5% | 6% |
| எட்டு | 5.6% | 6.8% |
| ஒன்பது | 6.5% | 5.5% |
| பத்து | 8% | 7.8% |
| பதினொன்று | 9% | 8.2% (எதிர்பார்ப்பு) |

NATRAJ INSTITUTE OF TNPSC

ஐந்து ஆண்டுத் திட்டங்கள் - சில முக்கிய குறிப்புகள்

- முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.
- முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் - ஹெரால்டு டுமர் மாதிரி எனப்படுகிறது.
- முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தை பாதித்த முக்கிய காரணிகள் அகதிகள் வருகை, பணவீக்கம், உணவு பற்றாக்குறை.
- இரண்டாம் ஐந்து ஆண்டுத் திட்டம் - மெகலனோபில் மாதிரி எனப்படுகிறது.
- மெகலனோபிஸ் மாதிரியில் கனரக தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- தொழில் கொள்கை இராண்டாம் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் போது (1956) வெளியிடப்பட்டது.
- 1956-ம் ஆண்டு தொழிற் கொள்கை, இந்தியாவின் பொருளாதார அரசியலமைப்புச் சட்டம் எனப்படுகிறது.

- 1956-ம் ஆண்டு தொழிற் கொள்கை, தொழில் துறையில் பொது நிறுவனங்களின் ஒழுங்கையும், சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதையும் வலியுறுத்தியது.
- மெகலனோபில் மாதிரி,சோவியத் ∴பெஸ்டுமேன் மாதிதியை(1928) அடிப்படையாகக் கொண்டது.
- இந்தியப் பொருளாதாரத்தை தற்சார்புள்ள பொருளாதாரமாக உருவாக்குவதே மூன்றாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்.
- மூன்றாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் தோல்விக்கு சீனா ஆக்கிரமிப்பு (1962) இந்தோ - பாகிஸ்தான் போர் (1965). கடும் வறட்சி(1965-66) ஆகிய மூன்றும் முக்கிய காரணங்கள்.
- மூன்றாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் தோல்வியால் 1966-69 திட்ட விடுமுறை காலமாக அறிவிக்கப்பட்டது.
- திட்ட விடுமுறை காலத்தில் ஓராண்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- நிலையான வளர்ச்சி (ம) தன்னிறைவை நோக்கிய முன்னேற்றம் இரண்டும் நான்காம் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்.

நான்காம் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் காலத்தில் விலைவாசி 61%உயர்ந்தது.

- பங்களாதேஷ் அகதிகளின் வருகையும் (1971) பருவமழை பொய்த்ததும், நான்காம் ஐந்து ஆண்டுத் திட்டத்தை பாதித்த காரணிகள்.
- ஐந்தாம் ஐந்து ஆண்டுத் திட்டம் - வறுமை ஒழிப்பும், தன்னிறைவடைதலும் முக்கிய குறிக்கோள்கள்.
- ஐந்தாம் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் குறைந்தபட்ச தேவைக்கான தேசிய திட்டம் கொண்டுவரப்பட்டது.
- ஒன்பதாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் நோக்கம் வளர்ச்சியோடு கூடிய சமுதாய நீதி (Growth with Social Justice)மற்றும் சமத்துவம்.
- பதினொன்றாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் நோக்கம் உள்ளடக்கிய வளர்ச்சி.(Inclusive Growth)

பதினொன்றாவது ஐந்து ஆண்டுத் திட்ட முடிவில் நாட்டின் எழுத்தறிவு விகித்ததை 8.5%ஆக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கியும் பணக்கொள்கையும்

- இந்திய அரசாங்கத்தின் தலைமை வங்கி RBI.
- தனிநபர் கணக்கு தொடங்க முடியாத வங்கி RBI.
- அரசாங்கத்தின் வங்கி (Banker to the government) எனப்படுவதே RBI.
- மற்ற வங்கிகளைக் கட்டுப்படுத்துவதால், RBI கடைசி நிலை கடன் ஈவோன் (Lender of Last Resort)எனப்படுகிறது.
- அந்நிய செலாவணியின் பாதுகாவலன் (Custodian of Foreign Exchange)கடன்களின் கட்டுப்படுத்துநர்(Controller of Credit)என்பதும் RBI.

- RBI 1935-ல் தொடங்கப்பட்டு 1949-ல் நாட்டுடமை ஆக்கப்பட்டது.
- RBI-ன் தலைமை இடம் மும்பை.
- RBI வெளியிடும் ரூபாய் நோட்டுக்களில் RBI கவர்னரின் முத்திரை இருக்கும்.

| இந்திய ரூபாய்க்கான புதிய அடையாளக் குறியீடு |
|---|
| இந்திய ரூபாய்க்கான புதிய அடையாளக் குறியீட்டை மத்திய அமைச்சரவை ஜீலை 15, 2010-ல் ஏற்றுக்கொண்டது.அந்தக் குறியீட்டை வடிவமைத்தவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும் கவுகாத்தி ஐ.ஐ.டி உதவிப் பேராசிரியருமான உதயகுமார் தர்மலிங்கம் என்பவராவார்.ரூபாவை குறிக்கும் தேவநாகரி எழுத்து மற்றும் Ruppee என்பதன் முதல் எழுத்தான R ஆகியவற்றை இணைத்து புதிய ரூபாய் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. புதிய ரூபாய் சின்னத்தில் காணப்படும் சமநிலைக் குறி இந்திய மூவண்ணக் கொடியை நினைவூட்டுவதோடு இந்தியா பொருளாதார சமத்துவத்தை நோக்கி நகர்வதையும் குறிப்பாக உணர்த்துகிறது. |

வணிக வங்கிகள்

NATRAJ INSTITUTE OF TNPSC

- 1881-ல் தொடங்கப்பட்ட Oudh Commercial Bank தான் இந்தியர்களால் தொடங்கப்பட்ட முதல் வணிக வங்கி.
- இம்பீரியல் பாங்க் ஆ.்.ப் இந்தியா 1920-ல் தொடங்கப்பட்டது.
- இம்பீரியல் பாங்க் ஆ.்.ப் இந்தியா 1955-ல் State Bank of India(SBI) என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்டது.
- SBIஅதன் 7 சகோதர வங்கிகளோடு சேர்ந்து மொத்தம் 8 வங்கிகளாக உள்ளது.
- 1969-ல் 14 வங்கிகளும் 1980-ல் 6வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டன.
- வங்கிகளை தேசியமயமாக்கிய இந்திய பிரதமர் இந்திரா காந்தி.
- வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதின் முக்கிய நோக்கம் வங்கிகளை விவசாயிகளுக்கு கடன் வழங்கச் செய்வது.
- தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளினல் பஞ்சாப் நேஷனல் வங்கி, நியூ பேங்க் ஆ.்.ப் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.
- செட்யூல்டு வங்கி என்பது Reserve Bank of India(RBI) –ன் இரண்மாவது அட்டவணையில் இடம் பெற்ற வங்கி.
- தேசியமயமாக்கப்பட்ட மொத்த பொதுத்துறை வங்கிகள் -27.(8+14+6-1=27)
- குறைந்த பட்சம் 5 லட்சம் முதலீடு உள்ள வங்கிகளே செட்யூல்டு வங்கிகளாக முடியும்.
- வங்கிகளில் தனிநபர் தொடங்கும் கணக்க சேமிப்புக் கணக்கு (Savings Account)
- வங்கிகளில் நிறுவனங்கள் தொடங்கும் கணக்கு நடப்புக் கணக்கு (Current Account)
- நடப்புக கணக்கில் இருப்புக்கு மேல் பணம் எடுக்கும் வசதி (Over Draft Facility) உண்டு.
- வாடிக்கையாளர் காசோலையை முதன்முதலாக அறிமுகப்படுத்திய வங்கி Central Bank of India.
- இந்தியாவிலுள்ள மிகப்பெரிய தனியார் வங்கி ICICI.

வறுமைக்கோடு

- இந்தியாவில் வறுமைக்கோடு, ஒருவர் நாளொன்றுக்கு பெறும் கலோரி அளவினால் தீர்மானிக்கப்படுகிறது.
- நகர்ப்புறத்தில் நாளொன்றுக்கு 2,100 கலோரிகளுக்கு குறைவாகப் பெறுவோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளோர் என்படுவர்.
- கிராமப்புறத்தில் நாளொன்றுக்கு 2,400 கலோரிகளுக்கு குறைவாகப் பெறுயவோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளோர் எனப்படுவர்.
- இந்தியாவில் வறுமைக்கோடு, கணக்கீட்டிற்கான முறை லக்தவாலா கமிட்டியின் பரிந்துரைப்படி அமைந்தள்ளது.
- இந்தியாவில் வறுமைக்கோட்டிற்கு கீழே வசிக்கும் நபர்களை அதிகம் கொண்ட மாநிலம் பீகார்.

வேலை

- அமைப்பு வேலையின்மை (Structural Unemployment)உற்பத்தி திறன் குறைவினால் வருவது.
- வெளிப்படை வேலையின்மை (Open Unemployment)படித்த மற்றும் படிக்காத மக்களிடையே காணப்படும் வேலையின்மை.
- மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) உற்பத்திற்கு பங்களிப்பு செய்யாமல் ஒருவர் வேலையில் இருப்பதில்லை குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இருக்கும்.
- பருவகால வேலையின்மை (Seasonal Unemployment) விவசாயத் துறையில் வருடம் முழுவதும் வேலை இருப்பதில்லை குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இருக்கும்.
- இடைக்கால வேலையின்மை (Intermittent Unemployment) ஒருவர் ஒரு பணியில் இருந்து மற்றொரு பணிக்கு மாறும்போது ஏற்படுகிறது.
- உராய்வு வேலையின்மை (Frictional Unemployment) சந்தை நிலவர மாற்றத்தால் தேவை குறைவு மற்றும் புதிய தொழில் நுட்ப அறிமுகம் காரணமாக ஏற்படுகிறது.
- அமைப்புச் சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா பணிகளில் இருப்பவர்கள் 39.7 கோடி
- 2.8 கோடி பேர்கள் மட்டும் அமைப்புச் சார்ந்த பணியில் உள்ளனர்.
- 23.7 கோடி பேர் விவசாயத் துறையில் பணியில் உள்ளனர்.
- 2001-ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவில் மொத்தமுள்ள பணியாளர்கள் 40.2 கோடி.
- 31.3கோடி பேர் முக்கிய பணிகளிலும் 8.9 கோடி பேர் விளிம்பு நிலை பணிகளிலும் உள்ளனர்.
- அமைப்புச் சாந்த பணியில் உள்ளவர்களில் 17.8% பெண்கள். மொத்த பெண்கள் தொகையில் 25.6% பேர் பணியில் உள்ளனர்.

வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

- ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) 1978.

NATRAJ INSTITUTE OF TNPSC

- சுய வேலை வாய்ப்புக்கான கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டம் (TRYSEM )1979
- தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் - 1980.
- ஊரக பெண்கள் மற்றும் சூழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்(DWACRA)1982.
- ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம் -1983
- இந்திரா அவாஸ் யோஜனா - 1985
- ஜவகர் ரோஜ்கார் யோஜனா - 1989
- பிரதம மந்திரியின் ரோஜ்கார் யோஜனா -1993
- மில்லியன் கிணறுகள் திட்டம்- 1996
- கங்கா, கல்யான் யோஜனா - 1997
- சுவர்ண ஜெயந்தி கிராம சுவராஜ்கர் யோஜனா - 1999.
- பாரத் நிர்மான் யோஜனா - 2005
- தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டம் 2006-ம் ஆண்டு துவங்கப்பட்டது.
- கிராமப்புற தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு 100 நாள் வேலை வழங்குவது இதன் முக்கிய நோக்கம்.
- தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் (MGNREGP)பிப்ரவரி 2, 2006 -ம் ஆண்டு துவங்கப்பட்டது.
- தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்துடன் SGRY,NFFWP திட்டங்கள் உள்வாங்கப்பட்டன.

மக்கள் தொகை

- உலகில் மக்கள் தொகை மிகுந்த நாடு சீனா.
- உலகில் மக்கள் தொகை மிகுந்த இரண்டாவது நாடு இந்தியா.
- மால்தூலின் கருத்துப்படி மக்கள்தொகைப் பெருக்கம் பெருக்கல் விகிதத்தில் அதிகரிககிறது(Geometric progression). உணவுப் பொருள் உற்பத்தி கூட்டல் விகிதத்தில் அதிகரிக்கிறது(Arthimatic Progression).
- முதன்முதலில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்ட ஆண்டு1872.
- இந்தியாவின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 10 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.
- 2011-ம் ஆண்டு எடுக்கப்பட்ட சென்சஸ் சுதந்திரத்துக்குப் பின் எடுக்கப்பட்ட 7 வது சென்சஸ்(1872-லல் இருந்து 15-வது சென்சஸ்)
- இந்தியாவில் மக்கள் நெருக்கம் மிகுந்த மாநிலம் மேற்கு வங்காளம்.
- இந்தியாவில் மக்கள் நெருக்கம் குறைந்த மாநிலம் அருணாசலப் பிரதேசம்(17)
- யூனியன் பிரதேசங்களில் மக்கள் நெருக்கம் மிகுந்தது டெல்லி.(11,297)
- இந்தியாவின் மக்கள் நெருக்கம்: ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 382 பேர் (2011சென்சஸ்):325பேர் (2001 சென்சஸ்)

பாலின விகிதம்

- 100 ஆண்களுக்கு எவ்வளவு பெண்கள் உள்ளனர் என்பதே பாலின விகிதம்.
- ஆண்களைவிட பெண்கள் அதிகமுள்ள மாநிலம் கேரளா.(பாலின விகிதம் - 1084)
- பாலின விகிதம் குறைவாக உள்ள மாநிலம் ஹரியானா.(பாலின விகிதம்-877)

எழுத்தறிவு விகிதம்

- எழுத்தறிவு விகிதம் 7 வயதுக்கு மேல் கணக்தகிடப்படுகிறது. இந்தியாவில் எழுத்தறிவு விகிதம் 74.04% (2011சென்செஸ்): 64.83%(2001 சென்சஸ்)
- எழுத்தறிவு விகிதத்தில் முதலிடம் பிடிக்கும் மாநிலம் கேரளா (93.91%)
- எழுத்தறிவு விகிதத்தில் 2-வது இடத்தைப் பிடிப்பது லட்சத்தீவு (92.28%)
- எழுத்தறிவு விகிதத்தில் 3-வது இடத்தைப் பிடிப்பத மிஸோரம்(91.58%)
- 2011-ம் ஆண்டு சென்சஸ் படி தமிழிநாடு எழுத்தறிவு விகிதம் 80.33%
- குறைவான எழுத்தறிவு விகிதமுள்ள மாநிலங்கள் பீகார் (63.82% மற்றும் அருணாச்சலப் பிரதேசம்(66.95%)

,இந்தியாவின் சமூக - பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு திட்டங்கள்

- ஊரக வளர்ச்சிக்காக சமூக மேம்பாட்டுத் திட்டம் 1952-ல் கொண்டுவரப்பட்டது.
- 1975-ம் ஆண்டு மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், வறுமை ஒழிப்புக்காகவும் 20 அம்ச திட்டம் இந்திர காந்தியால் கொண்டுவரப்பட்டது.
- ஊரக மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனம் 1977-ம் ஆண்டு கொண்டவரப்பட்டது.

NATRAJ INSTITUTE OF TNPSC

- ❖ ஐந்தாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1974-79)வேலைக்கு உணவுத் திட்டம் 1977-78-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ ஊரக தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் 1986-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.
- ❖ பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டதின் கீழ் தொகுதி மேம்பாட்டுக்காக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.5கோடி தரப்படுகிறது.(1கோடி என்பது 2011-12 முதல் 5கோடி ஆக்கப்பட்டுள்ளது.)
- ❖ மகளிர் இடையே அஞ்சலக சேமிப்பை ஊக்குவிப்பதற்காக மகளிர் சம்ருதி யோஜனா 1993-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.
- ❖ சக்சார் பாரத் - படிக்கும் பாரதம் என்று திட்டம் பெண்கள் எழுத்தறிவு குறைவாக உள்ள மாவட்டங்களில் 2010-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ பெண்களின் நிலையை உயர்த்துவதற்காக பாக்கிய பால் கல்யாண் யோஜனா 1998-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ பெண்களுக்கு காப்பீட்டு பாதுகாப்பு திட்டமான ராஜ ராஜேஸ்வரி மகளிர் கல்யான் யோஜனா 1998-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ வறுமைக் கோட்டுக்கு கீழே வசிக்கும் மக்களுக்கு காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்கும் ஜன் பீமா யோஜனா 2000-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ மூத்த குடிமக்களுக்கு 10 கிலோ தானியங்கள் வழங்கும் அன்ன பூர்ன யோஜனா 1999-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு குறைந்த விலையில் மாதம் 35 கிலோ உயர்வு தானியத்தை வழங்க அந்தியோதைய அன்ன யோஜனா 2000-ல் கொண்டு வரப்பட்டது.
- ❖ கிராமப்புற சாலை வசதிகளை மேம்படுத்தும் பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா 2000-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி திட்டம் நகர் புறங்களில் சேரி வீடுகள் அமைப்பதற்காக 2001-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவப் பரிசோதனைக்கு வழி செய்யும் வந்தே மாதரம் திட்டம் 2004-ல் கொண்டுவரப்பட்டது.
- ❖ கருவுற்ற தாய்மார்களுக்கு பாதுகாப்பளிக்கும் ஜனனி சுரக்ஷா திட்டம் 2005-ல் கொண்டுவரப்பட்டது.

பங்கு வர்த்தகம்

- ▪ ஒரு நிறவனம் முதவீட்டை பெருக்கவும், தொழிலை விரிவுப் படுத்தவும் கடன் பத்திரம், பங்கு பத்திரங்களை வெளியிடுகிறது.
- ▪ ஒரு நிறுவனத்தின் கடன் பத்திரத்தை(Debentures)வாங்கி வைத்திருப்பவர்கள் அந்நிறுவனத்திற்கு கடன் ஈந்தவர்(Creditors) ஆவார்.
- ▪ ஒரு நிறுவனத்தின் பங்கு பத்திரத்தை வாங்கி வைத்திருப்பவர்கள் அந்நிறுவனத்திற்கு முதலாளிகளாகக் (Owners)கருதப்படுவர்.
- ▪ கடன் பத்திரம் வைத்திருப்பவர் ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை வட்டியாகப் பெறுவர்.
- ▪ பங்கு தாரர், கம்பெனியின் லாப நட்டத்துக்கு ஏற்றவாறு ஆண்டு தோறும் பலன் பெறுவார்.
- ▪ இந்தியாவில் பங்க வர்த்தகத்தை நிர்வகிக்க 1992-ல் SEBIதொடங்கப்பட்டது.
- ▪ SEBI- Security Exchange Board of India.
- ▪ BSI,Nifty போன்றவை பங்கு வர்த்தகக் குறியீட்டெண்கள்.
- ▪ BSI- Bombay Sensitive Index என்பது மும்பை பங்கு வர்த்தக நிறுவனத்தின் குறியீட்டு எண்.
- ▪ Nifty என்பது தேசியப் பங்கு வர்த்தக நிறுவனத்தின் குறியீட்டு எண்.
- ▪ Nifty- National Index Fifty
- ▪ எந்த நிறுவனத்தின் பங்குகள் லாபத்தில் செல்கின்றனவோ/ முன்னிலையில உள்ளனவோ, அவை Blue Chip கம்பெனிகள் எனப்படும்.
- ▪ BSI, 200க்கும் மேற்பட்ட Blue Chip கம்பெனிகளின் பங்குகளின் நிலைமையைப் பொறுத்து அமைவது.
- ▪ Nifty, மக்கியமான 50 Blue chip கம்பெனிகளின் பங்குகளின் நிலைமையைப் பொறுத்து அமைவது.
- ▪ தேசிய பங்கு வர்த்தக நிறுவனமும் (NSI) மும்பையிலேயே உள்ளது.
- ▪ பங்கு வர்த்தக துறையில் மும்பையில் Dalal Street, அமெரிக்காவின் Wall Street இரண்டும் புகழ் பெற்றவை.
- ▪ பங்கச் சந்தையில் பங்குளின் விலை குறைய போவதாக எண்ணி பங்குகளை விற்க முயல்பவரை கரடி (Bear) என்பர்.

NATRAJ INSTITUTE OF TNPSC

- பங்குச் சந்தையில பங்குகளின் விலை ஏறப் போவதாக எண்ணி பங்குகளை வாங்கிக் குவிப்பவர் காளை (Bull)எனப்படுவர்.
- பங்குகளை உடனுக்குடன் வாங்கி விற்பவர் மான்(**S**tag) எனப்படுவர்.

யூரோ கரன்ஸி

- ஐரோப்பிய யூனியன் நாடுகள் மாஸ்டிரிக் ஒப்பந்தப்படி தங்களுக்கு ஒரே நாணய முறையை ஏற்படுத்த முடிவு செய்தனர்.
- ஐரோப்பியாவின் பொது நாணயமான யூரோ 2000-ல் புழககத்திற்கு வந்தது.
- ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இங்கிலாந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து ஆகியன பொது கரன்ஸி முறையில் சேரவில்லை.

உலக வங்கியும் பன்னாட்டு பண நிதியமும்

- உலக வங்கி, பன்னாட்டு பண நிதியம் ஆகிற இரண்டும் பிரெட்டன் வுட் இரட்டையர்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- உலக வங்கி, பன்னாட்டு பண நிதியம் ஆகியவற்றின் தலைமையகங்கள் வாஷிங்டனில் உள்ளன.
- உலகவங்கியில் 186 நாடுகளும், பன்னாட்டு பண நிதியத்தில் 185 நாடுகளும் உறுப்பு நாடுகளாகும்.
- உலக வங்கி நீண்ட கால கடன்களை வழங்கி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவகிறது.
- உலகவங்கி IBRD,IDA,IFC,MIGA,ICSID என ஐந்து அங்கங்கள் கொண்டது.
- பன்னாட்டு பண நிதியம், ஒரு நாடு பொருளாதார சிக்கலில் இருக்கும் போது அந்த நாட்டுக்கு குறுகியகால கடன் வழங்கி அந்த நாட்டை மீட்டெடுக்கிறது.
- உலக வங்கி, பன்னாட்டு பண நிதியம் ஆகியவற்றின் நிதியாண்டு செப்டம்பர் மாதம் முதல் நாளில் தொடங்கும்.
- ஏதேனும் ஓர் உலக நாட்டின் பணத்திற்கு சர்வதேச சந்தையில் தேவை பெருகும் போது அந்தப் பணத்தை கடனாக தருவது உலக வங்கி . அந்தப் பணத்தை விற்பனை செய்வது பன்னாட்டு பண நிதியம் (Bank Lends and the Fund sells)
- பன்னாட்டு வணிக சமநிலையைப் பாதுகாப்பதும் உலக நாடுகளுக்கிடையே பண ஒத்துழைப்பை மேம்படுத்துவது ஆகியவை பன்னாட்டு பண நிதியத்தன் முக்கியப் பணிகள்.
- பன்னாட்டு பண நிதியத்தின் நாணயம் அல்லது அதன் முதலீட்டு வளம்(Capital Resources) special drawing Rights எனப்படுகிறது.
- பன்னாட்டு பண நிதியத்தின் பணமான SDR ஐ காகிதத் தங்கம் (Paper gold)என்கிறோம்.
- பன்னாட்டு பண நிதியத்தின் ஒவ்வோர் உறுப்பு நாடும் தங்கள் ஒதக்கீட்டுக்கு ஏற்ப பணம் அளித்து பன்னாட்டு நிதியத்தின் முதலீட்டு வளத்தை உருவாக்குகின்றன்.
- பன்னாட்டு பன நிதியத்தில் அதிக ஒதுக்கீடு கொண்டிருக்கும் நாடுகளில் இந்தியா 13 வது இடத்தில் உள்ளது.
- பன்னாட்டு பண நிதியத்தின் மொத்த ஒதக்கீட்டில் இந்தியாவின் பங்களிப்பு 1.9%
- பன்னாட்டு பண நிதியத்தின் கொள்கை முடிவுகளில் வாக்களிக்கும் உரிமை அதன் உறுப்பு நாடுகளுக்கு அவை கொண்டுள்ள ஒதுக்கீட்டைப் பொருத்து அமைகிது.
- பன்னாட்டு பண நிதியத்தின் உறுப்பு நாடுகள் தங்கள் ஒதுக்கீட்டிற்கான பணத்தை 25% நிலைச் சொத்தாகவும்(Reserve assets)மீதத்தை தங்கள் நாட்டுப் பணமாகவும் வழங்கலாம்.
- ஒவ்வொரு நாடும் தான் செலுத்த வேண்டிய BOP(Balance of Payment)-க்கு தனது நாட்டு இருப்பில் உள்ள அந்நிய செலாவணி போக அதிகப்படியான பணத்தை பன்னாட்டு பண நிதியத்திடமிருந்து தங்கள் ஒதக்கீட்டிற்கு ஏற்ப பெற்றுக்கொள்ளலாம்.
- பன்னாட்டு பண நிதியம் ஆண்டுதோறும் உலக போட்டி அறிக்கையை வெளியிடுகிறது.

பணமதிப்பு குறைப்பு

- உலகச் சந்தையிலுள்ள பணங்களின்மதிப்புகளுக்கு ஒப்ப நம் பணத்தின் மதிப்பைக் குறைப்பதற்கு பணமதிப்பு குறைப்பு என்று பெயர்.
- பணமதிப்பு குறைப்பு செய்வதன் மூலம் ஏற்றுமதி பெருகி இறக்குமதி குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.
- பாதக வணிகச் சமநிலையை சீர்செய்து சாதக வணிகச் சமநிலையை ஏற்படுத்த பணமதிப்பு குறைப்பு செய்யப்படுகிறது.
- இந்தியாவில் இதுவரை நான்கு முறை பணமதிப்பு குறைப்பு செய்ப்பட்டுள்ளது.

NATRAJ INSTITUTE OF TNPSC

➢ ஜீன் 1949(30.5%),ஜுன்1966(57%), ஜுலை 1,1991(9 %), ஜுலை3,1991(11%) ஆகிய ஆண்டகளில் இந்தியாவில் பணமதிப்பு குறைப்பு செய்யப்பட்டது.

➢ இந்தியாவில் முதன்முறையாக பணமதிப்பு குறைப்பு செய்யப்பட்டபோது நிதி அமைச்சராக இருந்தவர் ஜான் மாத்தாய்(1949).

➢ இந்தியாவில் இரண்டாவது முறையாக பணமதிப்பு குறைப்பு செய்யப்பட்ட போது நிதிஅமைச்சராக இருந்தவர் சச்சிந்தர சௌத்ரி(1966).

➢ இந்தியாவில் மூன்றாவது மற்றும் நான்காவது முறையாக பணமதிப்பு குறைப்பு செய்யப்பட்ட போது நிதி அமைச்சராக இருந்தவர் மன்மோகன் சிங்(1991)

➢ பணப் புழக்க ஒழிப்பு (Demonitization of Currency)என்பது கள்ளச் சந்தையை தடுப்பதற்காக அதிக மதிப்புள்ள பணத்தை பணப் புழக்கத்திலிருந்து வாபஸ் பெறுவதாகும்.

சிறப்பு பொருளாதார மண்டலங்கள்

- 2000-ம் ஆண்டுக்கான ஏற்றுமதி இறக்குமதி கொள்கையில் சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை அறிவிக்கப்பட்டது.
- சிறப்பு பொருடாதார மண்டலச் சட்டம் மே 2005-ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு பிப்ரவரி10, 2006முதல் நடைமுறைக்கு வந்தது.(SEZ ACT)
- சிறப்பு பொருளாதார மண்டலங்களின் வளர்ச்சிக்காக இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு சுங்க மற்றும் கலால் வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- தொடக்கத்தில் இந்தியாவில் முக்கிய ஏற்றுமதி மண்டலங்களாக இருந்த 8இடங்கள் சிறப்பு பொருளாரார மண்டலங்களாக அறிவிக்கப்பட்டன.
- கண்ட்லா, சூரத் (குஜராத்), சான்டா க்ரூஸ் (மகாராஷ்ட்ரா), கொச்சின் (கேரளா), சென்னை (தமிழிநாடு), நொய்டா (உ.பி). ∴பால்டா (மேற்கு வங்காளம்), விசாகப்பட்டினம் (ஆந்திரா) ஆகிய எட்டும் இந்தியாவில் தொடங்கப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்களாகும்.
- பின்வந்த ஆண்டுகளில் மேலும் 20 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் செயல்பாட்டுக்கு வந்தன.
- மேலும் 105 சிறப்பு பொரளாதார மண்டலங்களுக்கு கொள்கை ரீதியான அனுமதி கொடுக்கப்பட்டது.
- சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்க மத்திய , மாநில அரசின் பால்வேறு துறை ஒப்புதல்களும் ஒற்றைச்சாளர முறையில் வழங்கப்படுகின்றன.
- சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மத்திய விற்பனை வரிகளிலிருந்து விலக்கு பெறுகின்றன.
- 2004-05 ம் ஆண்டு சிறப்பு பொருளாதார மண்டலங்களின் வழியாக ரூபாய் செய்யப்பட்ட ஏற்றுமதி டுபாய் 22,500 கோடிகளைத் தாண்டியது.
- சிறப்பு பொரளாதார மண்டலங்களின் வளர்ச்சி 2004-05 □ம் ஆண்டில் 32%

ஆகவும் 2005-06-ம் ஆண்ணடகளில் 23% ஆகவும் இருந்தது.

- நாடு முழுவதும் நிறுவப்பட்ட 900-க்கும் மேற்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்களில் மூலம் 1,00,000-க்கும் மேற்பட்டோர் (40 % பெண்கள்)வேலைவாய்ப்பு பெற்றனர்.ச
- சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு தொழிலாளர் நலன் மற்றும் சுறறுச் சூழல் சட்டங்களிலிருந்து மட்டும் விலக்கு கிடையாது.
- சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காக விவசாய நிலங்கள் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படுவதற்கு மேற்கு வங்காளம் உள்ளிட்ட பல மாநிலங்களில் பெரும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.
- டாடா நிறுவனம் தனது நானோ கார் கம்பெனியை மேற்க வங்காளத்தில் நிறுவுவதற்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்பின் காரணமாக அந்த கம்பெனியை குஜராத்தில் நிறுவியது.
- சிறப்பு பொருளாதார மண்டலங்கள் இந்தியாவுக்குள் இருக்கும் வெளிநாட்டு பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

அந்நிய முதலீடு

➢ திட்டக்குழு 11-ம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் அந்திய முதலீட்டை 15பில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் எனக் கூறியுள்ளது.

➢ ஒன்பதாவது திட்டக் காலத்தில் அந்நிய முதலீடு 3.7 பில்லின் டாலாராகவும் 10வது திட்ட காலத்தில் (முதல் 4 ஆண்டுகளில்)5.4 பில்லியன் டாலராகவும் இருந்தது.

➢ வெளிநாட்டு முதலிட்டின் இரண்டு வகைகள் நேரடி முதலீடு (Direct Investment) மற்றும் நிறுவன் முதலீடு(Institutional Investment)ஆகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

➢ நாட்டின் பொருளாதார வலிமைக்கு நிறுவன முதலீட்டை விட நேரடி முதலீடே அதிகம் விரும்பப்படுகிறது.

<u>பணவீக்கம்</u>

- பொருள்களின் விலை தொடர்ந்து அதிகரிப்பதற்கு பணவீககம் என்று பெயர்.
- இந்தியாவில் பணவீக்க விகிதம் மொத்த விலை குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.
- பணவீக்கத்தை விலை உந்திய பணவீக்கம் ,(Cost Push Inflation)

தேவை இழுப்பு பணவீக்கம்(Demand Pull inflation)என இரு வகைப்படுத்தலாம்.

- தேவை இழுப்பு பணவீக்கம் ஏற்படுவதற்கு கருப்பு பணமழ் அரசாங்கத்தின் அதிக வளர்ச்சி மற்றும் திட்ட சாரா செலவுகளும் காரணமாகும்.
- சமீபத்தில் அரசாங்க செலவினங்கள் ஊதியம் மற்றும் மானியம் பெருமளவுக்கு அதிகரிப்பது தேவை இழுப்பு பணவீக்கத்திற்கு முக்கிய காரணமாகும்.
- கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு விவசாய உற்பத்தி குறைவு போன்றவை விலை உந்திய பணவீக்கத்திற்கு முக்கிய காரணமாகும்.
- தேவையை கட்டுபடுத்தியோ. உற்பத்தியை ஒழுங்குபடுத்தியோ அரசாங்கம் பணவீக்கத்தை கட்டுபடுத்துகிறது.
- அரசாங்க செலவினங்களை குறைத்தல். வரி மற்றும் சேமிப்பின் மூலம் நிதி திரட்டுதல் கடன் பத்திரங்களை குறைத்தல் போன்றவை பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் முக்கிய நடவடிக்கை ஆகும்.
- ரிசர்வ் வங்கி போன்றவற்றை மாற்றி அமைத்து பணவீக்கத்தை கட்டுபடுத்துகிறது. ரிசர்வ் வங்கியை குறைக்கும்போது.
- CRR-வணிக வங்கிகள் -ல் வைத்திருக்க வேண்டிய டெபாசிட்.
- SLR-வணிக வங்கிகள், தங்கள் தினசரி செயல்பாட்டுக்காக வைத்திருக்கும் பணம் மற்றும் உடனடியாக பணமாக்கத்தக்க பத்திரங்கள்.
- CRR-யை குறைப்பதன் மூலம் வங்கிகளின் கையிருப்பு பணம் குறைக்கப்படுகிறது.அதன் மூலம் பணவீக்கம் கட்டுபடுத்தப்படுகிறது.

**பாடம் - 1பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும்**

‘2500 ஆண்டுகளுக்கு முன்பு பொருளியல் அறிஞர்களால் விட்டுச் செல்லப்பட்ட பாரம்பரியமே பொருளாதாரச் சிந்தனையாகும். மனித அறிவின் அனைத்து நிலைகளையும் இதன் மூலம் எளிதாக அறிய முடியும்’ என்று பேராசிரியர் பெல் (Prof. Bell) கூறுகின்றார்.

**ஹீப்ரூஸ் பொருளியல் சிந்தனைகள்**

உலகிலேயே மிகப்பழமையான நாகரீகத்தை கொண்டவர்கள் ஹீப்ரூஸ். இவர்கள் பொருளியல் பிரச்சனைகள் பற்றி தனித்து பார்க்கவில்லை. மதத்திற்கும், ஒழுக்கநெறிகளுக்குமே இவர்கள் மிக முன்னுரிமை கொடுத்தார்கள். வேளாண்மைக்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுத்தார்கள். வட்டி, விலை, சொத்துரிமை மற்றும் முற்றுரிமை ஆகியவற்றைப் பற்றிய தெளிவான கருத்துகளைக் கொண்டிருந்தனர்.

ஹீப்ரூஸ் நாகரீகம் வேளாண்மையைச் சார்ந்த ஊரகப் பின்னணியைச் சார்ந்தது. ‘உழவுத் தொழிலைச் செய்பவன் மிகையான உணவைப் பெறுவான்’ என்பது இவர்களது பழமொழியாகும். ஏழாவது வருடம் நிலத்தை சாகுபடி செய்யமாட்டார்கள். அவர்கள் தரிசு நிலமாக விட்டுவிடுவர். நிலத்தின் செழுமையைப் மீளப் பெற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

ஜுப்ளி வருடம் என்பது 50-வது வருடமாகும். 50 ஆண்டுகளுக்குப் பிறக நிலத்தை வாங்கியவர்கள் நிலச் சொந்தக்காரருக்கே கொடுத்துவிட வேண்டும் என்பது ஜுப்ளி வருடத்தின் கருத்தாகும்.

**சேபத் (The Sabbath)**

‘சேபத்’ என்பது வாராந்திர விடுமுறை. ஓய்வு மற்றும் மகிழ்ச்சி நிறைந்த நாளாகும். வார இறுதி நாள் என்பது சமூக கண்டுபிடிப்பாகும்.

ஜவஹர்லால் நேருவின் கூற்றுப்படி, ‘இம்மக்களிடம் உருவ வழிபாடு காணப்படவில்லை. கடவுள்களுக்கு கோவில்கள் இல்லை’.

**இடைக்கால பொருளாதார சிந்தனைகள்**

ரோம் அரச வீழ்ச்சியடைந்த காலத்திலிருந்து (476AD) துருக்கியர்கள் கான்ஸ்டான்டி – நோபிலை கைப்பற்றிய (1453 AD) காலம் வரை இடைக்காலமாக கருதப்பட்டது. இடைக்கால சமுதாயம் நிலப் பண்ணை முறை (Feudal System) யைச் சார்ந்தது. இடைக்கால மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தனர்.

**வணிகவாதம் (Mercantilism)**

NATRAJ INSTITUTE OF TNPSC

15-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டுவரை ஐரோப்பிய அரசால் பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கருத்துக்களும் கொள்கைகளும் வணிக வாதம் எனப்பட்டது. வாணிபத்தின் மூலம் நாட்டின் செல்வத்தை உயர்த்தமுடியும் என்று நம்பினர். வணிகவாதம் என்பது பொருளியல் மூலம் வலுவான அரசை உருவாக்குவதேயாகும்.

அலெக்ஸாண்டர் கிரேயின் கூற்றுப்படி, 'வணிகவாதத்தினரின் அடிப்படைக் கொள்கையானது ஏற்றுமதியை அதிகரித்தலும், இறக்குமதியை குறைத்தலும் ஆகும்.'

வணிகவாதத்தினரின் கூற்றுப்படி, வாணிபமே மிக முக்கியமான தொழிலாகும். தொழில், உற்பத்தித் துறைகள் இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. வேளாண்மை மிகக் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது.

**இயற்கைவாதம் (Physiocrates)**

பிரான்சு நாட்டில் உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கோட்பாட்டிற்கு இயற்கைவாதம் என்று பெயர். இயற்கைவாதம் 'இயற்கையின் விதி' இயற்கைவாதம் என்பது வணிகவாதத்திற்கு எதிரான பிரான்சு மக்களால் ஏற்பட்ட புரட்சியாகும்.

இயற்கைவாதத்தினர் இயற்கை நியதியை உருவாக்கினர். இயற்கை நியதி என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட இலட்சியக் கொள்கை (Ideal Order) என்று கருதினர்.

நாடுகளின் செல்வமும், அவற்றின் இயல்புகள் பற்றியும் ஆடம் சுமித் அக்கரை கொண்டிருந்தார். முதல் பொருளாதார முன்னேற்ற அறிஞர் என்று அழைக்கிறோம். டேவிட் ரிகார்டோ, பொருளாதார பங்கீட்டின் பிரச்சனைகளில் ஆர்வம் கொண்டிருந்தார். மக்கள்-தொகைக் கோட்பாட்டை உருவாக்கிய மால்தஸ். நாடுகளின் செழுமை பற்றியும் வறுமை பற்றியும் அறிவதில் ஆர்வம் கொண்டிருந்தார். J.S. மில், தனித்தன்மையிலும், சமதர்மத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தார். இவர் பொருளாதார பங்கீட்டில் சமூக சீர்திருத்தத்தை ஆதரித்தார்.

**மார்க்கிசிய கொள்கை (Karl Marx)**

கார்ல் மார்க்ஸ் (1818-1883) அறிவியல் சமதர்மத்தை தோற்றுவித்தார். 'வர்க்கப் போராட்டமே வரலாறு ஆகும்' என்று கார்ல் மார்க்ஸ் கருதுகின்றார். ரஷ்யாவிலும், சீனாவிலும், சமதர்ம அரசு உருவாக மார்க்ஸின் அறிவுரைகளே காரணமாகும்.

பொருளியல் வாழ்க்கை என்பது மாற்றமும் முன்னேற்றமும் கொண்ட ஒன்று என்று J.A. சும்பீட்டர் (1883-1993) கருதுகின்றார். பொருளாதார முன்னேற்றத்தில் புத்தாக்கத்தை புனையும் தொழில் முனைவோன் முக்கியப் பங்கு வகுப்பதாகக் கருதுகின்றார்.

**கீன்சின் புரட்சி (The Keynesian Revolution)**

J.M. கீன்சு புதிய பொருளாதாரத்தின் தந்தையாக கருதப்படுகின்றார். 1920 மற்றும் 1930ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார பெருமந்தத்தால் முதலாளித்துவ நாடுகள் பாதிக்கப்பட்டன. இந்நெருக்கடியில் இருந்து மீள, அரசின் பங்கு அதிகமாக இருக்கவேண்டும் என்றும், துணிகரமான நிதிக் கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்று எடுத்துக் கூறினார். அமெரிக்காவின் புதிய கொள்கை கீன்சின் கொள்கை அடிப்படையிலேயே தோன்றியதாகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**பொருளாதார வளர்ச்சியும், முன்னேற்றமும்**
(Economic growth and Development)

பொருளாதார வளர்ச்சியை ஆர்தர் லூயிஸ் என்பவர் மக்கள் தொகையின் தலா உற்பத்தியின் வளர்ச்சி' என்று வரையறுக்கிறார்.

பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டு வருமானத்தில் தனி நபரது பங்கு அதிகரிப்பதேயாகும்.

பேராசிரியர் ஆர்தர் லூயிஸ் என்பவரது கருத்துப்படி பொருளாதார வளர்ச்சியானது மூன்று விதமான காரணிகளினால் கட்டுப்படுத்தப்படும். அவை:

1. பொருளாதார நடவடிக்கை
2. அறிவுத் திறன் வளர்ச்சி
3. மூலதனத்தின் வளர்ச்சி

வேறுவகையாக கூறின், இம் மூன்று காரணிகளும் உழைப்பு, தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் மூலதனத்தை குறிக்கும். இதனோடு நிலம் அல்லது வளங்களை சேர்த்துக் கொள்ளலாம்.

பொதுவாக கூறின், ஏழ்மை நிலை. வேலையில்லா பிரச்சினை, ஏற்றத் தாழ்வுகள் போன்றவற்றை குறைப்பதால் மட்டுமே ஒரு நாடானது முன்னேற்றம் அடைவதாக கருதப்படும். இல்லை எனில், தலா வருமானம் இரண்டு மடங்கு அதிகரித்தாலும் பொருளாதாரம் வளர்ந்தது என கூறமுடியாது.

ஆகவே வளர்ச்சி என்பது வாழ்க்கை தரத்தின் உயர்வு சார்ந்ததாகும். அதாவது மக்கள் அதிக வருமானம், நல்ல கல்வி ஆரோக்கியமான வாழ்க்கை, சத்துள்ள உணவு, வறுமையற்ற நிலை, சமவாய்ப்பு நிலை ஆகியவற்றை பெற்றிருக்க வேண்டும். மைக்கேல் P. தோடரோ மற்றும் ஸ்டி∴பன். C. ஸ்மித் என்போரின் வாக்குப்படி முன்னேற்றம் என்பது 'பல பரிமாண முறைகளில் ஏற்படும் பெரும் மாற்றங்கள் சமுதாய அமைப்புகளிலும் மக்களது மற்றும் நாட்டு நிறுவனங்களின் இயல்புகளில் ஏற்படும் மாற்றங்கள், பொருளாதார வளர்ச்சி வேகம், ஏற்றத்தாழ்வின் வீழ்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றை குறிக்கும்.

W.W. ரோஸ்டோவ் என்பவர் அமெரிக்காவை சேர்ந்த ஒரு பொருளியல் இந்த ஐந்து கட்டங்களை

1. பழமையான சமுதாய அமைப்பு முறை
2. மாறும் நிலையில் உள்ள சமுதாயம்

3. பொருளாதார மேலெழு நிலை
4. பொருளாதார முதிர்ச்சிக்கான செயலூக்கம்
5. பொது மக்களின் பேரளவு நுகர்ச்சிக் காலம்.

பழமையான சமுதாய அமைப்பு முறையானது பாரம்பரிய மற்றும் பழக்க வழக்கங்களினால் கட்டப்பட்டது. இங்கு பொருளாதார பின்தங்கிய நிலை நிலவும். ஏழ்மையான நாடுகள் இதற்கு சிறந்த உதாரணம் ஆகும்.

மாறும் நிலையில் உள்ள சமுதாய அமைப்பில் பொருளாதார மேலெழு நிலை உருவாக்கப்படும். இந்நிலையில் பாரம்பரிய பழக்கவழக்கங்களின் சக்திகள் குறைந்து செல்லும். ஆனால் பொருளாதார ஊக்குவிப்பு இருக்கும். சமூக கட்டமைப்புக்களிலும், உருவங்களிலும் அடிப்படை வசதிகளிலும் முன்னேற்றம் ஏற்படும். இந்த மேலெழு நிலை அடைந்தவுடன், நிலையான சுய வளர்ச்சி சமுதாயத்தில் ஏற்படும்.

சமுதாய மேலெழு நிலை என்பது ஒரு சமுதாயம் வேளாண்மையை தலையாய தொழிலாக இருப்பதை விட்டுவிட்டு அதற்கு மாறாக தொழில்களை தலையாய வேலை வாய்ப்பாக மாற்றிக் கொள்ளுதலை குறிக்கும்.

மேலெழு நிலையை சில நாடுகளில் இரயில்வே துறை மற்றும் பாதுகாப்பு துறைகளின் வாயிலாக பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த மேலெழுநிலைக்கு பின் பொருளாதாரமானது தன் நிறைவு அடைந்து முழு வளர்ச்சி நிலையை எட்டுகிறது. இந்த நிலையில் அரசு சில அடிப்படை தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. உற்பத்தி வளங்கள் நிறைவாகவும். பொருள்களின் உற்பத்தி அதிகமாகவும் இருப்பதனால் அந்நாட்டு அரசு, நாட்டினை வலுப்படுத்த (அ) பாதுகாக்க அவற்றை பயன்படுத்துவதா (அ) மக்களின் நலன்களை உயர்த்த பயன்படுத்துவதா என முடிவெடுக்க வேண்டும்.

கடைசி நிலையானது, மக்களின் பெரும் அளவு நுகர்ச்சி நிலை எனப்படும். இந்நிலையில் பொதுமக்கள் அனைத்து வகைப் பொருள்களையும், குறிப்பாக அழியாப் பண்டங்களான கார் போன்ற வசதிப் பண்டங்களையும் ஆடம்பர பண்டங்களையும் பெரும் அளவில் நுகரத் தொடங்குவார்கள்.

**பாடம் - 2 மக்கள் தொகை (POPULATION)**

**மக்கள்தொகை – விளக்கம் (Meaning)**

மக்கள்தொகை என்பது, ஒரு நாட்டில் (அ) ஒரு பகுதியில் வாழும் ஒட்டுமொத்த மக்களின் எண்ணிக்கையாகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**மக்கள்தொகையை தீர்மானிக்கும் காரணிகளின்**

மக்கள்தொகையை தீர்மானிக்கும். அடிப்படை காரணிகளாவன

**பிறப்பு வீதம் (Birth rate)**

பிறப்பு வீத அதிகரிப்பால், மக்கள்தொகையிலும் அதிகமான பெருக்கத்தையே காணமுடியும்.

பிறப்பு வீதம் கீழ்காணும் காரணிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

1. திருமண வயது
2. குழந்தை பிறப்பு அதிகரிப்பு
3. சமூக பழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள்
4. படிப்பறிவின்மை மற்றும் பிறப்பு கட்டுப்பாடு முறைகள் பற்றி அறியாமை.

ஆகியவற்றின் மூலமாக பிறப்பு வீதம் உயர்ந்து, மக்கள் தொகையானது பெருமளவுக்கு அதிகரிக்கிறது.

**இறப்புவீதம் (Death Rate)**

மக்கள்தொகை பெருக்கத்திற்கு மற்றொரு காரணம் குறைவான இறப்பு வீதமேயாகும். பசி, பட்டினி, சத்துள்ள உணவ கிடைக்காமை, தொற்று நோய் போதிய மருத்துவ, சுகாதார வசதி குறைவு போன்ற காரணங்களால் இறப்பு வீதம் அதிகரிக்கிறது. மறுபுறமாக நோக்கும்போது, சத்துள்ள உணவு, தூய குடிநீர், மேம்பட்ட மருத்துவ வசதிகள், துப்புரவு வசதிகள், தொற்று நோய் ஒழிப்பு போன்றவற்றின் விரிவாக்கத்தால் இறப்பு வீதமானது குறைவடைகிறது.

**குடிப்பெயர்ச்சி (Migration)**

வெளி குடிப் பெயர்ச்சியானது மக்கள் தொகை பெருக்கத்தை குறைக்கின்றது. உள் குடிப் பெயர்ச்சியானது மக்கள் தொகை பெருக்கத்தை அதிகரிக்கின்றது.

மக்கள்தொகை வெடிப்பானது, அச்சுறுத்தக்கூடிய, அதிவேகமான மக்கள்தொகையின் வளர்ச்சி வீதத்தையே குறிக்கும்.

**வெடிப்பிற்கான காரணங்கள்**

**1. அதிக பிறப்பு வீதம்**

குடும்ப நலம் பற்றிய விளம்பரங்கள், குடும்பல நலவாழ்வு திட்டங்கள், மக்கள்தொகை பற்றிய கருத்தரங்குகள் மூலமே இப்பிறப்பு வீதத்தை குறைக்க முடியும்.

**2. குறைவான இறப்பு விதம்**

மருத்துவ துறையில் ஏற்பட்ட முன்னேற்றமும், ஆட்கொள்ளி நோய்களாகிய, அம்மை, பிளேக், டைபாய்டு ஆகிய நீண்டகால நோய்கள் ஒழிந்துவிட்ட நிலையிலும் மக்கள்தொகை பெருகக் காரணங்களாகும். சுத்தம், சுகாதார வசதிகள். குழந்தை பிறப்புக்கு முன், குழந்தை பிறப்புக்குபின் உள்ள பராமரிப்புக்கள், குழந்தைகளின் இறப்பு வீதத்தை குறைக்கின்றது.

**3. இளவயது திருமணம்**

இந்தியாவில் இள வயதிலேயே திருமணம் செய்து கொள்வது வழக்கமாக இருந்து வருகின்றது. இந்திய பெண்களின் திருமண வயது 18 அக உள்ளது. இது பிற நாடுகளோடு ஒப்பிடும்போது மிக குறைவானதே. மற்ற நாடுகளின் திருமண வயதானது 23 முதல் 25 ஆகும். இதனால் மகப்பேறு காலம் அதிகரிக்கிறது. பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

**4. சமுதாய மற்றும் சமயக் காரணங்கள்**

இந்தியாவில் ஒவ்வொரு தனி மனிதனும் கட்டாயம் திருமணம் செய்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அது ஒரு இன்றியமையாத சமூக கடமையாகும். கூட்டுக் குடும்பத்தில் தனிநபரின் பொறுப்புக்கள் உணரப்படவில்லை. மாறாக மொத்த நபர்களின் சமநிலையான நுகர்வுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. அநேக மக்களின் ‘ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண் குழந்தை’ என்ற எதிர்பார்ப்பினால் குடும்பத்தின் அளவானது அதிகரித்துச் செல்கிறது.

**5. வறுமை**

வறுமையும், மக்கள்தொகை பெருக்கத்திற்கு ஒரு காரணமாக உள்ளது. குழந்தைகள், ஒவ்வொரு குடும்பத்திலும், வருமானம் ஈட்டக்கூடிய பெற்றோர்களுக்காக வேலைகளுக்குச் சென்று உதவி செய்ய வேண்டியுள்ளது. பள்ளிக்கு செல்லும் வயதில் வேலைக்குச் சென்று பொருள் ஈட்டுவதால் குழந்தைகள் குடும்பத்தின் சொத்தாகக் கருதப்படுகிறார்கள். கூடுதலாக பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைகளும் வருமானம் ஈட்டும் உறுப்பினர்களாவர். இது அவர்களின் குடும்ப வருமானத்திற்கு துணை புரியும்.

**6. வாழ்கைத்தரம்**

மக்கள் தொகையில் பெரும்பாலானோர் கல்வி அறிவு அற்றவர்களாக இருப்பதனால் குடும்ப கட்டுப்பாட்டின் அவசியத்தை அவர்கள் புரிந்துக்கொள்ள இயலவில்லை. சிறிய அளவான குடும்பம் நல்ல வாழ்க்கை தரத்தை அனுபவிக்க உதவுகிறது என்பது அவர்களுக்கு தெரியாததொன்றாகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**7. கல்வியறிவின்மை**

கல்வியறிவின்மை அதிக விகிதத்தில் நிலவி வருவதால், மக்கள் பேரளவு அறியாமையில் இருந்துக்கொண்டு மூட சமூக, பழக்க வழக்கங்களிலும் மற்றும் இளவயதில் திருமணம், ஆண் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மோகங்களினால் நிறைந்துள்ளார்கள். இதன் விளைவாக மக்கள் தொகை பெருக்கம் உயர்ந்த வீதத்தில் இருக்கிறது.

**மக்கள்தொகை வெடிப்பு எவ்வாறு பொருளாதார வளர்ச்சியை தடை செய்கிறது.**

**1. உணவுப் பற்றாக்குறை**

இந்திய மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே இருப்பதால், அதற்கேற்ற விவசாய உற்பத்தியில் சமவிகித வளர்ச்சி இல்லையெனில் கடுமையான உணவுப் பற்றாக்குறை பிரச்சினையை சந்திக்க வேண்டி நேரிடும்.

**2. உற்பத்தி செய்யாத நுகர்வோர் சுமை**

குழந்தைகளும் முதியோரும் உற்பத்தியில் ஒரு பங்கினையும் வகிக்காமல், பொருள்களை மட்டும் நுகர்கிறார்கள். இவ்வாறாக குழந்தைகள் மற்றும் முதியோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது சத்துணவு, மருந்துவசதி, பொது சுகாதாரம் மற்றும் கல்விப் போன்ற அடிப்படை தேவைகள் கவனம் செலுத்தப்படாமலேயே பெருமளவில் கிடக்கின்றன.

**3. தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானம் குறைதல்**

வளரும் மக்கள்தொகை தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானத்தின் சராசரி வளர்ச்சி வீதத்தை தடைச் செய்கிறது.

**4. சேமிப்பும் முதலீடும் குறைதல்**

மக்கள்தொகை வளர்ச்சி சேமிப்பையும் மற்றும் முதலீட்டின் திறனையும் குறைக்கிறது.

**5. மூலதன ஆக்கம் குறைவு**

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு மூலதன ஆக்கம் மிக மிக முக்கியம். மூலதன ஆக்கம், சேமிப்பு மற்றும் முதலீட்டை சார்ந்துள்ளது. அதிகவேக மக்கள் தொகை வளர்ச்சி இருக்கும்போது, இம் மூலதன ஆக்கம் ஏற்பட வாய்ப்பில்லை. இதன் விளைவாக வேலையின்மையும், குறைவேலைவாய்ப்பும் அதிகரிக்கிறது.

**6. வேலையின்மை (மற்றும்) குறைவேலையுடமை**

வளரும் மக்கள் தொகை வேலையில்லா திண்டாட்டத்தை மேலும் அதிகரிக்கிறது. மக்கள்தொகை வளரும்போது, உழைப்பும் அதிகரிக்கிறது. இந்த அதிகரிக்கும் உழைப்பு சக்தியை நிலவும் பற்றாக் குறையான வேலை வாய்ப்புக்கள் முழுமையாக ஈர்த்துக்

கொள்ள இயலவில்லை. இதன் விளைவாக நிறைய மக்கள் வேலையில் அமர்த்தப்படாமலும், குறைவான வேலையில் அமர்த்தப்பட்டும் இருக்கிறார்கள்.

**7. மகளிரின் உழைப்பு வீணாதல்**

அடிக்கடி குழந்தை பெருவதால், நீண்ட காலத்தில், உற்பத்தி நடவடிக்கைகளில் பெருமளவு மகளிரால் வேலை செய்ய இயலவில்லை. இதனால் மனிதவளம் வீணாகிறது.

**8. உழைப்பின் உற்பத்தித்திறன் குறைவு**

மக்கள்தொகை பெருக்கமானது நாட்டுவருமானம் மற்றும் தனி நபர் வருமானத்தை பெருமளவில் பாதிக்கின்றது. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரமானது குறைகிறது.

**9. சமூக நல திட்டத்தின் மீது அதிக செலவு**

மருத்துவ பராமரிப்பு, பொது சுகாதாரம், குடும்ப நலன், கல்வி, வீட்டு வசதி போன்ற சமூக செலவுகளின் தேவையானது அதிகரிக்கிறது.

**10. வேளாண்மையில் பின்தங்கிய நிலை**

ஐந்தாண்டு திட்டங்கள் மூலமாக வேளாண்மையில் பல வெற்றிகரமான முன்னேற்றங்களை செய்திருந்தாலும் விவசாய உற்பத்தியானது, மக்கள்தொகை வளர்ச்சியோடு ஒப்பிடும்போது மிக குறைவான நிலையிலேயே இருந்து வருகிறது.

**11. வளர்ச்சியற்ற தொழில்நிலைகள்**

பெரும் மற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலதனம் பெருமளவில் தேவைப்படும் போது இந்திய மூலதன ஆக்க வீதமோ மிகக் குறைவாக உள்ளது. நம் நாட்டின் தொழில் துறை வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்ய பொது முதலீடு போதுமானதாக இல்லை.

**12. அரசு மீது நிதிச் சுமை**

சமூக நல திட்டங்களுக்காகவும், வறுமையை அகற்றுவதற்காகவும் வளங்களைத் திரட்டி வறுமையை அகற்றுவதற்கு நிதியாக்கம் செய்ய வேண்டியுள்ளது. தூய்மையான குடிநீர் வழங்குவதற்கும், குடியிருப்பு வசதி ஏற்படுத்தி தருவதற்கும் நல்ல சுகாதார சூழ்நிலையை உருவாக்குவதற்கும், மருத்துவ வசதி செய்துதருவதற்கும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் பெரும் பொருள் செலவை அரச மேற்கொள்ள வேண்டியுள்ளது.

NATRAJ INSTITUTE OF TNPSC

**மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தும் வழிகள்**

**1. தம்பதிகளின் பாதுகாப்பு வீதம் (Couple Protection Rate - CPR)**

இந்த வீதத்தை அதிகரிப்பதினால், குடும்ப கட்டுப்பாட்டு முறைகளை கையாளும் தம்பதிகளின் விகிதம் அதிகரிக்க வேண்டும்.

**2. குழந்தைகள் இறப்பு வீதம் (Infant Mortality Rate - IMR)**

இவ்வீதம் மேலும் குறைக்கப்பட வேண்டும். ஏனெனில் குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் இறக்கும்போத, பொது மக்கள் சிறு குடும்ப நெறியினை பின்பற்ற ஊக்கமளிக்கும்.

**3. நாடு தொழில்மயமாதல்**

நிலத்தை சார்ந்திருக்கும் மக்கள் தொகை அழுத்தத்தை குறைக்க வேண்டும். கிராமப் புறங்களில் குடிசை மற்றும் சிறு தொழில்களை, அதிகபட்ச மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக, வளரச் செய்தல் வேண்டும்.

**4. பெண்களின் எழுத்தறிவு வீதம் மற்றும் கல்வியை அதிகரித்தல்**

கல்வி கற்ற மக்களுக்கு தங்களுடைய குடும்ப அளவினைப் பற்றி அதிகப் பொறுப்பு வாய்ந்த கண்ணோட்டத்தைப் பெற்றுள்ளனர். அவர்கள் சிறு குடும்பத்தின் நன்மைகளைப் பற்றியும். குடும்ப கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்துவதின் வாயிலாகவும் குடும்ப அளவினை குறைக்க முடியும் என்ற கருத்துக்களை புரிந்து கொண்டு செயல்படுவார்கள். இது பிறப்பு வீதத்தைக் குறைக்கும்.

**5. காலம் தாழ்த்தி திருமணம் செய்தல்**

காலம் தாழ்த்தி திருமணம் செய்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும். குறைந்தபட்ச ஆண்களின் திருமண வயது 21 மற்றும் பெண்களின் வயது 18 என்ற வயது வரம்பை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும்.

**6. சட்ட ரீதியான நடவடிக்கை**

குழந்தைத் திருமணத்தையும் ஒரே சமயத்தில், ஒருவர் பல பெண்களை திருமணம் செய்துக் கொள்ளுதலையும் (polygamy) தடைசெய்ய சட்டங்களை இயற்றி அவற்றை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

**7. குடும்ப நல திட்டங்கள் (Family Planning)**

மக்கள் தொகையின் அதிவேக வளர்ச்சியைக் கட்டுப்படுத்த இது ஒரு முக்கியமான வழிமுறையாகும். இத்திட்டம் ஒரு தேசிய இயக்கமாக உருவெடுக்க வேண்டும். குடும்பத் நலதிட்டத்தைப் பற்றிய கல்வியை அனைவரும் பெறச் செய்தல் வேண்டும். பிறப்பைக் கட்டுப்படுத்தும், வெவ்வேறு வழிமுறைகளை பொதுமக்கள் அறியச் செய்தல் வேண்டும்.

**மால்தசின் மக்கள்தொகைக் கோட்பாடு**

பொருளியலறிஞர் மால்தசு அவர்கள், மக்கள் தொகையின் வளர்ச்சிப் பெருக்கம், உணவு உற்பத்திப் பெருக்கத்தைவிட தாண்டி விஞ்சிச் செல்லக் கூடும் என்கிறார்.

**இக்கோட்பாட்டை கீழ்காணும் மூன்று கூற்றுகளில் விளக்கலாம்**

1. மக்கள்தொகையின் வளர்ச்சி வீதமானது, வாழ்வின் அடிப்படைத் தேவையான உணவின் கிடைப்பளவால் கட்டுப்படுத்தப்படுகிறது. உணவு உற்பத்தி அதிகரிக்கும் போது மக்கள் தொகையும் அதிகரிக்கும்.
2. மக்கள்தொகை பெருக்கம், உணவு உற்பத்தியை விட அதிவேக வளர்ச்சி வீதத்தில், அதிகரிக்கிறது. வேறு வகையாகக் கூறப் போனால், மக்கட் தொகை பெருக்க வீதத்திலும், உணவு உற்பத்தி 'கூட்டல் வீதத்திலும்' அதிகரிக்கிறது.
3. கிடைக்கும் உணவுப் பொருள்களின் அளவிற்கேற்ப, இயற்கைத் தடைகள் மற்றும் செயற்கைத் தடைகள் ஆகிய இரு முறைகள் மூலம் மக்கள் தொகையை நிலைப்படுத்தலாம்.

மக்கள் தொகையின் அளவு, உணவு உற்பத்தியின் கிடைப்பளவால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை முதல் கூற்று குறிப்பிடுகிறது.

**உத்தம அளவுக்கோட்பாடு**

மக்கட்தொகையில் ஏற்படும் மாற்றங்களுக்கும் அதன் விளைவாக தலாவருமானத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு மிடையே உள்ளத் தொடர்பினை உத்தம அளவுக் சிட்விக், கேனன், டால்டன் மற்றும் ராபின்சு போன்றவர்கள் இக்கோட்பாட்டை ஆதரித்தார்கள். தலா உற்பத்தி உச்சத்தில் இருக்கும் நிலையில் உள்ள மக்கட் தொகையே உத்தம அளவு மக்கட்தொகை எனலாம். மக்கட் தொகையானது உத்தம அளவு உடையதா இல்லையா என்பதை கீழ்க்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் அளவிடலாம்.

$$M = \frac{A-0}{O}$$

இதில்,

M – உற்பத்தியளவில் சரிசமமற்ற நிலை (Mal-adjustment level of output)

A – உண்மையான மக்கட்தொகை

O – உத்தம அளவு மக்கட்தொகை

M – பூஜ்ஜியமாக இருந்தால், மொத்த மக்கட்தொகை உத்தம அளவு மக்கட்தொகைக்கு சமமாக இருக்கும்.

M – நேர் மறையாக இருந்தால், மொத்த மக்கட்தொகை உத்தம அளவு மக்கட் தொகையைவிட

M- எதிர்மறையாக இருந்தால், மொத்த மக்கட்தொகை உத்தம அளவு மக்கட் தொகையைவிட

NATRAJ INSTITUTE OF TNPSC

இக்கோட்பாடு பிறப்பு வீதத்திற்கும், இறப்பு வீதத்திற்கும் உள்ள உறவை விளக்குகிறது. பிறப்பு வீதம் என்பது ஒரு வருடத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன என்பதைக் குறிக்கும். இறப்பு வீதம் என்பது ஒரு வருடத்தில் 1000 நபர்களில் எத்தனை பேர் இறக்கிறார்கள் என்பதைக் குறிக்கும். பொருளாதார முன்னேற்றத்தின் விளைவாக இவ்விரு வீதங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று இக்கோட்பாடு கூறுகின்றத. மக்கட்தொகை வளர்ச்சியில் மூன்று நிலைகள் உள்ளதாக இக்கோட்பாடு கூறுகின்றது.

**முதல் நிலை**

**உயர்ந்த பிறப்பு வீதமும் இறப்பு வீதமும்**

முதல் நிலையில், நாடு முன்னேற்றம் குறைந்து, பின்தங்கிய நிலையில் இருக்கும். வேளாண்மை மக்களின் முக்கியத் தொழிலாகும். மிகவும் பழமையான உற்பத்தி முறைகளே பயன்படுத்தப்படும். மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து காணப்படும். இந்த நிலையில் பிறப்பு, இறப்பு வீதங்கள் உயர்வாக இருக்கும். சத்தில்லா உணவு, சுகாதார வசதியின்மை, போதிய மருத்துவ வசதிகள் இல்லாமை ஆகியவையே அதிக இறப்பு வீதத்திற்கு காரணங்களாகும்.

கல்வியறிவு இன்மை, குடும்ப நலத் திட்டங்கள் பற்றிய அறியாமை. இளவயத திருமணம், சமுதாய நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவை பிறப்பு வீதம் அதிகமாக இருப்பதற்கான காரணங்களாகும். இந்தக் கட்டத்தில், அதிக பிறப்பு வீதம், அதிக இறப்பு வீதத்தை சரிக்கட்டுவதால், மக்கள் தொகை வளர்ச்சி அதிகமாக இல்லை.

**இரண்டாம் நிலை**

**உயர்ந்த பிறப்பு வீதமும், குறைந்த இறப்பு வீதமும்**

நாடு முன்னேறும் போத, தொழில் நடவடிக்கைகள் அதிகரித்து, அதிக வேலை வாய்ப்புகள் உருவாகின்றன. இதனால் நாட்டு வருமானமும், தலா வருமானமும் அதிகரித்து, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது. நாடானது, உயர்ந்த பிறப்பு வீதமும், குறைந்த இறப்பு வீதமும் கொண்ட இரண்டாம் நிலையை அடைகிறது. உயர்ந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக போதிய மருத்துவ வசதிகள் கிடைக்கப்பெறுகின்றன.

தொற்று நோய்கள், உயிர் கொள்ளி நோய்கள் முதலியன ஒழிக்கப்படுகின்றன. நல்ல சுகாதார வசதிகள் பெருகுகின்றன. அதனால் நோய் பரவும் வேகம் குறைந்து, இறப்பு வீதமும் குறைகின்றது. மாற்றத்திற்கான தயக்கம் காரணமாகவும், நீண்ட நாளைய பழக்க வழக்கங்களாலும், பிறப்பு வீதம் உயர்ந்தே காணப்படுகிறது. எனவே உயர்ந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதத்திற்கிடையே வேறுபாடு தோன்றுகிறது. இதுவே மக்கள்தொகை வளர்ச்சி வீதம் அதிகமாகக் காரணமாகிறது.

**மூன்றாம் நிலை**

**குறைந்த இறப்பு வீதமும், குறைந்த பிறப்பு வீதமும்**

பொருளாதார முன்னேற்றம் காரணமாக சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது. வேளாண்மை சார்ந்த நாடு தொழில் மயமாவதில் முனைப்பு ஏற்படுகிறது. தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக மக்கள் ஊரகப் பகுதியிலிருந்து நகர்புறத்திற்கு இடம் பெயருகிறார்கள்.

மக்களின் மனப்பான்மை மாற்றமடைகிறது. கல்வியறிவு காரணமாக, உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு, சிறு குடும்பமே உகந்தது என்று உணருகிறார்கள். எனவே பிறப்பு வீதம் கணிசமாகக் குறைகிறது. சிறந்த மருத்துவ வசதிகள, தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல், நல்ல சுகாதார வசதிகள் ஆகியவற்றை செயல்படுத்துவதால் இறப்பு வீதம் குறைகிறது. இந்நிலையில் பிறப்பு, இறப்பு வீதங்கள் குறைவாக இருப்பதால், மக்கள்தொகை வளாச்சி நிலையாக இருக்கும்.

**மக்கள்தொகை கணக்கெடுப்பு**

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டிலுள்ள அல்லது வரையறுக்கப் பட்ட ஒரு பகுதியிலுள்ள அனைத்து மக்களின் பொருளாதார, சமூக, மற்றும் மரபியல் தொடர்பான புள்ளி விவரங்களைத் திரட்டுவது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எனப்படும்.

இந்தியாவில் மக்கள்தொகை, 1872ம் ஆண்டு கணக்கெடுக்கப்பட்டது. அதன் பின்னா 1881ல் கணக்கெடுக்கப்பட்டது. அப்போது முதல் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள்தொகை கணக்கெடுக்கப்பட்டு வருகிறது.

மக்கள் வளர்ச்சி வீதத்தையும், பகுதி வாரியாக மக்கள்தொகைப் பரவலில் காணப்படும் மாற்றத்தை அறியவும். மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அவசியமாகிறது. பொருளாதார திட்டமிடுதலுக்கும், சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பயன்படுகிறது.

**மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் பயன்கள்**

மக்கள் தொகைக் கணக்கெடுப்பால், இந்திய மக்களின் இயல்பினை அறிய முடியும். மக்கள் தொகைக் கணக்கெடுப்பினால் கீழ்க்காணும் விவரங்களை அறியமுடிகிறது.

1. மொத்த மக்கள்தொகை
2. ஆண் - பெண் வீதம்
3. ஊரக, நகர்ப்புற மக்கள்தொகை
4. வயது பாகுபாடு
5. மக்கள் தொகை அடர்த்தி
6. கல்வியறிவு நிலை
7. நகர் மயமாதல்
8. தொழில் சார் வகைகள்

NATRAJ INSTITUTE OF TNPSC

**இந்திய மக்கள் தொகை வளர்ச்சி**

இருபதாம் நூற்றாண்டில் இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சி வீதத்தை நான்கு நிலையாகப் பிரிக்கலாம். அவை யாவன:

| மக்கள்தொகை கணக்கெடுப்பு வருடங்கள் | வளர்ச்சி சதவீதத்தில் ஆண்டுக்கு | வளர்ச்சியின்தன்மை |
|---|---|---|
| 1901 – 1921 | 0.19 | மக்கள் தொகையின் தேக்க நிலை |
| 1921 – 1951 | 1.22 | சீரான வளர்ச்சி |
| 1951 – 1981 | 2.14 | விரைவான உயர் வளர்ச்சி |
| 1981 - 2001 | 1.80 | குறைவதற்கான அறிகுறிகள் |

**மக்கள் கொள்கை**

வளரும் நாடுகளுள், மக்கள் தொகைக் கொள்கையை செயல்படுத்திய முதல் நாடு இந்தியாவாகும். மேலும் இது 1952ல் நாடு தழுவிய அளவில் குடும்ப நல திட்டத்தையும், அறிமுகப்படுத்தியது. இறப்பு, பிறப்பு வீதங்களின் குறைப்பில் ஒரு குறிப்பிடத் தக்க வேறுபாடு இருத்தல் வேண்டும் என்பதே மக்கள் தொகை கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

**தேசிய மக்கள்தொகை கொள்கை (2000)**

‘தேவையான கருத்தடை சாதனங்கள் வழங்கியும், சுகாதார கட்டமைப்பு வசதிகள், சுகாதார பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகள் மூலம் குழந்தை பராமரிப்பை மேம்படுத்துதலே தேசிய மக்கள்தொகை கொள்கை (2000) யின் உடனடி நோக்கமாகும்.

மொத்த செழுமை காலத்தை 2010க்குள் மாற்றி அமைப்பதில் முக்கிய கவனம் செலுத்தியது.

2045ம் ஆண்டிற்குள் மக்கள்தொகையை நிலைப்படுத்துதலே இக்கொள்கையின் நீண்டகால நோக்கமாகும்.

தேசிய மக்கள் தொகை குழுவானது, பிரதம மந்திரி, எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்கள், மற்றும் உறுப்பினர்களால் தலைமை தாங்கி தொடங்கப்பட்டு, பின் மறுபரிசீலனை செய்யப்பட்டது.

தேசிய மக்கள் தொகை குழு போன்று, மாநில அளவிலான குழு, மாநில முதலமைச்சர்களால் தலைமை தாங்கி துவக்கப்பட்டு அதே நோக்கங்களை நடைமுறைப்படுத்தியது.

**மக்கள் தொகையை நிலைப்படுத்துவதற்கான முறைகள்**

ஒரு நிலையான மக்கள் தொகையை 2045-க்குள் அடைய கீழ்கண்ட முறைகளை மக்கள்தொகை கொள்கை கூறுகிறது:

1. குழந்தைகள் இறப்பு வீதத்தை 1,00,000 குழந்தைகளுக்கு 30க்கு கீழ் குறைத்தல்.
2. மகப்பேறு காலத்தில் இறக்கும் (maternal mortality rate) தாய்மார்கள் வீதத்தை 1,00,000 குழந்தைகளுக்கு 100க்கும் கீழ் (தாய்மார்கள்) கொண்டு வருதல்.
3. உலக அளவில் நோய் தடுப்பு முறை.
4. 80 சதவீத மகப்பேறானது, முறையான மருந்தகம், மருத்துவமனை மற்றும் மருத்துவ நிறுவனங்களில் முறையான பயிற்சியுடைய பணியாளர்கள் மூலம் நடைபெறச் செய்தல்.

## பாடம் - 3 வறுமை மற்றும் வேலையின்மை
## (Poverty and Unemployment)

NATRAJ INSTITUTE OF TNPSC

**வரையறை**

1990-ம் ஆண்டில் உலக வங்கியானது வறுமையை கீழ்கண்டவாறு வரையறைச் செய்கிறது ‘வறுமை என்பத குறைந்தபட்ச வாழ்க்கை தரத்தை அடைய முடியாத, திறனற்ற நிலையை குறிக்கிறது.’ பேராசிரியர் டண்டேகர் என்பவரின் கூற்றுப்படி (1981) ‘எப்படியாயினும் வறுமை என்பது போதுமான வருமானத்தின் தேவையேயாகும்.’

**வறுமையின் வகைகள்**

**1. முழுவறுமை**

மக்களுக்கு போதுமான உணவு, உடை, உறைவிடம் இல்லாத நிலையை முழுவறுமை நிலை என்கிறோம்.

**2. ஒப்பீட்டு வறுமை**

‘ஒப்பீட்டு வறுமை’ என்பது மக்களின் பல்வேறு குழுக்களிடையே (உயர்தர, நடுத்தர, குறைவான வருமானம் பெறுபவர்கள்) காணப்படும் வேறுபாடுகளையோ (அ) ஒரே குழுவினரிடையே காணப்படும் வேறுபாடுகளையோ (அ) பல நாடுகளில் வாழும் மக்களிடையே காணப்படும் வேறுபாடுகளை குறிப்பதாகும்.

**3. தற்காலிக வறுமை (அ) முற்றிய வறுமை (Temporary or Chronic Poverty)**

இந்தியா போன்ற நாடுகளில் பருவமழை குறையும்போது, விவசாயம் பொய்த்து, அதனால் உழவர்கள் தற்காலிகமான ஏழ்மைநிலையில் உழல்கிறார்கள். அதே நிலையில் அவர்கள் நீண்டகாலமாக வாழும்போது அந்நிலையை முற்றிய வறுமை (அ) அமைப்பு சார்ந்த வறுமை என அழைக்கப்படுகிறது.

**4. முதல் நிலை வறுமை மற்றும் இரண்டாம் நிலை வறுமை**

முதல் நிலை வறுமை என்பது ‘குடும்பங்களில் வாழ்க்கை நடத்த மொத்த சம்பாத்தியங்களைக் கொண்டு குறைந்தபட்ச, அத்தியாவசிய, பொருள்களைக் கூட வாங்கமுடியாத, பற்றாக்குறையான நிலையை குறிக்கும்.’

இரண்டாம் நிலை வறுமை என்பது குடும்பங்களின் சம்பாத்தியம், வாழ்க்கை நடத்த போதுமானதாக இருக்கும். ஆனால் அதன் ஒரு பகுதியானது உபயோகமான (அ) உபயோகமற்ற செலவுகளுக்காக ஈர்க்கப்படும். குறிப்பாக மது அருந்துதல், சூதாட்டம், மற்றும் திறமையற்ற குடும்ப நிர்வாகம் போன்றவைகள் வீணாண செலவுகளுள் சிலவாகும்.

**5. கிராமப்புற ஏழ்மை மற்றும் நகர்புற ஏழ்மை**

கிராமங்களில் வாழும் பெரும்பான்மையான ஏழை மக்கள் நிலங்களை சொந்தமாக பெற்றிறாமல், விவசாய தினக் கூலிகளாகவே வேலைச் செய்கிறார்கள். அவர்கள் கூலியும் மிக குறைவே, ஆண்டில் ஒரு சில மாதங்களே அவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள். ஆனால் நகர்புறங்களில் வாழும் ஏழை மக்கள் நீண்ட நேரம் உழைத்து. மிக குறைவான வருமானத்தையே பெறுகிறார்கள். பெரும்பாலானோர், அங்கீகாரம் பெறாத மற்றும் ஒழுங்குமுறைப்படி அமையாத துறைகளிலேயே வேலைக்கு

அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் உப/துணை வேலையாட்கள் (subemployed) எனப்படுவர். உபவேலையாட்கள் எனப்படுபவர்கள் மூன்று பிரிவைச் சேர்ந்தவர்கள்.

1. முழுநேர வேலை செய்ய விருப்பம் இருந்தும், பகுதி நேர வேலையையே செய்பவர்கள்.
2. குடும்ப தலைவர், முழு நேர வேலை செய்தும், வறுமை கோட்டிற்கு மேல் தங்களுடைய குடும்பத்தை கொண்டுவரும் அளவிற்கு போதுமான வருமானம் ஈட்டவில்லை.
3. சோர்வுற்ற பணியாட்கள், வேலை தேடிச் செல்லாதவர்கள்.

### ஏழை குடித்தனங்களின் பண்புகள்
### (Characteristics of Poor Households)

பல நாடுகளில் வறுமையானது, சாதி மற்றும் இன வழிபாடும் (race) தொடர்புடையது. இந்தியாவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கருப்பினத்தவர்களும் சிறந்த உதாரணங்களாகும்.

குற்றங்கள், உடல் நலக்குறைவு, ஏழை மக்களோடு கொண்டுள்ள தொடர்பின்மை ஆகியவையும் வறுமையோடுக்கூட தொடர்புடையவையாகும்.

ஒரு நாட்டின் ஏழ்மைநிலை இரண்டு காரணிகளை பொறுத்தது

1. நாட்டு வருமானத்தின் சராசரிநிலை
2. நாட்டு வருமான பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வின் அளவு/நிலை

### வறுமைக்கோடு (Poverty Line)

வறுமைக்கோடு என்பது குறைந்த பட்ச வருமானம், நுகர்வு அல்லது பொதுவாக, பண்டங்கள் மற்றும் பணியினை ஒரு தனிநபர் பெறும் வழியினைக் குறிக்கும்.

எனவே அரசு கொள்கைகளை உருவாக்கும் பொழுது 'ஏழ்மையிலும், ஏழ்மையில் உள்ளவர்களையுமே' கருத்தில் கொள்ள வேண்டும்.

சத்துணவு அடிப்படையான வறுமைக் கோடு அநேக நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

### இந்தியாவில் வறுமை

தண்டேகர் மற்றும் இராத் அவர்களின் கணக்கீட்டின்படி நாம் அன்றாடம் குறைந்த அளவு 2250 கலோரி அளவு உணவ நுகர்தல் வேண்டும். தண்டேகர் மற்றும் இராத் இவர்களின் பரிந்துரைப்படி 1960-61 விலைகளின்படி கிராமப்புற மக்களுக்கு குறைந்த அளவ ரூ. 180 தனி நபர் ஆண்டு வருமானமும் நகர்ப்புற மக்களுக்கு குறைந்த அளவ தனி நபர் ஆண்டு வருமானம் ரூ. 270/- எனப் பரிந்துரை செய்துள்ளனர்.

P.D. ஒஜா (P.D. Ojha) என்ற வல்லுநரின் கருத்துப்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் உழல்பவர்கள் 1960-61 விலைகளில் 52 சதவீதமாக இருந்தது 1967-68 விலைகளில் 70 சதவீதமாக உயர்ந்தது.

B.S. மின்காஸ் என்பவர் கருத்துப்படி தனிநபர் ஆண்டு நுகர்வுச் செலவு குறைந்தபட்சம் ரூ.240/- எனக்கணக்கிட்டார். இதன்படி 1968ல் கிராமப்புறங்களில் ஏறத்தாழ 50 சதவீதத்தினர் (50.6 சதவீதம்) வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து வந்துள்ளனர்.

P.K. பரதன் அவர்களின் ஆய்வுப்படி 1960-61ல் வறுமைக் கோட்டிற்கீழ் 38% இருந்த கிராமப்புற மக்கள் 1968-69ல் 54% உயர்ந்தது.

மாண்டெக்சிங் அகுலிவாலியா (1977). 1950ல் 50 சதவீதமாக இருந்த கிராமப்புற ஏழ்மை 1960-61ல் 40 சதவீரமாகக் குறைந்து பின்னர் 1967-68ல் 56.5 சதவீதமாக உயர்ந்தது.

திரு. அகுலிவாலியா செலவு அளவைக் கணக்கில் கொண்டு ஏழ்மையைக் கணக்கிட்டார். 1960-61 விலைகளில் கிராமப்புறங்களுக்கு ரூ. 15/- எனவும் நகர்ப்புறங்களுக்கு ரூ.20/- எனவும் நகர்ப்புறங்களுக்கு ரூ.20/- எனவும் இதைக் கணக்கிட்டார்.

ஏழாவது நிதிக்குழு நீட்டிக்கப்பட்ட ஏழ்மைக்கேடு (Agumented Poverty Line) என்னும் புதிய கருத்தை பயன்படுத்தியது. இதில் தனியார் நுகர்வுச் செலவுடன், 1. உடல் நலன் மற்றும் குடும்ப நலன் 2. குடிநீர் மற்றும் சுகாதாரம் 3. கல்வி 4. காவல்துறை, சிறைத்துறை, நீதித்துறை ஆகியவற்றை நிர்வகித்தல் 5. சாலைப் போக்குவரத்து மற்றும்
6. சமூகநலம் ஆகியவற்றின் மீதான தனிநபர் பொதுச் செலவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

### இந்தியாவில் ஏழ்மை அல்லது வறுமைக்காண காரணங்கள்

இந்தியாவின் கிராமப்புற ஏழ்மைக்கான காரணங்கள் பின்வருமாறு

1. வேலையின்மையும் வேலைக் குறைவும்: நல்ல மழை சில ஆண்டுகளில் இருந்தாலும் கூட விவசாயத் தொழிலாளர்கள் ஆண்டு முழுவதும் வேலை பெறுவதில்லை.
2. மக்கள் தொகை அழுத்தம்: மக்கள் தொகை அழுத்தத்தின் காரணமாக ஊதிய ஈட்டும் ஒவ்வொரு நபருக்கும் அவரைச் சார்ந்து பலர் இருப்பதால் அங்கு மறைமுக வேலையின்மை பிரச்சினை நிலவுகிறது.
3. இந்திய வேளாண்மையில் உற்பத்தித் திறன் மிகமிகக் குறைவே ஆகும். எனவே வேளாண்மையைச் சார்ந்துள்ளோரில் பெரும்பாலானவர்கள் ஏழ்மை நிலையிலேயே உலவுகின்றனர்.

4. கிராமப்புற மக்களில் பெரும்பாலானவர்கள் போதிய அளவு சொத்துக்களை பெற்றிருக்கவில்லை, குறிப்பாக நிலம். இதற்கு முக்கிய காரணம் நிலம் ஒரு சில குடும்பங்கள் வசமே உள்ளது எனலாம்.

**வறுமை ஒழிப்புத் திட்டங்கள் (Poverty Alleviation Programme)**

**1. நிலச் சீர்திருத்தங்கள்**

மாநில அரசுகள் நிலசீர்திருத்த சட்டங்களை இயற்றுவதன் மூலமாக நிலமற்ற விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை மேம்படச் செய்ய வழிவகுத்தன. (உம்.) ஜமின்தார்முறை ஒழிக்கப்பட்டதினால், சுரண்டல் முறைகள் சமுதாயத்தை விட்டு நீக்கப்பட்டன.

**2. ஜவகர் கிராம் வேலைவாய்ப்புதிட்டம்**

**(Jawahar Grama Sannidhi Yojana - JGSY)**

இத்திட்டம் 1999ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்காகும் செலவினை மத்திய மற்றும் மாநிலங்களைக்கிடையே 75:25 என்ற முறையில் பிரித்துக் கொள்ளப்பட்டது.

**3. நாட்டு சமூக உதவித் திட்டம்**

**(National Social Assistance Programme - NSAP)**

இத்திட்டம் ஆகஸ்டு 15ம் நாள் 1995-ம் ஆண்டு துவங்கப்பட்டது. நூறு சதவீதம் இத்திட்டத்தை மைய அரசே ஏற்று நடத்தும், இத்திட்டத்தின் மூலமாக ஏழைக் குடும்பத்தினர், வயது முதிர்ந்தோர், வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தினர் மற்றும் மகப்பேருகால உதவி பெறுவோர், அதிக நலன்கள் பெறுவர்.

**4. வேலைவாய்ப்பு உறுதித்திட்டம்**

**(Employment Assurance Scheme - EAS)**

இத்திட்டம் 1993, அக்டோபர் 2 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. நாட்டிலுள்ள வளர்ச்சியால் பாதிக்கப்பட்ட பழங்குடியினர் வாழக்கூடிய பாலைவனங்கள், பழங்குடியிருப்புகள் மற்றும் மலைப் பகுதிகளாகிய 1778 பிற்பட்ட தொகுப்புகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

வேலையில்லா கிராமப்புற மக்களுக்கு கூலிவேலையை ஏற்படுத்தித் தந்தது. புதிய சம்பூரண கிராம வேலைவாய்ப்பு திட்டத்துடன், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஜவகர் கிராம வேலைவாய்ப்பு திட்டமும் செப்டம்பர் 2001ல் இணைக்கப்பட்டது.

**5. பிரதமரின் வேலைவாய்ப்புத்திட்டம்**

**(Pradhan Mantri Gramodaya Yojana - PMGY)**

இத்திட்டமானது 2000 – 2001 நிதிநிலை அறிக்கையின்போது, அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கீழ் ரூ.5000 கோடி பணம் ஒதுக்கீடுச் செய்யப்பட்டது. இத்திட்டம் சுகாதாரம், அடிப்படைக் கல்வி, குடிநீர், வீட்டு வசதி, மற்றும் கிராமபுறங்களில் சாலை அமைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

**6. பொன்விழா ஆண்டு ஊரக தன் வேலை வாய்ப்புத் திட்டம்**

**(Swarna Jayanthi Shahari Rozgar Yojana - SJSRY)**

நகர்புற சுயவேலைவாய்ப்பையும், மற்றும் நகர்ப்புற கூலி வேலை ஆகிய இவ்விரண்டும் சிறப்பு திட்டங்களாகும். 1997-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நகர்புற வறுமை ஒழிப்பு திட்டத்தின் கீழ் செயல்பட்டுவந்த முந்தைய திட்டங்களை இத்திட்டமானது மாற்றி அமைத்தது. மத்திய-மாநில அரசுகளும் 75:25 என்ற விகிதத்தில் திட்டத்திற்கு தேவையான செலவை மேற் கொள்கின்றனர்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**7. கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்**

**(Integrated Rural Development Programme - IRDP)**

1976-77-ம் ஆண்டில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் முதன் முதலாக முன்மொழியப்பட்டது. இத்திட்டம் கிராம மக்களுக்கு உதவிச் செய்யவும், பொருளாதார வளர்ச்சி நலன்களை, கிராமப்புற பகுதிகள் பெற்று பயனடைவதையே நோக்கமாக கொண்டது. 1978-79ல் இத்திட்டமானது மாற்றியமைக்கப்பட்டு அதன் அளவ விரிவாக்கப்பட்டது. துவக்கத்தில் 2,300 தொகுப்புகளில் அதில் 2000 தொகுப்புக்களில் SFDA, DPAP மற்றும் CADP இத்திட்டங்கள் செயல்பட்டன. 1979-80ல் கூடுதலாக 300 தொகுப்புக்கள் இத்திட்டங்களுடன் இணைக்கப்பட்டன. 1980 அக்டோபர் 2-ல் நாட்டின் எல்லா தொகுப்புகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. சிறிய மற்றும் எல்லைநிலை விவசாயிகள் மட்டுமில்லாமல் இத்திட்டம் குறிப்பாக விவசாய தொழிலாளர் மற்றும் நிலமற்ற உழைப்பாளர்கள் இவர்களோடும் கூட கிராமப்புற கைவினைஞர்களையும் உள்ளடக்கி உள்ளது. இது தனி நபரைக் காட்டிலும், குடும்ப நலத்திற்கே முக்கியத்துவம் அளிக்கிறது.

**வேலையின்மை**

பொருள்: வேலையின்மை என்பது, தொழிலாளர்கள் வேலை செய்யும் தகுதியும் விருப்பமும் இருந்தும், வேலை கிடைக்காமல் இருப்பது ஆகும்.

**வேலையின்மை அளவிடுகள்**

ஒரு நபர் ஒரு நாளைக்கு 8 மணி நேரங்கள் போன்று ஒரு வருடத்திற்கு 73 நாட்களுக்கு வேலையில் நியமனம் செய்யப்படுவதையே குறிப்பது ஆகும். என்எஸ்எஸ்-ல் 27வது சுற்றின்படி, வேலையின்மை அளவிடுகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

1. பொதுவான முதன்மை நிலை வேலையின்மை: வருடத்தில் பாதிநாட்களுக்கு மேல் அதிகமான நபர்கள் வேலையில்லாத நிலையில் இருப்பதையே இது குறிக்கும்.
2. வாராந்திர நிலை வேலையின்மை: வாரத்திற்கு ஒரு மணி நேரம்கூட அதிகமான நபர்களுக்கு வேலை கிடைக்காமையை குறிக்கும்.
3. தினமும் வேலையின்மை நிலை: வாரத்தில் ஒரு நாள். சில நாட்கள் அதிகமான நபர்களுக்கு வேலையில்லாமையை குறிக்கும்.

**வேலையின்மைக்கான காரணங்கள்**

**1. அதிக மக்கள்தொகை வளர்ச்சி**

கடந்த வருடங்களில் நம்முடைய மக்கள் தொகை அதிகமான அளவ உயர்ந்து உள்ளதால், வேலையின்மைக்குரிய சிக்கல்களை மேலும் அதிகரித்து உள்ளது. நம்முடைய நாட்டில் மக்கள்தொகை பெருக்கம் அதிமாவதால், வேலையின்மையின் அளவு அதிகமாகி கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

**2. போதுமான பொருளாதார வளர்ச்சி வீதம் இன்மை**

இந்தியா ஒரு வளர்ந்து வரும் நாடாக இருந்தபோதும், பொருளாதார வளர்ச்சி வீதம் மிகவும் குறைவாகவே உள்ளது. காரணம் மொத்த் உழைப்பின் வலிமைகளும் பயன்படா காரணம். இந்தியாவில் வேலைவாய்ப்புகள் போதுமான அளவில் இல்லை. இதனால் கூடுதலான உழைப்பு சக்திகளை பயன்படுத்தப்படவில்லை. இதற்கு காரணம் மக்கள் தொகையின் வளர்ச்சியே ஆகும்.

**3. வேளாண்மை தவிர பிறதுறைளில் வேலை வாய்ப்பு குறைவு**

இந்தியாவில் விவசாயத் துறையில் மட்டுமே போதுமான வேலைவாய்ப்பு உண்டு. மற்ற துறைகளில் போதுமான அளவுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் குறைந்து காணப்படுகிறது.

நிலமானது அதிகமான மக்கள் வாழ்வதற்கு பயன்படுவதால் மிகவும் அதிகமான மக்கள் சக்தியானது வேலையில்லா நிலையிலேயே உள்ளனர். இதற்கு மறைமுக வேலையின்மை என்று பெயர்.

**4. பருவகால வேலை வாய்ப்பு**

இந்தியாவில் விவசாயத்தில் பருவகால வேலையின்மை நிலவுகிறது. பருவகாலம் இல்லாத நேரத்தில் விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லா நிலையில் காணப்படுகின்றனர்.

**5. கூட்டுக் குடும்ப அமைப்பு**

இந்தியாவில் கூட்டுக்குடும்ப முறை இருப்பதால் மறைமுக வேலையின்மை அதிகமுள்ளது. குடும்பத்தில் உள்ள அனைவரும் தங்களுடைய குடும்ப தொழிலில் ஈடுபட்டனர். தேவைக்கு அதிகமாக தொழிலாளர்கள் தங்களுடைய குடும்ப தொழிலில் அமர்த்தப்படுகிறார்கள்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**6. இந்தியப் பல்கலைக்கழத்திலிருந்து பெருகிவரும் மாணவர்கள்**

இந்தியப் பல்கலைக் கழகத்திலிருந்து உருவாக்கப்படும் பெருவாரியான பட்டதாரிகள் கூடுதலாக இருப்பதால் படித்தவர்களுக்கு வேலையின்மை அதிகரித்துக் கொண்டுள்ளது. இந்திய கல்வி முறையில் அதிகமாக பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களுக்கு, கலைத்துறை சார்ந்த பாடங்களைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் தொழில்துறையின் பட்டதாரிகளுக்கு இடையே வேலையின்மை நிலவுகிறது. மேலும் நமது நாட்டில் தொழில் கல்வியும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

**7. குறைவான தொழில் வளர்ச்சி**

நமது நாட்டில் தொழில்துறை போதுமான அளவு வளர்ச்சியடையவில்லை. தொழில்களிலும், தொழிலாளர்களின் வேலைவாய்ப்பும் மிகவும் குறைவே. வேளாண்துறையில் உபரியாக உள்ள தொழிலாளர்களை, தொழில்துறைகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. இதனால் விவசாயத்தில் மறைமுக வேலையின்மை ஏற்படுகின்றது.

**இந்தியாவில் வேலையின்மை பிரச்சனைகளுக்கு தீர்வு**

**1. முதலீட்டு முறைகளில் மாற்றம் செய்தல்**

நுகர்வுப் பண்டங்களை உற்பத்திச் செய்யும் தொழிற் சாலைகளை அதிகரிக்கும்போது வேலையில்லா தொழிலாளர்களை அதிகப்படியாக வேலைக்கு அமர்த்துதல் சாத்தியமாகும்.

**2. பெரிய நிறுவனங்களுக்கு எதிராக சிறிய நிறுவனங்களை ஊக்குவித்தல்**

பெரிய தொழில் நிறுவனங்களைக் காட்டிலும் சிறிய நிறுவனங்களுக்கு நேரடியான அதிக முதலீடு செய்யப்படும்போது வேலைவாய்ப்பு நோக்கமும், உற்பத்தியின் நிறைவுச் செய்யப்படும்.

இதனால் அத்தொழில்களுக்கு அதிக கடன் வசதி, உரிமம், முறையான கச்சாப் பொருள்கள் பகிர்வு, மற்றும் இதரக் கொள்கைகள் வழங்கப்படுவதன்மூலம் வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி கணிசமான அளவில் ஒரே சீராக அதிகரிக்கக்கூடும்.

**3. தொழில்நுட்ப முறைகளில் காணப்படும் பிரச்சனைகளை தேர்ந்தெடுத்தல்**

உழைப்பு சக்திகளை அதிகமாக பயன்படுத்தும் காலத்தில், தொழில் நுட்பங்களை தேர்ந்தெடுத்தலின் மூலம் வேலைவாய்ப்பின் நோக்கத்தை முழுமையாக செயல்படுத்த முடியும். இந்திய பொருளாதாரத்தின் சூழலுக்கு நடுத்தரமான தொழில்நுட்ப முறையே ஏற்றதாகும்.

**4. சிறுநகரங்கள் மற்றும் கிராமபுறங்களில் புதிய வளர்ச்சி மையங்களை ஊக்குவித்தல்**

ஒவ்வொரு திட்டங்களின் அனுபவமும், அதிக மக்கள் தொகை உள்ள மாநகர மையங்கள் அதிகமான முதலீடுகளை பெறுகின்றன என்பதையே காட்டுகின்றது. ஆகவே சிறுநகரங்களின் வளர்ச்சியானது, புதிய வளர்ச்சி மையங்களை வருங்காலத்தில் வளர்த்திட உதவும். சிறிய தொழில்களின் கூட்டமைப்பு, நிறுவப்படுவதன் மூலம் வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார நெகிழ்வுத் தன்மையை அளித்திடும்.

**5. வேலைவாய்ப்புக்களின் அடிப்படையில் சலுகைகள்**

அரசின் சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகை திட்டங்களானது சிறிய மற்றும் பெரிய தொழிலகளுக்கு உச்சமான உற்பத்தியளவை அதிகரிக்க உதவுகிறது. மேலும் இது மூலதன வளங்களை அதிக அளவில் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றது.

அதிகமான வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கு அரசின் சலுகைகள் மற்றும் அரசின் ஊக்கத் தொகைகளே அடிப்படை காரணங்களாக உள்ளன.

**6. கல்விக் கொள்கையில் புத்தாக்கம்**

நம் நாட்டின் கல்விமுறையில் தொழில்கல்வி பட்டம் பெறுவது மட்டுமே மிகப்பெரிய குறையாக உள்ளது. படித்தவர்களிடையே வேலையின்மை அதிகமாக இருப்பதால் கல்வி முறையில் புத்தாக்கம் செய்வது மிகவும் அவசியமான தேவையாக கருதப்படுகிறது. அப்படி செய்வதன் மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்புக்களை உருவாக்கமுடியும். நமது நாட்டின் கல்வி கொள்கையின் முறையில் மாற்றம் தேவைபடுகிறது.

**7. கிராமபுறங்களின் குறை வேலையுடமை**

என்.எஸ்.எஸ் விவரங்களின்படி இந்தியாவில் குறை வேலையுடமை சற்று அதிகமாகவே உள்ளது. இந்தியாவில் 2 கோடிக்குமேல் குறைவேலையுடமை மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூடுதலாக வேலைசெய்யும் தயாராக உள்ளனர். கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள் உருவாக்குவது அரசின் கடமையாக உள்ளது. இத்தகைய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டங்களை உருவாக்கவிட்டால், கிராமப்புற மக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை. இதன் மூலம் நிலமற்ற தொழிலாளர்கள் சிறிய மற்றும் கடைநிலை விவசாயிகள் வேலைவாய்ப்பை இழக்க நேரிடும் அத்தியாவசியமான நடவடிக்கைகள் எடுத்தால்தான் கிராமப் புறங்களில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க முடியும். இதனால் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின் மூலம் வருமானம் அதிகரிக்கும். மேலும் வறுமையின் அளவும் குறைய வாய்ப்பு உள்ளது.

NATRAJ INSTITUTE OF TNPSC

# பொருளாதாரம்
# ஓர் அறிமுகம்

- உழவர்கள், தொழிலாளர்கள் பணியாளர்கள் ஆகியோர் பங்காற்றி நாட்டின் வருமானத்தைப் பெருக்குகிறார்கள். எனவே தான், இதை நாட்டு வருவாய் என்கிறோம்.
- தனியாக ஒருவருக்கு மட்டும் கிடைக்கும் வருமானத்தைத் தனிநபர் வருமானம் என்று சொல்கிறோம்.
- சிலர் வருமானம் செய்ய இயலாத நிலையில் உள்ளனர். அவர்களுக்கும் உணவு, உடை, வீடு போன்றவற்றை வழஙக வேண்டும். அரசு இவர்களுக்கும் தேவைகளை வழஙகுகிறது. இதனால், அனைவரும் அவரவர்க்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளைப் பெறுகிறார்கள். இதை நாம் பகிர்வு என்கிறோம்.
- 1) உற்பத்தி, 2) நுகர்ச்சி, 3) பகிர்வு ஆகிய மூன்றும் பொருளாதாரத்தின் அடிப்படைகளாக அமைந்துள்ளன.
- மக்கள் சந்தையில் பொருள்களை வாஙகித் தஙகளின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதையே நாம் நுகர்ச்சி என்று குறிப்பிடுகிறோம்.

- தேவைகள் பெருகப்பெருக உற்பத்தி, நுகர்ச்சி, பகிர்வு நடவடிக்கைகளும் பெருகிக்கொண்டே செல்கின்றன். இதையே பொருளாதார வளர்ச்சி என்று அழைக்கிறோம்.
- நமது நாட்டில் பொருளாதாரத்திற்காக அறிஞர் அமர்த்தியாசென் நோபல் பரிசினைப் பெற்றுள்ளார்.

# பொருளாதாரம்

## உற்பத்திக்காரணிகள்

- ஆடம்ஸ்மித் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- ‘‘பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஒரு அறிவியல்’’ என்பது ஆடம்ஸ்மித்தின் வரையறையாகும்.
- ‘‘விருப்பங்களோடும், கிடைப் பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயிலுகின்ற அறிவியல் பொருளியலாகும்’’ என்பது இலயனல் ராபின்ஸ் அவர்களின் வரையறையாகும்.
- உற்பத்தி என்பது மனிதன், வளங்களை மாற்றி அமைத்து மனிதத் தேவைகளை பூர்த்தி செய்யும் முறை ஆகும்.
- பண்டங்கள், பணிகளின் அளவைப் பொறுத்தே ஒரு நாட்டின் நாட்டு வருமானம் அமையும்.
- நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழிலமைப்பு ஆகியவை பண்டங்களும், பணிகளும் உற்பத்தி செய்யப் பயன்படுவதினால் அவை உற்பத்திக் காரணிகள் எனப்படுகின்றன.
- உற்பத்தியாளரின் நோக்கம் குறைந்த செலவில் அதிக லாபம் பெற வேண்டும் என்பதே ஆகும்.
- சாதாரணமாக நிலம் என்றால் பூமியைக் குறிக்கும். பொருளியலில் மனிதனால் உருவாக்கப்படாத அனைத்துப் பொருட்களும் நிலம் என்றழைக்கப்படுகிறது.
- காற்று, சூரிய ஒளி, பூமி, காடுகள், ஆறுகள் மற்றும் கனிம வளங்கள் ஆகிய அனைத்தும் நிலம் எனப்படும்.
- மற்ற காரணிகளிடம் காணப்படாத சில சிறப்பியல்புகளைக் கொண்டது நிலம்.
- நிலமும், உழைப்பும் உண்மைக் காரணிகள்.
- உற்பத்திக் காரணியான உழைப்பிற்க அளிக்கப்படும் வெகுமதி கூலி ஆகும்.
- ஆடம்ஸ்மித் வேலைப் பகுப்பு முறையை தனது ‘‘நாடுகளின் செல்வம்’’ என்ற நூலில் அறிமுகப்படுத்தியுள்ளார். குண்டுசி தயாரிப்பதை உதாரணமாகக் கூறியுள்ளார்.
- ஆடம்ஸ்மித் குண்டுசி தயாரிப்பை, 18 உட்பிரிவுகளாகப் பிரித்து விளக்கியுள்ளார்.
- பொதுவாக மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கும். பொருளியலில் மூலதனம் என்பது செல்வத்தை மேலும் உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்ட செல்வம் ஆகும். இயந்திரங்கள், கருவிகள், இடைப்பொருட்கள், கட்டிடம் தொழிற்சாலையாக இருந்தால் அது மூலதனம் ஆகும். வீட்டு உபயோகத்திற்காக இருந்தால் அத மூலதனம் ஆகாது.
- உற்பத்திக் காரணியான மூலதனத்திற்கு அளிக்கப்படும் வெகுமதி வட்டி ஆகும்.
- மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டிடங்கள், இயந்திரங்கள் மீதான மூலதனம் பருமப்பொருள் மூலதனம்.
- பண வடிவில் அல்லது பண மாற்றுப் பத்திரங்களாக உள்ள முதலீடுகள் பண மூலதனம்
- கல்வி, பயிற்சி மற்றும் உடல் நலத்திற்காக செய்யப்படும் முதலீடு மனித மூலதனம்.
- நிலத்தைப் போலவே மூலதனமும் உழைப்பின்றி இயங்காது.
- மூலதனம் ஆக்கமுடையது ஏனெனில் அது வருவாயைக் கொடுக்கிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

- நிலம், உழைப்பு மற்றும் மூலதனத்தை சரியான அளவில் இணைத்து உற்பத்தி முறையை ஒருங்கிணைத்து இடர்பாடுகளை ஏற்ற ஒரு தொழிலமைப்பு எனப்படுகிறது.
- தொழில் முனைவோர் சமுதாய மாற்றம் காணும் முனைவர் என அழைக்கப்படுகிறார்.
- முதன்மைத்துறை, இரண்டாம் துறை சார்புத்துறை, பண்ணைத் தொழிலாளர்கள் வயலில் வேலை செய்கிறார்கள்.
- தொழிற்சாலை பணியாளர்கள் பண்டங்களை உற்பத்தி செய்கிறார்கள். மருத்துவர்கள், ஆசிரியர்கள், வங்கிப் பணியாளர்கள், போக்குவரத்து துறை தொழிலாளர்கள் தங்கள் பணிகளை செய்கிறார்கள்.
- முதன்மை, இரண்டாம் மற்றும் சார்புத்துறை மூலமாக செயல்படுவது ‘உற்பத்தி சஙகிலி’.
- ஒரு சமுதாயத்தின் முதன்மைத்துறை இயற்கைப் பொருள்களை முதன்மைப் பொருள்களாக மாற்றுகின்றனர். இந்தத் துறை உணவு உற்பத்தி மற்றும் மூலப்பொருள்களைக் கொண்டதால் முதன்மை உற்பத்தி எனப்படுகிறது.
- பெரும்பாலான பொருட்கள், தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களாக விளஙகுகின்றன. விவசாயம், மீன்பிடித்தல், வனத்துறை, சுரஙகத்தொழில், கல் உடைத்தல் போன்ற தொழில்கள் இந்த துறையைச் சார்ந்தவை.
- விவசாயத் தொழில் இந்தியாவின் மிக அதிகமானதாகவும், முக்கியமான தொழிலாகவும் விளஙகுகிறது.
- உற்பத்தியாளர்களின் மூலப்பொருட்களை உபயோகிக்கத்தக்க பொருட்களாக மாற்றுகிறது, உற்பத்தி துறை எனவும் அழைக்கப்படுகிறது. மூலப்பொருட்கள் இறுதி நிலைப் பொருளாகவும் அரை இறுதி நிலைப்பொருளாகவும் மாற்றப்படுகிறது.
- உலோகத் தொழில், உருக்காலைகள், நெசவுத் துறை, இரசாயன மற்றும் பொறியியல் தொழிற்சாலைகள், கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் முதலியவை இந்தத் துறையைச் சார்ந்த தொழில்கள்.
- சார்புத்துறை சேவைத்துறை ஆகும். இந்தத் துறை பொது மக்களுக்கும், வணிகத் துறைக்கும் சேவைகளை வழஙகுகிறது. காப்பீடு, வஙகித்துறை, உடல் நலம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு சில்லரை மற்றும் மொத்த வியாபாரம், கேளிக்கை ஆகியவை இத்துறையைச் சார்ந்தவை.
- பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் அதிக சதவிகித தொழிலாளர்கள் சார்புத்துறையில் தஙகளை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அமெரிக்காவில் 80 சதவிகித மக்கள் சார்புத்துறை உலக நாடுகளில் மிகவும் முக்கியமான துறையாக சார்புத்துறை விளஙகுகிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

**மதிப்பீடு**

**சரியான விடை தருக**

1. பொருளாதாரம் என்பது **சமூக** அறிவியல் ஆகும்.
2. உற்பத்தி காரணிகள் **நான்கு** வகைப்படும்.
3. உழைப்பை **உழைப்பாளரிடம்** இருந்து பிரிக்க முடியாது.
4. பொதுவாக மூலதனம் என்பது **பணம்**
5. தொழில் முனைவோர் எப்போதும் செய்வது **புத்தாக்கப்பணி**
6. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம் **வட்டி**
7. கல்வியில் செய்யப்படும் முதலீடு **மனித** மூலதனம் எனப்படும்.
8. உற்பத்தி காரணியான உழைப்பிற்கு அளிக்கப்படும் வெகுமதி **கூலி** ஆகும்.
9. அமெரிக்காவில் **80%** க்கு அதிகமான உழைப்பாளர்கள் சார்புத்துறையைச் சேர்ந்தவர்கள்.
10. **வேளாண்மை** முதன்மை துறையைச் சார்ந்தது.

## பொருளாதாரம்

## பணம், சேமிப்பு மற்றும் முதலீடு

- பணம் ஒரு இடையீட்டுக் கருவி
- மதிப்பின் அளவுகோல்
- மதிப்பின் நிலைகள்
- எதிர்கால செலுத்துகை
- தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய்மொழி என்னும் பகுதியில் உலகின் மிகப் பெரிய காற்றாலை நிறுவனம் உள்ளது.

# பொருளியல்

## தேவையும் அளிப்பும்

- தேவை என்பது வாஙகும் மக்களிடமிருந்து எழுவதாகும். அவர்கள் நுகர்வோர் எனப்படுவர்.
- அளிப்பு உற்பத்தியாளர்களிடமிருந்து எழுகிறது. ஒரு குறிப்பிட்ட விலையில் விற்பனைக்கு அளிக்கப்படும் பண்டத்தின் அளவே அளிப்பு எனப்படும்.
- ஆல்பிரடு மார்'லின் கூற்றுப்படி நிறையப் பண்டஙகளை விற்க வேண்டுமாயின் விலை குறைவாக இருக்க வேண்டும்.
- அவ்வாறு விலை குறைவாக இருந்தால்தான் அப்பண்டத்தைப் பலரும் வாஙகுவர்.

## சமநிலை விலை

- இக்காலத்தில் அளிப்பு நிலையானது. எனவே தேவை உயர அளிப்பு உயராத காரணத்தால் விலை உயரும்.
- தேவை குறைந்தால் விலை குறையும். எனவே அஙகாடிக்காலத்தில் தேவையே விலையினை தீர்மானிக்கும் காரணியாகும்.
- அளிப்பு சிறிது மட்டுமே மாறுவதால் தேவை உயர்வு ஒரு சிறுவிலை உயர்வையும், (அஙகாடிக் காலத்தை விட குறைவான உயர்வு) தேவைக்குறைவு சிறுவிலைகுறைவையும் (அஙகாடிக் காலத்தை விட குறைவான குறைவு) உண்டாக்குகிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

**திட்டக் குழு:**

- முதல் இந்திய திட்டக்குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு மார்ச் 1950.
- முதன் முதலில் திட்டக்குழுவை உருவாக்கியவர் ஜவஹர்லால் நேரு ஆவார்
- திட்டக்குழு அரசியலமைப்பு படி ஏற்பட்டது அல்ல. இது ஒரு Advisory Body ஆகும்
- திட்டக்குழு முதல் 5-ஆண்டு திட்டத்தை தயாரித்த ஆண்டு 1951.

**திட்டக்குழுவின் அமைப்பு:**

- திட்டக்குழுவின் தலைவர் பிரதம அமைச்சர்.
- இதற்கு ஒரு துணைத் தலைவரும் உண்டு.
- நான்கு பேர் முழுநேர உறுப்பினர்கள்.

  பிற உறுப்பினர்கள்:
  திட்ட அமைச்சர்:
  பாதுகாப்பு அமைச்சர்
  நிதி அமைச்சர்

**திட்டக்குழுவின் நோக்கங்கள் :**

1. தேசிய வருமானம் மற்றும் தனிநபர் வருமானத்தை பெருக்குதல்.
2. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல் மற்றும் தொழில் வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி
3. தொழில் மற்றும் கனரக தொழில்கள் வளர்ச்சியடைதல்.
4. வேலை வாய்ப்பு பெருக்குதல்.
5. செல்வங்களை பகிர்ந்தளிப்பது மற்றும் வருமானங்களில் ஏற்றத்தாழ்வு களைவது.

6. தன்னிறைவு அடைதல்
7. ஏழ்மை அகற்றுதல்
8. பொருளாதார வளர்ச்சி மற்றும் விலைவாசிகளை கட்டுக்குள் வைத்திருத்தல்.

**தற்போதைய திட்டக்குழு அமைப்பு:**
தலைவர்: பிரதமர் டாக்டர். மன்மோகன்சிங் துணைத்தலைவர்: பொருளாதார நிபுணர் Dr. Montek Singh Ahluwalia.
செயலாளர்: Sudha Pillai

**திட்டக் குழுவில் உள்ள பிரிவுகள்:**
1. Agriculture
2. Communication, IT & Information
3. Decentralized planning, Panchayati Raj and Special Area Programme (Including Western Ghat Secretariat)
4. Development Policy & Perspective Planning
5. Environment & Forests (Including Climate Change Cell)
6. Financial Resources.
7. Health, Family Welfare & Nutrition
8. Housing and Urban Affairs (including Home Affairs Cell)
9. Human Resources Development
10. Industries
11. Infrastructure
12. International Economics
13. International Relations Cell
14. Labour, Employment & Manpower
15. Minerals
16. Minority Cell
17. Plan Coordination and Management
18. Power & Energy
19. Project Appraisal & Management
20. Rural Development
21. Science & Technology
22. Social Justice and Social Welfare
23. Socio-Economic Research
24. State Plans (Including Island Development Authority Cell)
25. Transport and Tourism
26. Village and Small Enterprises
27. Voluntary Action Cell
28. Water Resources Division
29. Women & Child Development Programme
30. Evaluation Organization.

NATRAJ
INSTITUTE OF TNPSC

National Knowledge Commission:
**தேசிய அறிவுசார் ஆணையம்:**
- திட்டக் குழுவின் கீழ் இது அமைந்துள்ளது
- இது 8.6.2005ல் துவக்கப்பட்டது.

**தலைவர் மற்றும் உறுப்பினர்கள்:**
1. சாம்பிட்ரோடா
2. டாக்டர் அசோக் கங்குலி
3. பேராசிரியர் பி. பலராம்
4. டாக்டர் ஜெயந்தி கோஷ்
5. தீபக் நாயர்
6. நந்தன் நிலேகானி
7. சுஜாதா ராமதுரை

**நோக்குக் கூறுகள்:**
- 21ஆம் நூற்றாண்டில் அறிவு சவால்களைச் சந்திக்கவும், சிறந்த மண்டலத்தை உருவாக்கவும் இந்தியா அறிவு போன்ற துறைகளில் முன்னேறிப் போட்டியிட வேண்டும்.
- S & T ஆராய்ச்சி கூடங்களில் அறிவு வளர்த்தல்
- அறிவு, சொத்துரிமை சார்ந்த வேளாண்மை நிர்வாகங்களை வளர்த்தல்
- தோட்டக்கலையிலும், தொழிற்சாலைகளிலும் அறிவை வளர்த்தல்
- அரசை ஒரு சிறப்பான, தெளிவான பொறுப்புள்ளதாக உருவாக்க முடிந்த அளவு அறிவை பயன்படுத்துதல் மற்றும் குடிமக்களுக்கு சேவை செய்து அறிவை பகிர்ந்து சமூகத்தின் லாபத்தை கூட்டுதல்.

**குறிக்கோள்:**
- அறிவு அடிப்படையிலான சமூகத்தை உருவாக்குவது.

1. தற்போதைய அறிவு மற்றும் பள்ளிக் கல்வியில் வளர்ச்சியைக் கொண்டு வருதல்.
2. புதிய அறிவுக் கொள்கையை உருவாக்குதல்.

- 2009ல் துவங்கப்பட்ட திட்டக் குழுவின் கீழ் இயங்கும் இப் பிரிவு AADHAAR (இதன் பொருள் foundation அல்லது support ஆகும்) அட்டையை வழங்குகிறது. இதன் தலைவர் கேபினட் அமைச்சர் நிலையில் இருப்பார். இதன் முதல் மற்றும் தற்போதைய தலைவர் Nandan Nilekani ஆவார்.
- இதற்கான தொழில்நுட்ப அலுவலகம் பெங்களுரில் உள்ளது.
- AADHAAR: அடையாள அட்டை முதன் முதலில் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள தேம்பிளி என்ற கிராமத்தில் 29.9.2010 அன்று பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தி ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் படி ஒவ்வொரு குடிமகனுக்கும் மைய அரசினால் 12 இலக்க எண் வழங்கப்படும்.

**5 ஆண்டு திட்டங்கள்**

- 1 வது திட்டம் : வேளாண்மை
- 2 வது திட்டம் : தொழிற்சாலைகள்
- 3 வது திட்டம் : உள்கட்டமைப்பு வசதிகள்
- 4 வது திட்டம் : Area Development
- 5 வது திட்டம் : Economic Empowerment of weaker sections.
- 6 வது திட்டம் : ஏழ்மையை அகற்றுதல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.
- 7 வது திட்டம் : உணவு, வேலை, உற்பத்தி
- 8 வது திட்டம் : மனித வள மேம்பாடு
- 9 வது திட்டம் : Growth equity and social justice
- 10 வது திட்டம் : தனி நபர் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் உயர்த்துதல்
- 11 வது திட்டம் : Inclusive Growth
- 12 வது திட்டம் : Faster, Sustainable and More Inclusive Growth.

**முதல் 5 ஆண்டு திட்டம்:**
**திட்டக்காலம் 1.4.1951 முதல் 31.3.1956 வரை**

- முதன்மை குறிக்கோள் - வேளாண்மை பாசனவசதிகளை மற்றும் மின் உற்பத்திக்கு முதன்மை கொடுக்கப்பட்டது.
- இந்தியாவின் சுதந்திரப் பிரிவினை மற்றும் உலகப் போரினால் ஏற்பட்ட பொருளாதார தாழ்வுகளை நீக்குதல்.
- சரிசம வளர்ச்சி அதன் மூலம் தேசிய வருமானத்தை உயர்த்துதல் மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் அடிப்படையில் முதல் ஐந்து ஆண்டு திட்டம்.
- Harrod-Damer என்ற அறிஞரின் மாதிரித் திட்டம் பின்பற்றப்பட்டது.
- மேட்டூர் அணை, பக்ரா நங்கல் மற்றும் ஹிராகுட் ஆகிய அணைகள் கட்டப்பட்டது.
- 5 இடங்களில் Indian Institute of Technology உருவாக்கப்பட்டது.
- பல்கலைக் கழக மான்யக் குழு உருவாக்கப்பட்டது.

**இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் :**
**திட்டக் காலம் 1.4.1956 முதல் 31.3.1961 வரை**

- நாடு சோசலிஷத்தை நோக்கி நடைபோட வைத்த திட்டம்.
- இத்திட்டத்தின் முன் வரைவு பேராசிரியர் Mahalanobis என்பவரால் தயாரிக்கப்பட்டது.
- பொதுத் துறைகள் மூலம் கனரக தொழிற்சாலைகள் மற்றும் இரசாயன தொழிற்சாலைகள் உருவாக்குவது.
- மிகுந்த அளவில் வேலை வாய்ப்பு பெருக்குதல்.
- செல்வங்களை பகிர்ந்தளித்தல் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் செயல்பட்டது.
- நட்பு நாடுகளிலிருந்து கடன் பெற்று பிலாய், துர்க்காபூர் ரூர்க்கேலா என்ற மூன்று இடங்களில் இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.
- 1.4.1957ல் Decimal Coinage முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1957ல் ஹோமி பாபா தலைமையில் Atomic Energy Commission உருவாக்கப்பட்டது.
- Intensive Agricultural Development Programmed 1960ல் உருவாக்கப்பட்டது. இத் திட்டம் முதன் முதலில் 7 இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழகத்தில் தஞ்சாவூரில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி குறி 4.5% யினை விட வளர்ச்சி விகிதம் 4.21% என குறைவாக இருந்தது.

**மூன்றாவது ஐந்தாண்டு திட்டம்:**
**திட்டக் காலம – 1.4.1961 முதல் 31.3.1966 வரை**

- தற்சார்பும் தன்னாக்கத்திறனும் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவது மூன்றாம் திட்டத்தின் குறிக்கோளாகும்.
- சமஉடைமை சமுதாயம் உருவாக்கவேண்டுமென்ற எண்ணம் வலுப்பெற்றதால், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வாய்ப்பளிப்பதும குறிக்கோளாகக் கொள்ளப்பட்டது.
- முதல் முறையாக வருங்காலங்களில் திட்டங்களின் நிதியாக்கத்தல் அயல்நாட்டு உதவியின் பங்கினைக் குறைக்க ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டுமென்ற கருத்து உருவாகியது.
- இத்திட்டம் 1962 இந்தியா் - சீனப்போர் மற்றும் 1965-ல் இந்திய – பாகிஸ்தான் போர் என இரண்டு போரினால் பாதிக்கப்பட்டது.
- உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்னும் உணவு பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டம் என்ற குறிக்கோளின் இலட்சியம் எட்டப்படவில்லை.
- சிமெண்ட் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டது.
- ஆரம்ப கல்வி நிலையங்கள் துவக்கப்பட்டன.
- நாட்டில் பணவீக்கத்தையும் தோற்றுவித்தன. சீன ஆக்கிரமிப்பின் விளைவாக நமது பாதுகாப்பு செலவு உயர்ந்தது. முன்னேற்ற திட்டங்கள் பாதிக்கப்பட்டன. திட்டம் பாதுகாப்பு சார்ந்த திட்டமாக மறுஉருப்பெற்றது.

**ஆண்டுத் திட்டங்கள்:**

- 31.3.1966 உடன் முடிவடைந்த மூன்றாவது 5 ஆண்டு திட்டம் தோல்வி அடைந்ததால் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட தேக்க நிலையினால் ஆண்டு திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டது.

NATRAJ INSTITUTE OF TNPSC

- பணவீக்கமில்லாத நியாயமான வளர்ச்சி வீதங்களைப் பெற்று வளர்ந்து வரும் சமுதாயத்தை வலுப்படுத்துவது இந்த ஆண்டுத் திட்டங்களின் நோக்கமாகும்.
- மூன்று ஆண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டது.
  1.4.1966 – 31.3.1967
  1.4.1967 – 31.3.1968
  1.4.1968 – 31.3.1969
- 1966-ம் ஆண்டு பண மதிப்பு குறைக்கப்பட்டது.
- ஆண்டு திட்டங்களை Plan Holidays என்றும் கூறுவர்.
- முதலிரு ஆண்டுகள் விரும்புமளவு திட்டச் செயல்பாடு நிறைவாக இல்லாமலிருப்பினும் மூன்றாவது ஆண்டு சமுதாயத்தை உய்யச் செய்து நான்காம் திட்டத்திற்கு வழி வகுத்தது.
- 1967ல் 10 அம்ச திட்டம் உருவாக்கப்பட்டது

**நான்காவது ஐந்தாண்டு திட்டம்:**
**திட்டக் காலம் - 1.4.1969 முதல் 31.3.1974 வரை**

- சமத்துவமும் சமூகநீதி காத்தலும் கூடிய பொருளாதார முன்னேற்றத்தை வளரச் செய்வது நான்காம் திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தியாவின் திட்ட கால வரலாற்றில் முதன்முறையாக நலிந்த பிரிவினருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
  செல்வக்குவிப்பு தடுக்கப்பட்டு வருமானம் சமமாகப் பங்கிடப்பட்டு, ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவது முக்கியமென கோடிட்டுக் காட்டப்பட்டது.
- 1971 தேர்தலை வறுமையை ஒழிப்போம் (Garibi Hatao) என்ற பெரு முழக்கத்துடன் இந்திரா காந்தி சந்தித்து வெற்றி பெற்றார்.

**ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் :**
**திட்டகாலம் - 1.4.1974 முதல் 31.3.1979 வரை முதன்மை குறிக்கோள்.**

- வறுமை ஒழித்தல் மற்றும் தன்னிறைவு அடைதல்.
- வறுமையை ஒழிப்போம் (Garibi Hatao) என்ற பெரு முழக்கத்துடன் இந்திரா காந்தி காலத்தில் ஐந்தாம் திட்டம் தொடங்கியது.
- ஜனதா அரசாங்கம் ஆட்சி பொறுப்பேற்றதும் இத்திட்டம் முடிவடைய ஓராண்டிற்கு முன் இத்திட்டத்தை நிறுத்திவிட்டது.
- 1.7.1975 ஆம் ஆண்டு 20 அம்ச திட்டம் அறிவிக்கப்பட்டது.

**Basic Objective:** to improve the quality of life of the poor and the under-privileged population of the country.

NATRAJ INSTITUTE OF TNPSC

**20 அம்ச திட்டங்கள் :**

Attack on Rural Poverty
Strategy for Rainfed Agriculture
Better Use of Irrigation Water
Bigger Harvest
Enforcement of Land Reforms
Special Programmes for Rural Labour
Clean Drinking Water
Health for All
Two Child Norm
Expansion of Education
Justice to Scheduled Castes & Scheduled Tribes
Equality for Women
New Opportunities for Youth
Housing for the People
Improvement of Slums
New Strategy for forestry
Protection of the Environment
Concern for the Consumer
Energy for the Villages
A Responsive Administration

**பிற குறிக்கோள்கள்**

- வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சியில் தன்னிறைவு அடைதல்.
- விலைவாசிகளை கட்டுப்படுத்துதல்
- குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை செயல்படுத்துதல்
- ஏற்றுமதிகளை அதிகரித்தல்
- வேலை வாய்ப்புகளை பெருக்குதல்
- மண்டலங்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகளை சரி செய்தல்.
- பொதுத் துறைகளை ஊக்குவித்தல்
- சமுதாயத்தில் பொருளாதாரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல்.
- உற்பத்தியுடன் கூடிய வேலைவாய்ப்பு
- குறைந்தபட்ச தேவைகளான முதன்மைக் கல்வி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி, ஊட்டச்சத்து உணவு, கிராம சாலைகள், மின்சார வசதி, வீடற்ற தொழிலாளர்களுக்கு பட்டா நிலம் வழங்குதல்.
- நியாயமான கூலி
- மண்டலங்களுக்கிடையேலான சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்குதல்.
- 1976 ஆம் ஆண்டு நிதி அமைச்சர் உரையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஆறாவது ஐந்தாண்டு திட்டம் :**

**திட்ட காலம் 1.4.1980 முதல் 31.3.1985 வரை**

- மைய அரசில் ஆட்சிக்கு வந்த ஜனதா அரசாங்கம் 5-வது திட்டத்தை குறிப்பிட்ட 5 ஆண்டு காலத்திற்கு முன்பாக 4-வது ஆண்டிலேயே நிறுத்தி விட்டது. அதன்படி 5வது திட்ட காலம் 1978-ல் முடிக்கப்பட்டது.
- 1.4.1978 முதல் Rolling Plan எனப்படும் திட்டத்தை ஜனதா அரசாங்கம் துவக்கியது.
- இத்திட்டம் ஓராண்டு காலம் மட்டுமே நடைபெற்றது.
- அதன்படி இத்திட்டம் 30.3.1979 வரை நடைபெற்றது பின் வந்த காங்கிரஸ் அரசாங்கம் இத்திட்டத்தை நிறுத்திவிட்டு ஆறாவது ஐந்தாண்டு திட்டமாக மாற்றப்பட்டது.
- அதன்படி இத்திட்டம் 1.4.1980 முதல் 31.3.1985 வரை நடைபெற்றது.
- இந்த 5 ஆண்டு திட்டத்தின் முக்கிய நோக்கம் வறுமை மற்றும் வேலையின்மையை ஒழித்தல் ஆகும்.
- இத்திட்டத்தில் சக்திக்கு (Energy) அதிக நிதி ஒதுக்கப்பட்டது.
- பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைதல், உற்பத்தி பெருக்குதல் போன்றவற்றிற்கான ஆதாரங்களை பயன்படுத்துதல், பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பங்களில் தன்னிறைவுடன் கூடிய நவீனமாக்குதல்.
- வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை குறைத்தல்.
- குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் மக்களின் வாழ்க்கை தரம உயர்த்துதல்.
- வட்டார வேறுபாடுகளை தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் அகற்றுதல்.
- மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்.
- வளர்ச்சி பணியில் அனைத்து தர மக்களையும் ஈடுபடுத்துதல்.
- திட்ட கால இறுதியில் 64% சிற்றூர்கள் மின்சார வசதியைப் பெற்றன.

**ஏழாவது ஐந்தாண்டு திட்டம் :**

**திட்டக் காலம் 1.4.1985 முதல் 31.3.1990 வரை**

- இத்திட்டக் காலத்தில் வளர்ச்சி விகிதம் 5.00 சதவீதம் என திட்டமிடப்பட்டது. ஆனால் GDP Gross Domestic Product வளர்ச்சி விகிதம் 5.6 சதவீதமாக உயர்ந்தது.

**முக்கிய குறிக்கோள்கள்**

- உணவு உற்பத்தியில் அதிக வளர்ச்சி
- வேலை வாய்ப்பு பெருக்குதல்
- தன்னிறைவு வளர்ச்சி
- நவீனப்படுத்துதல்
- சமூக நீதி

**பிற முக்கிய குறிக்கோள்**

- தன்னிறைவு கூடிய பொருளாதார வளர்ச்சி
- சமூக நீதியுடன் கூடிய சமுதாய அமைப்பு
- சமுதாய பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல்.
- வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்.
- ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் மற்றும் இறக்குமதி பொருள்களுக்கு மாற்று ஏற்பாடு.
- சுற்றுப் புற சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு
- இத்திட்டக் காலத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு திட்டம் ஆகியவை இணைந்து Jawahar Rozgar Yojana திட்டம் துவங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் முதல் 3 ஆண்டுகளில் திட்டக் குறிக்கோளை எய்திட முடியவில்லை. அதற்கு காரணம் மோசமான தட்பவெப்பநிலைகளாகும். ஆனால் பிந்திய ஆண்டுகளில் தட்பவெப்ப நிலை சீரடைந்தது. உணவுப் பொருள் உற்பத்திக்கான சிறப்புப் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இலக்குகள் எய்தப்பெற்றன என்ற வகையில் ஏழாம் திட்டம் வெற்றியடைந்தது என்றே சொல்லலாம். ஏழாம் திட்டம் 1990இல் முடிவுற்றது. அடுத்த இரண்டு ஆண்டுகள் எட்டாம் திட்டத்தின் முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் இருந்தன. எட்டாம் திட்டம் 1992ல் முழு உருப்பெற்றது.

**ஆண்டுத் திட்டங்கள்**

- 1990-91 மற்றும் 1991-92 ஆண்டிற்கு ஆண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டது.
- இத்திட்டக் காலத்தில் சமூக மாற்றம் மற்றும் வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- 1991-92 ஆம் ஆண்டு காலத்தில் இந்தியா உலகச் சந்தையில் நுழையத் தொடங்கியது.

**எட்டாவது ஐந்தாண்டு திட்டம் :**

**திட்டக் காலம் 1.4.1992 முதல் 31.3.1997 வரை**

- இத்திட்டக் காலத்தில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 5.6 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அது 6.8 சதவீதமாக வளர்ச்சியடைந்தது.
- இத்திட்டம் துவக்க காலத்தில் Balance of Payments மற்றும் Inflation Position மோசமான நிலையில் இருந்தமையால் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது.

**இத்திட்டத்தின் குறிக்கோள்கள்**

- தேவையான வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.
- மக்கள் தொகை விகிதத்தை கட்டுப்படுத்துதல்
- அடிப்படை கல்வி அளித்தல்.
- அடிப்படை சுகாதார வளர்ச்சி மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.
- நாட்டின் உள் கூட்டமைப்பு வசதிகளான போக்குவரத்து, தொலை தொடர்பு, பாசனம், சக்தி போன்றவை வலிமையுடன் கூடிய வளர்ச்சி ஆகியவை ஆகும்.

**இத்திட்டத்தின் செயல்பாடுகள்**

1. Faster Economic Growth
2. Faster Growth of Manufacturing Sector and Agriculture and Allied Sector.

NATRAJ INSTITUTE OF TNPSC

3. Significant growth rates in exports and imports, improvement in trade and current account deficit and significant reduction in the central govt. fiscal deficit.

**இத்திட்டத்தை பாதித்த காரணிகள்**

1. Lack of mobilisation of adequate resources due to deterioration in the balance of current revenues.
2. Erosion in the contribution of State Electricity Boards and Stare Road Transport Corporations.
3. Negative opening balance.
4. Mounting non-plan expenditure and short falls in the collection of small savings.

**ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம் :**

**திட்டக் காலம் 1.4.1997 முதல் 31.3.2002 வரை**

- இத்திட்டக் காலத்தில் இந்திய சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததால் பொன்விழா கொண்டாடப்பட்டது.
- தனியார் மயமாக்கல் முயற்சிகள் எடுக்கப்பட்டது.
- ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்
- அடிப்படை வசதி பெருக்குதல், வேளாண்மை மூலதனம் உயர்த்துதல், மாகாண வேற்றுமை அகற்றுதல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு 9வது ஐந்தாண்டு திட்டம் உருவாக்கப்பட்டது.
- இத்திட்டம் Growth with Equality and Justice என்ற அடிப்படையுடன் உருவாக்கப்பட்டது.

**இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்**

1. கிராம புறங்களில் வேலை வாய்ப்பு பெருக்குதல் மற்றும் கிராமங்களில் நிலவும் வறுமையை ஒழித்தல்.
2. விலைவாசியை கட்டுப்பாடுடன் வைத்திருத்தல்.
3. சுத்தமான குடிநீர் மற்றும் அடிப்படை சுகாதார வசதி அடிப்படை கல்வி போன்றவை வழங்குதல்.
4. மக்கள் தொகை கட்டுப்படுத்துதல்.
5. பெண்கள் வலிமை மற்றும் சமுதாயத்தில் பின் தங்கியுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பின் தங்கிய மக்களை முன்னேற்றம் அடையச் செய்தல்.
6. ஊராட்சிகள், கூட்டுறவு மற்றும தன்னார்வ அமைப்புகளில் அனைத்து மக்களையும் பங்கேற்கச் செய்தல் ஆகும்.
7. இத் திட்டக் காலத்தில் 6 முதல் 14 வயது வரை உட்பட்ட அனைத்த குழந்தைகளுக்கும் ஆரம்ப கல்வி வழங்கும் நோக்கத்தொடு சர்வ சிக்ஷா அபியான் என்ற திட்டம் கொண்ட வரப்பட்டது. (இதன் ஒரு கட்டமாக பெண்கள் கல்விக்காக Kasturba Gandhi Balika Vidalaya Yojana என்ற திட்டம் 2004 இல் கொண்டு வரப்பட்டது)

**பத்தாவது ஐந்தாண்டு திட்டம்**

**திட்டக் காலம் 1.4.2002 முதல் 31.3.2007 வரை**

- இத்திட்டக் காலத்தில் சராசரி தனிநபர் வருமானம் வரும் பத்தாண்டுகளில் இரு மடங்காக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**முக்கிய குறிக்கோள்கள்**

- வறுமை கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களில் 20 சதவீதத்தை 2007க்குள் அடிப்படை கல்வி படித்தவர் விகிதத்தை 72 சதவீதமாக 2007-க்குள் உயர்த்துதல் போன்றவை ஆகும்.

**11வது ஐந்தாண்டு திட்டம்**

**திட்டக் காலம் 1.4.2007 முதல் 31.3.2012 வரை வருமானம் மற்றும் வறுமை:**

- இத் திட்டக்காலத்தில் மொத்த உள் நாட்டு உற்பத்தியை 8 முதல் 10 சதவீதம் பெருக்குவது என்றும் 10 சதவீத உற்பத்தியை நிலைப் பெறச் செய்து தலா வருமானத்தை 12வது ஐந்தாண்டு திட்டகாலமான 2016 – 2017த்தில இரட்டிப்பாக்குவது.
- வேளான்மை உற்பத்தியை ஆண்டிற்கு 4 சதவீதம் பெருக்குவது.
- 70 மில்லியன் புதிய வேலை வாய்ப்பை உருவாக்குதல்.
- படித்த இளைஞர்களுக்கான வேலையின்மையை 5 சதவீதத்திற்கு குறைத்தல்.
- வறுமைக்கான புள்ளிவிவர எண்ணில் 10 சதவீதம் குறைத்தல்.
- தொழில் நுட்பம் இல்லாத தொழிலாளர்களின் கூலியை 20 சதவீதம் உயர்த்துதல்.

**கல்வி:**

- ஆரம்ப கல்வி நிலையத்திற்கு மேல் செல்லாத குழந்தை விகிதம் 52.2% 2011-12 க்குள் 20% சதவீதம் குறைத்தல்.
- 7 வயதிற்கு மேற்பட்ட கல்வி கற்கும் குழந்தைகளின் விகிதத்தை 85% த்திற்கு கொண்டு வருதல்.

**சுகாதாரம் :**

- குழந்தைகள் இறப்பு விகிதத்தை 28 ஆகவும் பிரசவத்தின் மீதான இறப்பினை 1000 க்கு 1 எனவும குறைத்தல்.
- மொத்த கருவூரு விகிதத்தை 2.1 ஆக குறைத்தல்.
- 2009க்குள் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்குதல்
- ஊட்டச் சத்து இல்லாமையால் பாதிக்கப்படும் குழந்தைகள் விகிதத்தை 50 சதவீதமாக குறைத்தல்.
- இரத்த சோகை ஏற்படும் பெண்கள் மற்றும் மகளிர் விகிதத்தை 50 சதவீதம் குறைத்தல்.

**மகளிர் மற்றும் குழந்தைகள் :**

- ஆண் பெண் பால் விகிதத்தை 2011-12ற்குள் 935 என உயர்த்துதல் மற்றும் 2016-2017க்குள் 950 என உயர்த்துதல்.
- நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளில் 33 சதவீத ஒதுக்கீட்டினை உறுதி செய்தல்.

**உள் கட்டமைப்பு :**

- அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி செய்து தருதல்.
- 500 மக்கள் தொகை உடைய மலை வாழ் மக்கள் உள்ள கிராமங்கள் அல்லது 1000 மக்கள் தொகை உடைய கிராமங்களுக்கு 2009ற்குள் சாலை வசதி செய்து தருதல்.
- நவம்பர் 2007க்குள் அனைத்து கிராமங்களுக்கும் தொலைப் பேசி வசதி செய்து தருதல் மற்றும் 2012க்குள் அனைத்து கிராமங்களுக்கும் இன்டர்நெட் வசதி செய்து தருதல்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**சுற்றுப்புறச் சூழல் :**

- வனம் மற்றும் மரங்கள் 5 சதவீதம் உயர்த்துதல்
- உலக சுகாதார நிலையம் நிர்ணயித்தவாறு தூய்மையான காற்று அளித்தல்.

**12வது ஐந்தாண்டு திட்டம் :**
**திட்டக் காலம் 1.4.2012 முதல் 31.3.2017 வரை**

இந்தியாவின் வரவு செலவு கணக்கு

- இந்திய அரசியலமைப்பில் பிரிவு 112-ல் இந்திய ஆண்டு நிதி நிலை என்ற வார்த்தை காணப்படுகிறது.
- Budget என்ற வார்த்தை காணப்படுவதில்லை
- சுதந்திர இந்தியாவில் முதல் நிலை அறிக்கை ஆர்.கே. சண்முகம் செட்டியார் என்பவர் (1947-48) சமர்பித்தார்.
- இந்தியாவின் நிதி ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 31 மார்ச்சு வரை ஆகும். இது அய்ரோப்பிய நாடுகளின் நிதியாண்டு ஆகும்.
- பிரான்சு நாட்டின் நிதியாண்டு 1 சனவரி முதல் 31 டிசம்பர் வரை ஆகும்.
- அமெரிக்காவின் நிதியாண்டு 1 ஜுலை முதல் ஜுன் வரை ஆகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC